GLOBAL
PLURALISM
MONITOR

# இலங்கை

**குளோபல் புளூரலிசம் மொனிட்டர்: இலங்கை**
வழங்குவோர் உலகளாவிய பன்மைவாத மையம்

© 2023 வழங்குவோர் உலகளாவிய பன்மைவாத மையம்

கிரியேட்டிவ் காமன்ஸ் உரிப்பண்பு 4.0 சர்வதேச உரிமத்தின் கீழ் வெளியிடப்பட்டது.

**வெளியீட்டாளர்**
உலகளாவிய பன்மைவாத மையம்
330 சசெக்ஸ் டிரைவ்
ஒட்டாவா, ஒண்டாரியோ, K1N 0C7
கனடா

**தமிழ் மொழிபெயர்ப்பு**
Indira Priyadarshini
Mohamed Fiqhri

**மேலட்டை மற்றும் உட்புற வடிவமைப்பு**
Soapbox
designbysoapbox.com

**அச்சுக்கோப்பு**
Em Dash design
emdashdesign.ca

pluralism.ca
@GlobalPluralism

உலகளாவிய விவகாரங்கள் கனடா (GAC), சர்வதேச மேம்பாட்டு ஆராய்ச்சி மையம், ஒட்டாவா, கனடா ஆகியவற்றின் நிதி ஆதரவுடன் இப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துகள், GAC, அல்லது IDRC மற்றும் அதன் ஆளுநர் சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை.

IDRC · CRDI
International Development Research Centre
Centre de recherches pour le développement international

Canada

# இத்தொடரைப் பற்றி

Global Pluralism Monitor அமைப்பின் மதிப்பீட்டுக் கட்டமைப்பைப் பயன்படுத்தி இந்த அறிக்கை உருவாக்கப்பட்டுள்ளது. Global Pluralism Monitor அமைப்பின் நாடு பற்றிய மதிப்பீடுகள், நாட்டுப் பிரசைகளான அல்லது நாடு பற்றிக் குறிப்பிடத்தக்க அனுபவம் கொண்டவர்களான, மற்றும் பல்வகைமைமிக்க விடயங்களில் நிபுணர்களான ஒரு நிபுணர் குழுவால் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த அறிக்கையில் காட்டப்பட்டுள்ள மதிப்பெண்கள், அனைத்து நாடுகளுக்கும் ஒரேவிதமாகப் பிரயோகிக்கத்தக்கதான பொதுவான அளவீடு அல்லது தரமிடல் முறைமையின் ஒரு பகுதியாக வியாக்கியானப்படுத்தப்படலாகாது மாறாக, மதிப்பெண்கள் ஒரு பன்மைத்துவ இலட்சியத்தினை நோக்கிய (அல்லது அதிலிருந்து விலகிச் செல்கின்ற) நாட்டின் முன்னேற்றத்திற்கான சூழமைவுக்கெனத் தனித்துவமான ஓர் அடையாளமாகவே புரிந்துகொள்ளப்பட வேண்டும். உதாரணமாக, மோதலுக்குப் பின்னர் இப்போதும் வன்முறையை அனுபவித்து வருகின்ற ஒரு சமூகம் – ஆனால் ஒப்பீட்டளவில் மோதலின் உச்சக்கட்டத்தின் போதான நிலையினை விடக் குறைவான மோதல் நிலவும் சமூகத்தில்–ஆனால் அண்மைக் காலங்களில் வெறுப்புக் குற்றங்களில் அதிகரிப்பினைக் கண்டுள்ள ஒரு சமூகத்தினை ஒத்த மதிப்பெண்களைக் கொண்டிருக்கலாம். பன்மைவாதத்தின் அதீத சூழமைவு சார்ந்த இயல்பினைப் பிரதிபலிப்பதற்காக, Global Pluralism Monitor நாடுகளின் சொந்த விதிகளை அடிப்படையாகக் கொண்டு அவற்றினை மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அனைத்து சமூகங்களும் கட்டாயம் பின்பற்ற வேண்டிய வெற்றிக்கான ஒரு தனி வழி என எதுவும் இல்லை.

Monitor அமைப்பு மற்றும் அதன் வழிமுறைகள் பற்றிய கூடுதல் தகவல்களுக்கு, எங்கள் pluralism.ca/monitor இணையதளத்தைப் பாருங்கள்.

# நன்றியுரைத்தல்

உலகளாவிய பன்மைவாதக் கண்காணிப்பாளருக்கு அளித்த ஆதரவுக்காகவும் பங்களிப்புக்காகவும் உலகளாவிய பன்மைவாத மையம் பின்வரும் தனிநபர்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறது: அன்னா-மரியா பிரோ, கினா கொசெண்டினோ, அலிசன் ஹாரல், நீரஜா கோபால் ஜயல், வில் கிம்லிக்கா, ஹான் ஆன் லீ, கோரின் லெனாக்ஸ், தவிந்தர் நிஜவான், ஈடம் செலர்மே, ஆஷாத் சென்டோங்கோ, ராச்சல் சீடெர், ஃப்ரான்சிஸ் ஸ்டூவர்ட் மற்றும் ஸ்டீஃபன் உல்ஃப்.

# Global Pluralism Monitor பற்றிய அறிமுகம்

**பன்மைவாதம் என்றால் என்ன?**

**சமூகப் பல்வகைமை என்பது ஒரு பொதுவான உண்மையாகும். பல்வகைமைக்குச் சமூகங்கள் எவ்வாறு பதிற்செயற்பாடாற்றுகின்றன என்பது அந்தந்த சமூகங்களின் தெரிவாக உள்ளது. பன்மைவாதம் என்பது பல்வகைமைக்கான சாதகமான பதிற்செயற்பாடாகும். பல்வகைமைக்கான மரியாதையில் வேர்கொண்டுள்ள முடிவுகளையும் நடவடிக்கைகளையும் தனிநபர்கள் என்ற ரீதியிலும் சமூகங்கள் என்ற ரீதியிலும் எடுப்பதையே பன்மைவாதம் சம்பந்தப்படுத்துகின்றது.**

## பல்வகைமைமிக்க சமூகங்களில் உள்ளடக்கல் மற்றும் விலக்கிவைப்பினை அளவிடுதல்

சமூகத்தில் வேற்றுமைகளுடன் வாழ்வதும் தொடர்புகொள்வதும் அனைத்துச் சமூகங்களும் எதிர்கொள்ளும் ஒரு சவாலாகும். சமத்துவமின்மை, ஓரங்கட்டப்படுதல் மற்றும் பிரிவினைகள் அதிகரிக்கும்போது, அமைதியும் உள்ளடக்கும் தன்மையும் மிக்க சமூகங்களை உருவாக்குவது அவசரத் தேவையாகக் காணப்படுகின்றது.

மத மற்றும் இனக் கலாச்சாரச் சிறுபான்மையினர், பழங்குடியினக் குழுக்கள், பெண்கள் மற்றும் சிறுமிகள் உள்ளிட்ட பாதிப்புறுநிலையிலுள்ள குழுவினர் தொடர்ச்சியான அரசியல், பொருளாதார மற்றும் சமூக விலக்கிவைப்புக்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். மிகவும் நேர்மையான, அமைதியான மற்றும் வளமிக்க சமூகங்களைப் போஷிப்பதற்கு இந்தப் விலக்கிவைப்புக்களுக்குத் தீர்வு காணப்பட வேண்டும். அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுப்பதற்கு கொள்கை வகுப்போர்களும் அதைக் நடைமுறைப்படுத்துனர்களும் இந்தப் பிரச்சினைகளைப் பற்றிய பூரணமான புரிதலைக் கொண்டிருக்க வேண்டும்.

உலகளாவிய பன்மைவாத மையத்தால் தொடங்கப்பட்ட Global Pluralism Monitor உலக நாடுகளில் பன்மைவாதத்தின் நிலையை மதிப்பிடக்கூடிய ஓர் அளவீட்டுக் கருவியாக விளங்குகிறது. அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாச்சாரக் களங்களில், விலக்கிவைப்புக்கான மூலகாரணங்களைக் கண்டறிந்து அவற்றுக்குத் தீர்வு காணுமாறும், பன்மைவாதத்திற்கான வாய்ப்புகளை மேம்படுத்துமாறு தீர்மானம் வகுப்போருக்கு Monitor அமைப்பு அறிவித்து வருகின்றது.

அரசாங்கங்கள், சிவில் சமூகம் மற்றும் தனியார் துறையால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளை மேம்படுத்துகிறது

Monitor பின்வருவனவற்றினை இயலுமாக்குகின்றது:

- இடைவெளிப் பகுப்பாய்வு: சமூகங்களில் பன்மைவாதத்தின் நிலையை மதிப்பிடுதல் மற்றும் விலக்கிவைப்புக்குத் தீர்வு காண்பதற்கு இடையீடு தேவைப்படும் பரப்புக்களை அடையாளம் காணல்;
- போக்குகள் பற்றிய பகுப்பாய்வு: பாரிய உள்ளடக்கும் தன்மை அல்லது விலக்கிவைப்புத் தொடர்பில் காலப்போக்கில் ஒரு நாட்டின் பாதையின் தடமறிதல்;
- குறுக்குவெட்டுப் பகுப்பாய்வு: உள்ளடக்கல் மற்றும் விலக்கிவைப்பு ஆகியவற்றின் குழுக்களுக்கிடையிலான இயங்கியலை கருத்தில் கொண்டு சமூகங்களில் பெண்கள் நடத்தப்படுவதை மதிப்பிடுதல்;
- முரண்பாட்டைத் தடுத்தல்: நெருக்கடி தோன்றும் நிலை அண்மிக்க முன்னதாக புறக்கணித்தல் மற்றும் விலக்கிவைப்புக்கான அறிகுறிகளை அடையாளம் காணல்;

- சிறந்த நடைமுறைகள்: இன்னும் மேம்படுத்தக்கூடிய, அல்லது ஏனைய சூழமைவுகளுக்குப் படிப்பினையாக இருக்கக்கூடிய சாதகமான தாக்கத்தினைக் கொண்டுள்ள முன்னெடுப்புக்களை அடையாளம் காணல்

பல்வகைமைக்கான நிறுவன ரீதியான பதிற்செயற்பாடு மற்றும் கலாசார ரீதியான பதிற்செயற்பாடு ஆகிய இரண்டிலும் வேரூன்றியுள்ள அணுகுமுறை

பன்முகத்தன்மை தொடர்பான இந்த அமைப்பின் அணுகுமுறையானது, நிறுவனங்களிலும் (வன்பொருள்) மற்றும் கலாசாரச் செயன்முறைகளிலும் இவை இரண்டிற்கும் இடையிலான சிக்கலான தொடர்புகள் ஆகியவற்றின் மீது கவனம் குவிக்கின்றது. அரசியலமைப்புக்கள்,சட்டவாக்கங்கள், நீதிமன்றங்கள் மற்றும் அரசாங்கத்தின் முறைமைகள் போன்ற நிறுவன ரீதியான ஏற்பாடுகள் சமுதாய உறுப்பினர்கள் செயல்படுகின்ற சட்ட மற்றும் அரசியல் களங்களைக் கோடிட்டுக் காட்டுகின்றன. ஒரு சமூகத்தைச் சார்ந்தவர்கள் யார் யார் மற்றும் அதற்குப் பங்களிப்பவர்கள் யார் யார் என்பதைப் பற்றிய நமது புலனுணர்வுகளை கலாச்சாரப் பழக்கங்களும் மனப்பான்மைகளுமே வடிவமைக்கின்றன. அத்துடன், ஒவ்வொரு நாளும் நாம் ஒருவருக்கொருவர் எவ்வாறு தொடர்புகொள்கிறோம் என்பதிலும் அவை தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன.

Monitor அமைப்பின் மதிப்பீட்டுக் கட்டமைப்பானது நிறுவன மற்றும் கலாச்சாரப் பதிற்செயற்பாடுகளுக்கு இடையிலான இடைவிளைவுகளில் வேர்கொண்டுள்ளதுடன் அது அரசியல், பொருளாதார மற்றும் சமூகப் பரிமாணங்களில் நிலவும் உள்ளடக்கல் மற்றும் விலக்கிவைப்புக்களை அளவிடுகிறது. அதன் 20 குறிகாட்டிகள் பின்வருவனவற்றினை உள்ளடக்குகின்றன:

1. பன்மைவாதத்திற்கு ஆதரவான சட்டப்பூர்வக் கடப்பாடுகள்;
2. கடப்பாடுகளை அடைந்துகொள்வதற்காக அரச நிறுவனங்களால் பின்பற்றப்படும் நடைமுறைகள்;
3. சமூகச் செயல்பாட்டாளர்களிடமிருந்து பன்மைவாதத்தை நோக்கிய தலைமைத்துவம்;
4. குழு அடிப்படையிலான சமத்துவமின்மையின் நிலை;
5. குழுக்களிடையிலான உறவுகள் மற்றும் உறவுணர்வு

நிபுணத்துவம் மற்றும் தரவு மூலம் நெறிப்படுத்தப்பட்டது

பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கல் தொடர்பான தேசிய நிபுணர்கள் குழுவினர் ஒரு நாட்டின் அறிக்கையை உருவாக்க Monitor அமைப்பின் மதிப்பீட்டுக் கட்டமைப்பைப் பயன்படுத்துகின்றனர். இதற்குப் பரந்த அளவிலான தரம் மற்றும் அளவு சார்ந்த தரவுகளில் இருந்து பெறப்படும் முடிவுகளைப் பயன்படுத்துகின்றனர். பன்மைவாதத்தை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்த பரிந்துரைகளைக் கொள்கை வகுப்பாளர்களுக்கும் அதைப் பின்பற்றுபவர்களுக்கும் இந்த அறிக்கைகள் வழங்குகின்றன. மேலும் சமூகத்திலுள்ள பங்கீடுபாட்டாளர்களுடன் கலந்துரையாடுவதற்கான அடிப்படையையும் இந்த அறிக்கைகள் வழங்குகின்றன.

நிபுணர்கள் குழு ஒவ்வொன்றும், பன்மைவாதம் பற்றி அது கூற விரும்பும் கதையினை வரையறுக்குமாறு ஊக்கப்படுத்தப்படுகின்றது. இவ்விதமாக, உள்நாட்டுத் யதார்த்தங்களின் அடிப்படையில் அறிக்கைகள் அமைக்கப்பட்டிருப்பதுடன், கொள்கையிலும் நடைமுறையிலும் சாத்தியமான மிக அதிக தாக்கத்தினைக் கொண்டிருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

Monitor அமைப்பானது சுட்டிகள் மற்றும் பன்முகத்தன்மைச் சிக்கல்கள் தொடர்பான முன்னணி நிபுணர்களைக் கொண்ட ஒரு சர்வதேச தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவால் வழிகாட்டப்படுகிறது.

# குளோபல் புளூரலிசம் மொனிட்டர் மதிப்பீட்டு கட்டமைப்பு

**நாட்டின் விபரங்கள்**

| பொறுப்புக்கள் | நடைமுறைகள் | பன்மைவாதத்தி-ற்கான தலைமை | குழு அடிப்படையி-லான சமத்துவமி-ன்மைகள் | குழுக்களிடையிலான உறவுகள் மற்றும் உற-வுணர்வு |
|---|---|---|---|---|
| சர்வதேச கடமைப்பொறு-ப்புகள் | கொள்கை அமலாக்கம் | அரசியல் கட்சிகள் | அரசியல் | குழுக்களிடை-யிலான வன்முறை |
| தேசிய கடமைப்பொறு-ப்புகள் | தரவுச் சேகரிப்பு | செய்தி ஊடகங்கள் | பொருளாதாரம் | குழுக்களிடை-யிலா நம்பிக்கை |
| உள்ளடக்கிய குடியுரிமை | உரிமைகோரலை-உருவாக்குதல் மற்றும் எதிர்த்து வாதிடுதல் | குடிமைச் சமூகம் | சமூகம் | நிறுவனங்களில் நம்பிக்கை |
| | | தனியார் துறை | கலாச்சாரம் | உள்ளடக்கல் மற்றும் ஏற்பு |
| | | | நீதிக்கான அணுகல் | சமூகத்தின் பகிரப்பட்ட உரிமை |

**பரிந்துரைகள்**

# உள்ளடக்கங்கள்


**பிரதான விடயங்களின் தொகுப்பு** **7**

**நாட்டின் விபரங்கள்** **7**

**பகுதி I. பொறுப்புக்கள்** **14**
1. சர்வதேச கடமைப்பொறுப்புகள் 15
2. தேசிய கடமைப்பொறுப்புகள் 18
3. உள்ளடக்கிய குடியுரிமை 19

**பகுதி II. நடைமுறைகள்** **21**
4. கொள்கை அமலாக்கம் 22
5. தரவுச் சேகரிப்பு 24
6. உரிமைகோரலை-உருவாக்குதல் மற்றும் எதிர்த்து வாதிடுதல் 25

**பகுதி III. பன்மைவாதத்திற்கான தலைமை** **28**
7. அரசியல் கட்சிகள் 29
8. செய்தி ஊடகங்கள் 30
9. குடிமைச் சமூகம் 34
10. தனியார் துறை 37

**பகுதி IV. குழு அடிப்படையிலான சமத்துவமின்மைகள்** **39**
11. அரசியல் 40
12. பொருளாதாரம் 42
13. சமூகம் 45
14. கலாச்சாரம் 47
15. நீதிக்கான அணுகல் 49

**பகுதி V. குழுக்களிடையிலான உறவுகள் மற்றும் உறவுணர்வு** **52**
16. குழுக்களிடையிலான வன்முறை 53
17. குழுக்களிடையிலான நம்பிக்கை 56
18. நிறுவனங்களில் நம்பிக்கை 58
19. உள்ளடக்கல் மற்றும் ஏற்பு 60
20. சமூகத்தின் பகிரப்பட்ட உரிமை 61

**பரிந்துரைகள்** **63**

**குறிப்புகள்** **65**

**மேற்கோள்கள்** **71**

# பிரதான விடயங்களின் தொகுப்பு

## ஒட்டுமொத்த மதிப்பெண்: 6

நாட்டிலுள்ள தமிழர்களின் எதிர்ப்புப் படைகளுக்கு எதிராக இராணுவ வெற்றி அடைந்திருப்பதாக அரசாங்கம் அறிவித்து பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதாரப் பிரச்சினைகள் குழு அடிப்படையிலான புறக்கணிப்புகள் மற்றும் சமத்துவமின்மைகளின் முழுமையான விளைவுகளை வெளிக்காட்டுகிறது. இலங்கைக்கான Global Pluralism Monitor அமைப்பின் அறிக்கை, சமூகப் பொருளாதாரப் பிரிவினைகளுக்கான உணர்திறனுடன் பன்முகத்தன்மையின் மத மற்றும் இனம் சார்ந்த அம்சங்களின் மீது கவனம் செலுத்துகிறது. அனைத்து மக்களுக்கும் பயனளிக்கும் வகையில் அர்த்தமுள்ள வழிகளில் பன்மைவாதத்தை வலுப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் மீது இந்த அறிக்கை கவனம் செலுத்துகிறது.

இலங்கையின் அத்திவாரத்தில் வேரூன்றியுள்ள குழு அடிப்படையிலான பேரினவாத எத்தனிப்புக்கள் இன்றும் தொடர்கின்றன மற்றும் அவை ஆழமான சமத்துவமின்மைக்கும் மோதல்களுக்கும் ஆதாரமாக உள்ளன. தேர்தலில் வெற்றியடைவதற்காக விலக்கிவைக்கும் கொள்கைகளை உருவாக்குவதன் மூலம், ஜனநாயகத்தை அரசியல் கட்சிகள் குழிதோண்டிப் புதைத்துவிடுகின்றன. இதன் விளைவாக, கொள்கைகள் ஆழமான குழு அடிப்படையிலான பிரிவுகளுக்குப் பங்களிப்பு வழங்குகின்றன. இதன் விளைவாக எழும் நிலையற்றதன்மையானது, விலக்கிவைப்புக்களையும் கடந்த கால மோதல்களின் மூலங்களையும் பேணுகின்ற ஆளுகைப் பாங்குகளை மீளுருவாக்குகின்றன. எனினும், உண்மையான நல்லிணக்கத்தில் கவனம் செலுத்துவதன் மூலமும், வெற்றி பெற்றவரின் சமாதானத்தினைத் திணிப்பதற்கான அரசாங்கத்தின் எத்தனிப்பினை மறுதலையாக்குவதன் மூலமும் மாற்றம் மற்றும் முன்னேற்றத்திற்கான சாத்தியங்களை நாம் பெறலாம்.

### சட்டப்பூர்வக் கடப்பாடுகள்

பன்மைவாதத்தை ஊக்குவிக்கின்ற சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் ஆவணங்களில் இலங்கை கையொப்பம் இட்டுள்ளது. எனினும் சாத்தியமான போர்க் குற்றங்களுக்கான நீதி வழங்குதல் போன்ற முக்கிய அம்சங்களை அது அமல்படுத்தத் தவறிவிட்டது. 1997-இல் நிறுவப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (HRCSL) நாட்டின் சர்வதேச மற்றும் உள்நாட்டுக் கடப்பாடுகளை வலுப்படுத்த உதவியது. இந்தக் கடப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் இந்த ஆணைக்குழுவால் முக்கிய பங்கு வகிக்க முடியும். எனினும், சமீபத்திய அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் காரணமாக சுதந்திரமாகச் செயல்படுவதில் HRCSL சவால்களை எதிர்கொண்டு வருகிறது.

மிகுந்த பன்மைவாதம் கொண்ட இலங்கைக்கான சட்டப்பூர்வ அடித்தளங்களை வலுப்படுத்துவதில் பல சவால்கள் உள்ளன. குறிப்பாக, பல தசாப்தங்களாக நீடித்த மோதல்களின்போது ஏற்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு வகைப்பொறுப்பு இல்லாதிருக்கின்றது. உதாரணமாக, சர்வதேச கடப்பாடுகள் மற்றும் HRCSL-இன் சுதந்திரத்தில் நிலவும் சவால்கள் தொடர்பான தனிநபர் முறைப்பாட்டுப் பொறிமுறைகளைஅரசாங்கம் நிராகரித்துவிட்டது. வலிந்து காணாமலாக்கப்பட்டமை மற்றும் குற்றம் சாட்டப்பட்ட போர்க் குற்றங்கள் ஆகியவற்றிற்கு நீதி தேடும் நடைமுறையை இந்த நடவடிக்கை நேரடியாகத் தாமதப்படுத்தியுள்ளது.

## நடைமுறைகள் மற்றும் தலைமைத்துவம்

அரச சேவையில் மக்களைச் சமமாக ஆட்சேர்ப்புச் செய்யும் அரசாங்கத்தின் ஆர்வத்தில் குறிப்பிடத்தக்க இடைவெளி நிலவுகிறது. இலங்கைத் தமிழர்கள், இந்தியத் தமிழர்கள், இஸ்லாமியர்கள் போன்ற மக்கள் தொகை ரீதியாகச் சிறுபான்மையினராக இருப்பவர்கள் குடிமைப் பணியில் 10 சதவீதத்திற்குக் குறைவாகவும், ராணுவத்தில் 5 சதவீதத்திற்குக் குறைவாகவும் மட்டுமே பணிபுரிவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. உதாரணமாக, பொதுப் போராட்டம் நடத்துவதற்கான உரிமையை அனைவரும் பெற்றிருந்தாலும், பெரும்பான்மையினரின் உரிமை கோரல்களுக்கு அரசாங்கம் அதிக எதிர்வினையாற்றுவதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். சிங்கள பௌத்தப் பெரும்பான்மையினருக்கு சிறப்புரிமை அந்தஸ்து வழங்குகின்ற அரசியலமைப்பின் ஏற்பாடுகள் இந்த உண்மையை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

சிறுபான்மைக் குழுக்கள் எதிர்கொள்ளும் பன்முகப்பட்ட வாழ்வனுபவங்கள் பெரும்பாலும் அரசாங்கத்தின் கொள்கைகளாலும் தரவுச் சேகரிப்பு முறைகளாலும் பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் புலப்படாதவையாக ஆக்கப்படுகின்றன. உதாரணமாக, குழு அடிப்படையிலான சமூக மற்றும் பொருளாதாரத் தரவு சேகரிக்கப்படுவதில்லை. இதன் விளைவாக, பாலின சமத்துவம் சார்ந்த புவியியல் தரவில் இருந்து வாழ்க்கை நிலைமைகளை ஓரளவு மட்டுமே ஊகிக்க முடியும். இராணுவமயமாக்கப்பட்ட சூழல்களில், இனம் மற்றும் மதம் சார்ந்த சிறுபான்மையினப் பெண்கள், குறிப்பாகப் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களில் உள்ளவர்கள், வன்முறையாலும் துஷ்பிரயோகத்தாலும் பாதிக்கப்படக்கூடிய சூழல் அதிகமாக இருந்தபோதிலும்கூட, அவர்களின் அத்தகைய அனுபவங்களைப் பற்றிய தரவு சேகரிக்கப்படவில்லை.

பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களுக்கும் நம்பிக்கைகளைக் கொண்டவர்களுக்கும் தனியார் சட்டங்கள் பரந்த அளவிலான உரிமைகளை வழங்குகின்றன. பன்மைவாதத்தை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை உருவாக்குவதற்கான அடிப்படையாக இது இருக்கலாம். துரதிர்ஷ்டவசமாக, தற்போதைய தனியார் சட்டங்களின் வரம்பைக் குறைக்க முயல்கின்ற 'ஒரு நாடு, ஒரே சட்டம்' கொள்கையை முன்னெடுத்துச் செல்வதற்கான தற்போதைய முயற்சிகள், பன்மைவாதத்திற்கான இந்த வாய்ப்புக்குக் கணிசமான ஆபத்தை ஏற்படுத்தும்.

## குழு அடிப்படையிலான சமத்துவமின்மைகள் மற்றும் குழுக்களிடையிலான உறவுகள் மற்றும் உறவுணர்வு

குறைவான பிரதிநிதித்துவம் என்பது தேசிய மற்றும் மாநில அளவிலான அரசியல் தலைமையில் தீவிரமாக உள்ளது. 2021-இல், தேசிய மட்டத்திலான 32 அரசாங்க அமைச்சுக்களில் எவையுமே இனச் சமயச் சிறுபான்மையினரால் தலைமை தாங்கப்படவில்லை. மேலும், உப தேசிய மட்டத்தில் இயங்கும் 42 ராஜாங்க அமைச்சுக்களில் ஒன்று மட்டுமே சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினரால் தலைமை தாங்கப்பட்டது Monitor மதிப்பீடு நடத்தப்பட்டபோது, 27 அமைச்சர்களில் ஒரு பெண் அமைச்சர் மட்டுமே இருந்தார் என்பதுடன் பாராளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களில் 13 பெண்கள் மட்டுமே இடம்பெற்றிருந்தனர்.

இலங்கையில் சமூகத்தின் அனைத்துத் துறைகளிலும் பெண்களின் பங்களிப்புகளை மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்பு உள்ளது. இலவசக் கல்வி இலங்கையின் உயர் எழுத்தறிவு வீதத்திற்கு அடிப்படையாக உள்ளது; உண்மையில், இரண்டாம் நிலைக் கல்வியில் ஆண்களை விடப் பெண்களின் சேர்க்கை சற்று அதிகமாக உள்ளது. எனினும், பாதிக்கப்படக்கூடிய பொருளாதாரத் துறைகளில் உள்ள பெண்களின் எண்ணிக்கையில் உள்ள ஏற்றத்தாழ்வு (உதாரணம்: பெருந்தோட்டம் மற்றும் ஆடைத் தொழிற்துறை போன்றவற்றில் சுரண்டல் நிலைமைகளை எதிர்கொள்பவர்கள்) பரந்த குழு அடிப்படையிலான சமத்துவமின்மைகளுக்குப் பரவிச் செல்கின்றது. பொருளாதாரம் மற்றும்

அரசாங்கத்தில் பெண்களை உள்ளடக்குவதற்கான முயற்சிகளுடன், அவர்களுக்கு உயர்தரமான கல்வியும் கிடைப்பதற்கான சமமான அணுகலை உறுதிசெய்வது பெண்கள் அளிக்கக் கூடிய குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை விரிவுபடுத்த உதவலாம்.

## கண்காணிப்பாளர் தெரிவிக்கும் முக்கியமான விடயங்கள்

இலங்கையில் உயர் மட்டத்திலான வாக்காளர் பங்கேற்பு இருந்தாலும், அனைவருக்கும் நியாயமான மற்றும் சமமான பிரதிநிதித்துவம் கிடைக்கச்செய்வதில் குறிப்பிடத்தக்க சவால்கள் நிலவுகின்றன. வாக்காளர் எண்ணிக்கை போன்ற குறிப்பிட்ட சில ஜனநாயக நியமங்களால் பன்மைவாதத்தை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை உண்மையில் எப்படித் தடுத்து நிறுத்தவும் தடைசெய்யவும் முடியும் என்பதைப் பற்றிய சிந்தனையை இந்த உண்மை வழங்குகிறது. இலங்கையின் ஜனநாயக முறைமையானது அரசியல் ஆதாயத்துக்காக வலுவான பேரினவாதத்தினையும் இனக் குழுக்களின் மீதான விரோதத்தையும் ஊக்குவிக்கிறது. இந்த எத்தனிப்புக்கள் வலுவான பன்மைவாதக் கொள்கைகளையும் நடைமுறைகளையும் போஷிப்பதற்கான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடுகின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) தோற்கடிக்கப்பட்ட பின்னரான பல தசாப்தங்களில், நல்லிணக்கத்தின் தேவையைக் குலைக்கும் பாரபட்சமான வெற்றி பெற்றவரின் சமாதானத்தினையே அரசாங்கம் திணித்து வருகின்றது. அரசாங்கத்தின் இந்தப் போக்கு தற்போதைய கொள்கைகள் மற்றும் நடைமுறைகளையே பேணுகின்றது என்பதை, அதிகரித்த ராணுவமயமாக்கலை அரசாங்கம் நீடிக்கச் செய்திருப்பதில் இருந்து நாம் அறிந்துகொள்ளலாம். ஆனாலும், அரசின் அதீத பேரினவாச் சாய்வுகள் நாட்டின் தற்போதைய சமூக பொருளாதாரப் போராட்டங்களுடன் பின்னிப் பிணைந்துள்ளன எனும் புரிதல் இப்போது மக்கள் மத்தியில் உருவாகி வருகின்றது. இந்தச் சூழ்நிலையின் நிலையற்றதன்மையை வைத்துப் பார்க்கும்போது, குறிப்பாக அர்த்தமுள்ள நல்லிணக்கத்தை அடைவதற்கான சமீபத்திய அரசியல் விருப்பத்தை வைத்துப் பார்க்கும்போது, மாற்றத்திற்கான சாத்தியம் உள்ளது என்றே தோன்றுகிறது.

போர்க் குற்றங்கள் மற்றும் காணாமல் போதல் தொடர்பாக நீதி தேடும் அர்த்தமுள்ள நல்லிணக்கத்திற்கான நகர்வு பேரழிவு தரும் மோதல்களுக்கான பாரம்பரியத்தினைக் களைகின்ற, மிகவும் உள்ளடக்கும் தன்மை மிக்க தேசியக் கூற்றுரைகளையும் மிகுந்த பன்மைவாதக் கொள்கைகளையும் நடைமுறைகளையும் கட்டமைப்பதற்கான சத்தியத்தினை வழங்குகின்றது.

## பரிந்துரைகள்

நிபுணர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் பங்கீடுபாட்டாளர்கள் நீண்டகாலமாக இலங்கைக்கு விடுத்து வரும் பகிரங்க அழைப்பினை Monitor அமைப்பின் பரிந்துரைகள் எதிரொலிப்பதுடன், நாட்டின் பன்மைவாதத்திற்குப் பல வழிகளை வழங்குகின்றன.

பல இனங்கள், பல மொழிகள், பல மதங்கள் மற்றும் பல கலாச்சாரங்கள் கொண்ட நாடாக இலங்கையை ஒரு புதிய அரசியலமைப்பில் தொகுத்தமைத்தல். ஜெனீவாவில் நடைபெற்ற UNHRC-இன் 43வது அமர்வின்போது இதன் உருவாக்கம், சில குழுக்களுக்கு முன்னுரிமை அளிக்கும் கொள்கைகளின் தாக்கத்தைக் குறைப்பதில் இது முக்கிய பங்கு வகிக்கலாம். மேலும் பன்மைவாதத்தை ஆதரிக்கும் சட்டங்கள் மற்றும் கொள்கைகளுக்கான கட்டமைப்பாகவும் இது செயல்படலாம்.

- பன்மைவாதம் குறித்து அரசு ஊழியர்களுக்குப் பயிற்சியளிக்க அரசு சாரா அமைப்புகளுடன் கூட்டிணைந்து செயல்படுதல். இந்தப் பணியில் உயர் நிலை அதிகாரிகள் மற்றும் அரசு ஊழியர்களுக்குக் கூடுதலாக இருமொழிப் பயிற்சியை

வழங்குவதும் அடங்கும். இரண்டு அரசகரும மொழிகளிலும் வழங்கப்படுகின்ற அரச சேவைகள் குடிமக்களின் அணுகலை மேம்படுத்தும்.

- அரச சேவையில் அனைத்து இனம் மற்றும் மதம் சார்ந்த குழுக்களின் சமமான பிரதிநிதித்துவத்தை மேம்படுத்த, தகுதி அடிப்படையிலான நடைமுறைகளுக்குத் திரும்புதல். இவ்வாறு செய்யும்போது, குடிமக்கள் சமமாக நடத்தப்படுவார்கள்.

- இனம்-மதம் சார்ந்த பதற்றங்களைத் தனிப்பதற்கும், சமுதாயங்களுக்கு இடையே நல்ல ஈடுபாட்டை ஊக்குவிப்பதற்கும் உதவ மாவட்ட நல்லிணக்கக் குழுக்களை (DRC) மீண்டும் செயல்படுத்துதல். மோதலுக்கான தீர்வை உள்ளூர் மட்டங்களில் அதிகரிப்பதன் மூலம் பரந்த நல்லிணக்கத்திற்கான நாட்டின் முயற்சிகளுக்கு இந்தப் பணி ஆதரவளிக்க முடியும்.

- சமூகத்தில் பன்மைவாதத்தை ஊக்குவிக்கின்ற பன்மைவாதம் மற்றும் சம உரிமைகள் ஆணைக் குழுவினைத் தாபித்தல். அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் அடையாளம் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக இந்த ஆணைக்குழுவினால் செயற்படக் கூடியதாக இருக்கும். மேலும், முன்மொழியப்படும் எச்சட்டமும் பன்மைவாதத்தை எவ்வாறு ஊக்குவிக்கும் அல்லது குன்றச் செய்யும் என்பது தொடர்பான அவதானிப்புகளுடன் எந்தவொரு சட்டத்தையும் உச்ச நீதிமன்றத்திற்கு ஆணைக்குழு ஆற்றுப்படுத்தலாம்.

# நாட்டின் சுயவிவரம்

**1931 முதல் சர்வசன வாக்குரிமையினை அனுபவித்து வரும் இலங்கை, ஆசியாவின் பழமையான ஜனநாயக நாடாகத் திகழ்கிறது**

போர்த்துகீசிய மற்றும் டச்சுக் கட்டுப்பாட்டை உள்ளடக்கிய சுமார் 450 ஆண்டு கால காலனித்துவ ஆட்சிக்குப் பிறகு 1948 பெப்ரவரியில் இலங்கை பிரித்தானியாவிடம் இருந்து சுதந்திரம் பெற்றது. நாட்டின் காலனித்துவ வரலாறு, இந்திய நாகரிகத்தின் செல்வாக்கு ஆகியவை தற்போதுள்ள சுமார் 22 மில்லியன் மக்களின் பல இனங்கள் மற்றும் மதங்களைக் கொண்ட சமூகத்திற்குப் பங்களித்துள்ளன.

கடைசியாக நடந்த மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, மக்கள் தொகையில் சுமார் 74.9 சதவீதம் சிங்களவர், 11.2 சதவீதம் இலங்கைத் தமிழர்கள், 4.2 சதவீதம் இந்தியத் தமிழர்கள் மற்றும் 9.2 சதவீதம் முஸ்லிம்கள் (இஸ்லாமியர்கள்) உள்ளனர். மத ரீதியான கண்ணோட்டத்தில் பார்த்தால், இலங்கையில் 70.2 சதவீதம் பௌத்தர்களும்,12.6 சதவீதம் இந்துக்களும் 7.4 சதவீதம் கிறிஸ்தவர்களும் (இதில் 6.1 சதவீதம் ரோமன் கத்தோலிக்கர்கள்) மற்றும் 9.7 சதவீதம் முஸ்லிம்களும் உள்ளனர்.[1] முஸ்லிம்கள் பிரதானமாகத் தமிழ் பேசுகின்றனர், அதே நேரம் பெரும்பாலான இளம் முஸ்லிம்கள் இப்போது சிங்களமும் பேசுகின்றனர். இருந்தாலும் சமுதாயம் நீண்ட காலமாக இஸ்லாத்தை தனது அடையாளமாகப் பயன்படுத்தி வருகின்றது (இதன் மூலம் நாட்டின் இனத்துவத் தமிழர்களிடம் இருந்து தன்னை வேறுபடுத்திக் கொள்கிறது).

நாட்டின் இன-மதப் பல்வகைமையானது ஒன்றை ஒன்று ஊடறுக்கும் பல சிக்கலான பிளவுகளை உருவாக்குகின்றது, உதாரணமாக, இன்று சிங்களவர்கள் மற்றும் தமிழர்களில் சுமார் 10 சதவீதம் பேர் கிறிஸ்தவர்களாக உள்ளனர், சிங்கள இந்துக்கள் அல்லது தமிழ் பௌத்தர்களை அரிதாகவே காண முடிகிறது. இருந்தாலும், பண்டைய காலங்களில், தமிழர்கள் வாழும் பகுதிகளில் (இந்தியா மற்றும் இலங்கை இரண்டு நாடுகளிலும்) பௌத்தம் வலுவான பிரசன்னத்தினைக் கொண்டிருந்தது. குறிப்பாக சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையை ஆட்கொண்ட பேரினவாதச் சூழல், துரதிர்ஷ்டவசமாக, சிங்களவரும் தமிழர்களும் பகிர்ந்துகொள்ளக்கூடிய பொதுவான பௌத்தத் தொடர்பை வலியுறுத்தவில்லை. மாறாக அது இன-மதப் பிரிவினைகளுக்கும் குறுகிய மனப்பான்மைக்கும் முக்கியத்துவம் கொடுத்ததன் மூலம் அதிக வன்முறை ஏற்படக் காரணமாக அமைந்தது. மதம் மற்றும் இனம் ஆகியவை இந்தப் பகுப்பாய்வில் முக்கிய பன்முகத்தன்மை வகைகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் சாதி, பாலினம் மற்றும் சமூகப் பொருளாதாரச் சமத்துவமின்மைகள் போன்ற அடையாளங்களும் பிரிவினைகளும் முக்கியமாகக் கருத்தில் கொள்ளப்பட்டன.

தெற்காசியா முழுவதும் சாதி ஒரு முக்கிய அடையாளக் குறியீடாகச் செயல்படும் அதே நேரத்தில், சுதந்திரத்திற்குப் பிறகு இலங்கையில் அது கையாளப்படுவது குறைந்துள்ளது. மொத்தத்தில், சாதிப் பிரிவினைகள் தமிழர்கள் மத்தியில் அதிகமாகக் காணப்படுகின்றன. சிங்களர்களிடையே, தனிப்பட்ட வாழ்க்கைக்கு வெளியே நிகழும் பெரும்பாலான சமூகத் தொடர்புகள் சாதி அமைப்பைக் குறிப்பிடாமலேயே நிகழ்கின்றன. ஆனாலும், திருமணத்தின்போதும், குறிப்பாக உள்ளூராட்சித் தேர்தல்களின் போதும், சாதி ஒரு முக்கியமான பங்கு வகிக்கிறது. இதன் விளைவு என்னவென்றால், சாதி என்பது பல அடையாளங்களில் ஒன்றாக இருந்தாலும் சிங்களர்களிடையே அதன் முக்கியத்துவம் கடந்த காலத்தை விடக் குறைவாகவே உள்ளது. அண்டை நாடான இந்தியாவைப் போல இங்கு அது வெளிப்படையாகப் பயன்படுத்தப்படுவதில்லை.

1931 முதல் சர்வசன வாக்குரிமையினை அனுபவித்து வரும் இலங்கை, ஆசியாவின் பழமையான ஜனநாயக நாடாகத் திகழ்கிறது. வேறு எந்த வகையான அரசாங்கத்தையும் விட ஜனநாயகத்தையே விரும்புவதாக நாட்டு மக்களும் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.[2] பெண்கள், ஆண்கள், இளைஞர்கள் மற்றும் இளைஞர் அல்லாதவர் என அனைத்துப் பிரிவினரிடமும் இதே கருத்துதான் நிலவுகிறது.[3] 2021 மற்றும் 2022-இல்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவரது அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களும், ராஜபக்ஷ குடும்பம் அரசியலில் இருந்து விலக வேண்டும் என்ற இன-மத எல்லைகளுக்கு அப்பாற்பட்ட கோரிக்கைகளும், நாட்டில் கருத்து வெளிப்பாட்டுக்கான சுதந்திரம் எந்த அளவு வேரூன்றியுள்ளது என்பதற்குச் சான்றாக உள்ளது.[4] இதே வேளை, சீர்குலைக்கும் வன்முறைகளுக்கு மத்தியில், நாடு கடுமையான ஜனநாயகப் பின்னடைவை அனுபவித்துள்ளது.1971 ஆம் ஆண்டு முதலாவதாகவும் 1988 – 89 களுக்கு இடையில் இரண்டாவதாகவும் நடைபெற்ற இரண்டு இடதுசாரிக் கிளர்ச்சிகள் ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களின் உயிர்களைக் காவுகொண்டன. - இவற்றில் ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டனர். எவ்வாறாயினும், சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் மூன்று தசாப்தங்கள் நீடித்த சிவில் யுத்தத்தின் காரணமாகவே மிகவும் அழிவுமிக்க வன்முறை நிகழ்ந்தது.

தமிழர்களுக்கு எதிரான முதலாவது இனக் கலவரம் 1956 ஆம் ஆண்டு நடந்தது, அதைத் தொடர்ந்து 1958ம் ஆண்டில் இன்னும் அதிகமான கலவரங்கள் நடந்தன. சிங்கள மொழியை மாத்திரமே அரசகரும மொழியாக அரசாங்கம் திணித்ததன் காரணமாக இந்தக் கலவரம் ஏற்பட்டது. 1977 ஆம் ஆண்டில் தமிழர் எதிர்ப்பு வன்முறைகள் அதிகம் நிகழ்ந்தன. ஆனால் 1983 யூலையில் தமிழ்க் கிளர்ச்சியாளர்கள் பதுங்கியிருந்து 13 ராணுவ வீரர்களைக் கொன்றதை அடுத்து தமிழர்களுக்கு எதிராக மிக மோசமான கலவரம் நடந்தது. உள்நாட்டுப் போரின் தொடக்கமாக 1983 ஆம் ஆண்டு அமைந்தது; இந்தப் போர் மே 2009 வரை நீடித்தது, இதில் 10000 இற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர். பிரிவினைவாதத் தமிழீழ விடுதலைப் புலிகளின் (LTTE) தோல்வி மோதலை முடிவுக்குக் கொண்டு வந்திருக்கலாம், ஆனால் அந்த நேரத்தில் நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்பட்ட போர்க் குற்றங்கள், இலங்கையின் ராஜதந்திர உறவுகளைச் சிக்கலாக்கின, குறிப்பாக மேற்கத்தேய நாடுகளுடனான ராஜதந்திர உறவுகளைச் சிக்கலாக்கின. LTTE-இன் தோல்வி, தமிழர்களின் நியாயமான குறைகளைத் தீர்த்து அவர்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் போருக்குப் பிறகு அதிக பன்மைவாதச் சூழலை உருவாக்க அரசை ஊக்குவிப்பதற்கும் பதிலாக, வெற்றிக் களிப்புக்கே பங்களிப்பு வழங்கியது.

உள்நாட்டுப் போரின் காரணமாக ஆயிரக்கணக்கான தமிழர்கள் நாட்டை விட்டு வெளியேறினர். இப்போது அவர்கள் தங்களின் குடும்பங்களுக்கும் சமுதாயத்திற்கும் எதிராக இழைக்கப்பட்ட அட்டூழியங்களுக்கு வகைப்பொறுப்பு ஏற்குமாறு கோரும் சக்திவாய்ந்த புலம்பெயர் சமூகத்தை உருவாக்கியுள்ளனர். தமிழர்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்த இலங்கை அரசாங்கம் குறைவான நடவடிக்கைகளையே எடுத்துள்ள அதே நேரத்தில், போர்க் குற்றங்களில் ஈடுபட்டதை அது மறுக்கிறது. தமிழர் எதிர்ப்பு அரசியல் இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்திய அரசாங்கம் இலங்கையுடன் தொடர்புகளை மேற்கொள்ளும்போது இந்த உணர்வுகளைக் கட்டாயமாகக் கருத்தில் கொள்ள வேண்டும். இலங்கையில் சீனா தனது இருப்பை விரிவுபடுத்தி வருவது இந்தியாவின் பதற்றத்தை அதிகரித்துள்ளது.

உள்நாட்டுப் போர் முடிவுற்றதில் இருந்து, இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையும் நடந்து வருகிறது. 2014, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் மிக மோசமான கலவரங்கள் நடைபெற்றன. இதுவரை தமிழர்களையும் இஸ்லாமியர்களையும் குறிவைத்து நடந்துள்ள இன-மத வன்முறைகள், ஏனைய அனைவரையும் விலைகொடுத்து சிங்கள பௌத்தர்களை வலுவூட்ட தொடர்ச்சியாக ஆட்சியில் இருந்த இலங்கை அரசாங்கங்கள் மேற்கொண்ட முயற்சிகளுடன் நேரடியாகத் தொடர்புடையவை ஆகும். நல்லிணக்கத்தின் மத்தியில் இணைந்து வாழும் சமூகங்களின் வரலாற்றைப் புறக்கணிப்பதன் மூலம் இது மேற்கொள்ளப்படுகிறது. இன-மத சகிப்புத்தன்மையை ஊக்குவிக்கும் பல கூறுகள் நாட்டில் இருந்தாலும் கூட, இந்தப் பிரித்தாளும் முயற்சிகள் இலங்கை ஓர் உண்மையான இனவாத நாடாக மாற வழிவகுத்துள்ளன. இலங்கை அடிப்படையில் பேரினவாதக் கட்டமைப்பினைக் கொண்டிருந்தாலும், அதன் ஜனநாயக முன்னேற்றமானது பின்னோக்கிச் சென்றுள்ளது. இருந்தாலும், மீண்டெழுந்தன்மை மிக்க நாட்டு மக்களில் கணிசமானவர்கள் பல்வகைமை மிக்க சமூகத்தில் சமாதானமான சகவாழ்வு வாழ்வதற்கான ஆற்றலை எடுத்து

விளக்குகின்றனர். 2022ம் ஆண்டில் ஜனாதிபதி கோதபாய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இருவரையும் பதவியிலிருந்து நீக்கிய பெரும் போராட்டங்களுக்கு இடையே இந்த உணர்வு வெளிப்படுத்தப்பட்டது.

போராட்டங்களுக்கான அடிப்படைக் காரணம் சென்மதி நிலுவை நெருக்கடியாகும் - நீண்டகால ஊழல், தொடர்ச்சியான வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைகள் மற்றும் பாரிய அளவிலான அரச தொழில்முயற்சியாண்மைகள்ஆகியவற்றின் காரணமாகவே இந்நிலை ஏற்பட்டது – சுற்றுலாத் துறை மீதும் வெளிநாட்டில் பணிபுரியும் சிங்களவர்கள் அனுப்பும் பணத்தின் மீதும் கொவிட்-19 ஏற்படுத்திய பாதிப்பின் காரணமாக இது இன்னும் அதிகரித்தது. சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையில் மிக மோசமான பொருளாதார நெருக்கடி ஏற்பட இது வழிகோலியது. உயர்-நடுத்தர வருமான நிலையை அடையக்கூடிய நிலையில் நாடு இருந்தது. ஆனால் அந்நியச் செலாவணி நெருக்கடி பரந்த அளவில் பட்டினியை ஏற்படுத்தியது. குறிப்பாகக் கிராமியச் சமூகங்களில் மற்றும் குறைந்த வருமானம் கொண்ட சமூகங்களில் பட்டினிப் பிரச்சினை அதிகரிப்பதற்கு இது வழிகோலியது. சர்வதேச சமூகம் படிப்படியாக இலங்கைக்கு உதவி செய்ய வரும். காலப்போக்கில், அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறையையும் தனது பொருளாதாரத் துயரங்களையும் நாடு சமாளித்துக்கொள்ளும். இன சமயப் பிரிவுகளின் ஊடே மக்கள் ஒன்றிணைந்து அதன் மூலம் பன்மைவாதம் வலுப்படுவதற்கு இந்தக் கூட்டுத் துயரம் மக்களை ஊக்குவிக்குமா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.



Photo: Shutterstock/SLSK Photography

# I. கடப்பாடுகள்

# 1. சர்வதேசக் கடப்பாடுகள்
# ஒட்டுமொத்த மதிப்பெண் :6

மதம் | **மதிப்பெண்: 6**

இனம் | **மதிப்பெண்: 6**

**இவ்வாறு சர்வதேசத் தர நியமங்களுக்கு இணங்க இலங்கை தனது கடமைப் பொறுப்பை வெளிப்படுத்துகின்ற அதே நேரத்தில் நியமங்களைப் பற்றிப்பிடிப்பதில் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யத் தவறிவிட்டது.**

மொத்தத்தில், பன்மைவாதத்தை ஊக்குவிக்கும் சர்வதேசப் பொருத்தனைகளுக்குப் பற்றுறுதி வழங்குகையில் இலங்கை தனது கடமையைச் சிறப்பாக ஆற்றுகிறது. உதாரணமாக, சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கையில் (ICCPR) இலங்கை ஒரு தரப்பாக உள்ளது மற்றும் நாட்டின் ICCPR சட்டம், மத மற்றும் இன முரண்பாட்டை ஊக்குவிப்பதைத் தடுக்கிறது மற்றும் தண்டிக்கிறது. ஆனாலும், பல அரசியல்வாதிகள் மற்றும் சக்திவாய்ந்த ஆதரவாளர்களைக் கொண்ட தீவிரவாத பௌத்த மதகுருமார்கள் இத்தகைய சட்டங்களைச் சட்டக்காப்புடன் மீறுகின்றனர். இது குறிப்பாக 2012ம் ஆண்டுக்குப் பின்னர் இஸ்லாமியர்களுக்கு எதிராகத் தொடரான வன்முறைகள் வெடித்தபோது தெளிவாகப் புலப்பட்டது.[5] இவ்வாறு சர்வதேசத் தர நியமங்களுக்கு இணங்க இலங்கை தனது கடமைப் பொறுப்பை வெளிப்படுத்துகின்ற அதே நேரத்தில் நியமங்களைப் பற்றிப்பிடிப்பதில் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யத் தவறிவிட்டது.

நாட்டின் அரசியலமைப்பு பன்மைவாதத்தை நோக்கிச் சாதகமாகத் திசைமுகப்பட்டுள்ளது. உதாரணமாக, நியாயப்படுத்தப்படக்கூடியதும் சர்வதேச பொருத்தனைக் கடப்பாடுகளால் கட்டுப்படுத்தப்படுகின்றதுமான ஒரு சிறப்பு அடிப்படை உரிமைகள் அத்தியாயம் நாட்டின் அரசியலமைப்பில் உள்ளது. பல விதிவிலக்குகளுடன், ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுமைப்படுத்தப்பட்ட சலுகைகள் திட்டம்+ (GSP+) கட்டணச் சலுகைகளுக்குத் தகுதி பெறத் தேவையான 27 ஒப்பந்தங்கள் உட்பட, அனைத்து முக்கிய சர்வதேச பொருத்தனைகளையும் இலங்கை ஏற்று அங்கீகரித்துள்ளது. எனினும், இப்பொருத்தனைகள் சிலவற்றுடன் தொடர்புடைய தனிநபர் முறைப்பாட்டு நடைமுறைகள் பலவற்றினை நாடு ஏற்று அங்கீகரிக்கவில்லை. இவற்றில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் மற்றும் அங்கவீனமானவர்கள் தொடர்பான தனிநபர் முறைப்பாடுகள்அடங்கும்.

மனித உரிமைகளைப் பொறுத்தவரை, ஐக்கிய நாடுகளின் (UN) அனைத்து முக்கிய சர்வதேச மனித உரிமைகள் சமவாயங்களையும் இலங்கை ஏற்று அங்கீகரித்துள்ளது. பொதுவாக, சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புகளுடன் இடையீடு மேற்கொள்வதிலும் அறிக்கை அளிப்பதிலும் இலங்கை கௌரவமான பதிவைக் கொண்டுள்ளது.[6] ஐக்கிய நாடுகள் அமைப்புடன் பருவகால மீளாய்வுகளை நடத்துவதில் இலங்கை ஈடுபட்டுள்ளது. இத்துடன் விசேட அறிக்கையாளர்கள் நாட்டுக்குச் சென்று பார்வையிட்டு அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதும் இடம்பெறுகின்றது. 1997ம் ஆண்டில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (HRCSL) தாபிக்கப்பட்டமையானது மனித உரிமைகளுக்கான நாட்டின் கடமைப் பொறுப்புத் தொடர்பான சாதகமான முன்னேற்றங்களில் ஒன்றாக விளங்கியது. பெரும்பாலும், HRCSL சுதந்திரமாகச் செயல்பட வலுவான சட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்தியுள்ளது. எனினும், சமீபத்தில் அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் இந்தச் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலாக இருப்பதுடன் எதிர்காலத்தில் HRCSL-இன் பணிகளுக்குச் சவால் மிக்கதாகவும் இருக்கும்.

மொத்தத்தில், மனித உரிமை மீறல்களுக்கான வகைப்பொறுப்பு சர்ச்சைக்குரியது ஆகும். போர்க் குற்றங்கள் குறித்த குற்றச்சாட்டுகளைக் கையாளுவதில் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களின் திறமையின்மை மற்றும் கடுமையான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை (PTA) அர்த்தமுள்ள வகையில் சீர்திருத்துவதற்கு அல்லது கைவிடுவதற்குக் காட்டும் எதிர்ப்பு இதற்கான ஒரு முக்கிய காரணமாக இருந்தது. 1979

**அண்மைக் காலங்களில் இலங்கை தனது கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் சர்வதேச முகவர்களுடன் எந்த அளவுக்கு ஒத்துழைக்கிறது என்பது ஆட்சியில் உள்ள அரசாங்கத்தைச் சார்ந்துள்ளது.**

ஆம் ஆண்டில் தற்காலிகச் சட்டமாகப் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தொடர்ந்து அமுலில் இருக்கிறது. சந்தேக நபர்களைப் பிணை வழங்காது காலவரையின்றித் தடுத்துவைப்பதை இச்சட்டம் அனுமதிக்கிறது. குறிப்பாக சிறுபான்மையினரைக் குறிவைக்க, தமிழர்களை முக்கிய இலக்காகக் கொண்டு அதிகாரிகள் இச்சட்டத்தினைப் பயன்படுத்தினர் - ஆனாலும், 2019 உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பைத் தொடர்ந்து எண்ணற்ற இஸ்லாமியர்களும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டனர்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைத் தன்னிச்சையாகப் பயன்படுத்திய விதம், அதனைச் சிறுபான்மையினருக்கு எதிரான ஆயுதமாகப் பயன்படுத்தும் எத்தனம் ஆகியவற்றின் காரணமாக GSP+ சலுகைக்கான இலங்கையின் அணுகலைத் தற்காலிகமாகத் திரும்பப் பெறுவதைப் பரிசீலிக்குமாறு ஐரோப்பிய ஆணையத்தைக் கோரும் தீர்மானத்தை 2021, ஜூன் 10 அன்று ஐரோப்பிய பாராளுமன்றம் ஏற்றுக்கொண்டது.[7] 2020 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 20 வது திருத்தம் குறித்துத் தீவிர கரிசணையினை வெளிப்படுத்திய அதே நேரத்தில், ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) தீர்மானம் மத மற்றும் இனச் சிறுபான்மையினருக்கு எதிரான பாகுபாடு மற்றும் வன்முறை தொடர்ந்து நிகழ்வதாகவும், "அதன் விளைவாக நீதித்துறையின் சுதந்திரம் குறைதல், பாராளுமன்றத்தின் கட்டுப்பாடு குறைதல் மற்றும் ஜனாதிபதி பதவியில் அதிகப்படியான அதிகாரக் குவிப்பு" ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டது.[8] நாட்டின் மிக மோசமான நிதி நெருக்கடிக்கு மத்தியில், தொடக்கத்தில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் (PTA) கீழ் தனிநபர்களைக் கைது செய்வதற்குத் தடை விதிக்க அரசுக்கு சர்வதேச அழுத்தம் கொடுக்கப்பட்டது.[9] ஆனாலும், ஜூலை 2022 இல் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பின்னர், ஆட்சிக்கு எதிரான போராட்டக்காரர்களுக்கு எதிராக, பிரதானமாகச் சிங்களவர்களுக்கு எதிராகப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் பயன்படுத்தப்பட்டது. இதன் விளைவாக, இப்போது அனைத்து இன, சமயச் சமூகங்களைச் சேர்ந்த செயற்பாட்டாளர்களும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் கலைக்கப்படுவதைப் பார்க்கவே விரும்புகிறார்கள்.

அண்மைக் காலங்களில் இலங்கை தனது கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் சர்வதேச முகவர்களுடன் எந்த அளவுக்கு ஒத்துழைக்கிறது என்பது ஆட்சியில் உள்ள அரசாங்கத்தைச் சார்ந்துள்ளது. உதாரணமாக, கடந்த அரசாங்கத்தின் கீழ் இலங்கை 2015 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் (UNHCR) தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கியது மற்றும் உள்நாட்டுப் போரினால் ஏற்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு வகைப்பொறுப்புக் கூறுவதற்கான பொறிமுறையினைப் படிப்படியாக உருவாக்க முயன்றது. எனினும், சிங்கள பௌத்த தேசியவாதக் கவர்ச்சியூட்டி ஆட்சிக்கு வந்துள்ள தற்போதைய அரசாங்கம், தீர்மானத்திலிருந்து விலகிக்கொண்டது[10] மற்றும் இது UNHCR உடனான கடினமான உறவுகளுக்கும் வழிவகுத்தது.[11] முந்தைய அரசாங்கத்தின் கீழ், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சிறப்பு நடைமுறைகளுக்கான ஆணை பெற்றவர்கள் இலங்கைக்கு வருகை தரும்படி வெளிப்படையாக அழைப்பு விடுக்கப்பட்டது. மேலும் அவர்களுடைய 400 பரிந்துரைகளில் பெரும்பாலானவை மேற்கூறிய 2015 UNHCR தீர்மானத்தில் இணைக்கப்பட்ட 25 முக்கிய பொறுப்பேற்புகள் / கடப்பாடுகள் தொடர்பானவையாக இருந்தன.

நாட்டின் மிக மோசமான பொருளாதாரச் சூழ்நிலை GSP+- இனை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு மிகவும் முக்கியமானதாக ஆக்கியுள்ளது. மேலும் 2021ம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியத்தின் GSP+ சலுகைகள் கண்காணிப்புக் குழு இலங்கைக்கு வருகை தந்தபோது நடந்த கூட்டத்தில் ஏராளமான செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டனர்.[12] நாட்டின் ஜனநாயகப் பின்னடைவு தொடர்பாக ஐரோப்பிய ஒன்றிய நிபுணர்கள் வெளிப்படுத்தியஅதிருப்தி[13] இலங்கையின் சர்வதேசக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான அதன் பொறுப்பு, எவ்வாறு அதிகாரத்தில் இருக்கும் ஆட்சியின் இயல்பைச் சார்ந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது ஆனால் ஜூன் 2022 இல் UNHCR குறித்த வெளியுறவு அமைச்சரின் அறிக்கையில் இருந்து, நாட்டின் வங்குரோத்து நிலையானது சர்வதேசக் கடப்பாடுகளை மிகத் தீவிரமாகக் கடைப்பிடிக்குமாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதை நாம் தெரிந்துகொள்ளலாம்.[14] மறுபுறம்,

செப்டம்பர்-ஒக்டோபர் 2022 இல் UNHRC கூட்டத்தில் வலியுறுத்திக் கூறப்பட்ட நிலைப்பாட்டின்படி, குற்றம் சாட்டப்பட்ட போர்க் குற்றங்களைச் சிறிதளவு அயல்நாட்டு மேற்பார்வையுடன் உள்நாட்டுச் செயன்முறைகளைப் பயன்படுத்தி விசாரிக்க விரும்புவதாகவும் அரசாங்கம் தெளிவுபடுத்தியுள்ளது.[15]

2007 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட ICCPR சட்டம், வெறுப்பூட்டும் பேச்சை ஒரு குற்றவியல் தவறாக ஆக்கியது, சர்வதேச உடன்படிக்கைகளை நிறைவேற்ற முற்படும்போது இலங்கை அரசின் சாதகமான நடவடிக்கையாக இதைக் காணலாம். துரதிர்ஷ்டவசமாக, சட்டத்தை அமுல்படுத்துவதும் பயன்படுத்துவதும் சீரற்றதாக உள்ளது மற்றும் விரும்பிய பெறுபேறுகள் எட்டப்படவில்லை. சில நேரங்களில், ICCPR சட்டத்தில் இடம்பெற்றுள்ள கடுமையான சட்டங்கள், வெறுப்புப் பேச்சுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்யும் நபர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படுகின்றன, அதே நேரத்தில் வெறுப்புப் பேச்சுக்களை நிகழ்த்தும் நபர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை.[16]

உள்நாட்டுப் போரினால் உருவான பிரச்சினைகளைச் சமாளிக்க நிறுவப்பட்ட இரண்டு நிறுவனங்களான காணாமல் போனவர்களுக்கான அலுவலகம் மற்றும் இழப்பீட்டு அலுவலகம் ஆகியவற்றுடன் முந்தைய மற்றும் தற்போதைய அரசாங்கங்கள் ஈடுபட்டுள்ள விதம் மற்றும் ஒரு நாடு, ஒரே சட்டம் பற்றிய வரைபுச் சட்டத்தினை வரைவதற்கான செயலணியை வழிநடத்தச் சிறுபான்மையினருக்கு எதிரான (குறிப்பாக முஸ்லிம்களுக்கு எதிரான) நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சர்ச்சைக்குரிய பௌத்தத் துறவியை அரசாங்கம் தேர்ந்தெடுத்தமை ஆகியன ஆவணங்களின் மூலம் நாடு உறுதியளித்துள்ள சர்வதேசக் கடப்பாடுகளுக்கும் அதன் நடவடிக்கைகளுக்கும் இடையே உள்ள இடைவெளியை அப்பட்டமாக எடுத்துக்காட்டுகின்றது.

இலங்கை சனத்தொகையில் 52 சதவீதம் பேர் பெண்கள்,[17] நாட்டின் பொருளாதாரத்திற்கு அவர்கள் முக்கிய வழிகளில் பங்களிக்கின்றனர். அந்நியச் செலாவணியை உருவாக்குவது என்று வரும்போது, தேயிலை உற்பத்தி, ஆடைத் தொழிற்துறைகள் மற்றும் வெளிநாட்டிலிருந்து அனுப்பப்படும் பணம் ஆகியவை முக்கிய பங்கு வகிக்கின்றன. பெண்கள் இந்தத் துறைகளில் முதுகெலும்பாக விளங்குகின்றனர். இவர்களில் பெரும்பாலான பெண்கள் கீழ் மட்ட வகுப்புகளைச் சேர்ந்தவர்களாகவும் உள்ளனர். இதன் விளைவாக, இலங்கை தனது சர்வதேச கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறும்போது, அது நாட்டில் உள்ள பெண்களைப் பல வழிகளில் பாதிப்பதைத் தவிர்க்க முடிவதில்லை. குறிப்பிட்ட சில சர்வதேசக் கடப்பாடுகளை நாடு முழுமையாக ஏற்றுக்கொள்ளத் தவறியதன் பால்நிலையாக்கப்பட்ட தாக்கங்கள் மிகத் தீவிரமாக களையப்பட வேண்டும். உதாரணமாக, மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை நீக்குவதற்கான ஐக்கிய நாடுகள் குழுவுடன் தொடர்புடைய கொள்கைகளை அமல்படுத்துகின்ற முன்னணி அமைப்பாகத் திகழ்கின்ற அதேவேளை, சர்வதேசக் கடப்பாடுகளை உள்ளூர் அளவில் இடம்பெறச் செய்கின்ற தேசிய மகளிர் சாசனத்தை நாடு ஏற்றுக்கொண்டிருந்தாலும் (பதிலுக்கு இது தேசிய மகளிர் குழு எனும் அமைப்பால் கண்காணிக்கப்படுகிறது), ஊதிய சமத்துவமின்மை, தெருவில் தொல்லை கொடுத்தல், பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை மற்றும் தொல்லை கொடுத்தல், வீட்டு வன்முறை, பாலியல் வல்லுறவு மற்றும் பெண் பிள்ளைகளைத் துஷ்பிரயோகம் செய்தல் போன்ற பல்வேறு பிரச்சினைகளை இது தடுக்கவில்லை.[18]

## 2. தேசியக் கடப்பாடுகள்

## ஒட்டுமொத்த மதிப்பெண்: 6

மதம் | **மதிப்பெண் : 6**

இனம் | **மதிப்பெண்: 5**

**அரசின் பன்மைத்தன்மையினை அரசியலமைப்பு வெளிப்படையாக அங்கீகரிக்கின்றது, மேலும், இது தொடர்பான ஒரு தேசிய சட்டக் கட்டமைப்பினை நீதிமன்றங்கள் பற்றிப்பிடித்துள்ளன**

இலங்கையில் பன்மைவாதத்தினை மேம்படுத்தும் சட்டங்கள் விரிவானவையாகவும் வித்தியாசமானவையாகவும் உள்ளன. இவ்வாறான சட்டங்கள் அரசியலமைப்பினுள்ளும் ஏனைய நியதிச்சட்டங்களினுள்ளும் பொதிந்துள்ளன. உதாரணமாக, சமயச் சுதந்திரம் என்ற அடிப்படையில் நோக்குகையில், நாடு உயர்ந்த ஸ்தானத்திலுள்ளது, மேலும் 1978 ஆம் ஆண்டில் இருந்து, சிங்களமும் தமிழும் அரசகரும மொழிகளாகக் கருதப்பட, ஆங்கிலம் இணைப்பு மொழியாக விபரிக்கப்படுகின்றது. ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழ் உருவாக்கப்பட்ட சட்டங்களின் பிரகாரம், சொத்து, வாரிசுரிமை மற்றும் திருமணம் போன்ற விடயங்களை யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழும் தமிழ் மக்கள் கையாளுவதை பல்வேறு தனியார் சட்டங்கள் அனுமதிக்கின்ற அதேவேளை, முற்காலக் கண்டி ராசதானியைச் சேர்ந்த சிங்களவர்கள் பாரம்பரிய நடைமுறைகள் மற்றும் நியதிச்சட்டங்களுக்கு அமைவாகத் தம் நடைமுறைகளைப் பின்பற்றுகின்றனர். இதேபோன்று, முஸ்லிம்களின் திருமணத்தினையும் விவாகரத்தினையும் முஸ்லிம் தனியார் சட்டங்கள் ஆளுகை செய்வதுடன், முஸ்லிம் வக்ப் சட்டமானது முஸ்லிம் பள்ளிவாயல்களையும் அறக்கொடை நம்பிக்கைநிதியங்களையும் நிர்வகிக்கின்றது. ஒரு நாடு, ஒரு சட்டம் எனத் தற்போதைய அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சியானது குறிப்பாக முஸ்லிம் தனியார் சட்டத்தினை இலக்குவைப்பதாகவே தோன்றுகின்றது.[19] அத்துடன், உத்தேச மறுசீரமைப்புக்களின் தன்மையானது நாட்டின் பன்மைவாதத்தினை இன்னும் செயற்திறனற்றதாக்கலாம். இதேபோன்று, இன நல்லுறவினைச் சீர்குலைக்க முயற்சிக்கும் எவரையும் தடுத்துவைப்பதற்கு அதிகார அமைப்புக்களை அனுமதிக்கும் 2021 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச் சட்டம் முஸ்லிம்களையும் இலக்குவைக்கும் ஒன்றாகவே தென்படுகின்றது.[20] நாட்டில் நிதி நெருக்கடி உருவாகி பாரிய எதிர்ப்பாட்டங்களினால் ஜனாதிபதி கோதபாய ராஜபக்ஷ பதவி துறக்க நிர்ப்பந்திக்கப்பட்டதில் இருந்து முஸ்லிம்களுக்கு எதிரான உணர்வலைகள் குறைவடைந்துள்ளன என்றாலும், சில அரசியல்வாதிகளின் முஸ்லிம் எதிர்ப்பு மனோபாவத்தின் காரணமாக புர்காவினைத் தடைசெய்யும் அமைச்சரவை உத்தரவு (இதற்குப் பாராளுமன்ற அங்கீகாரம் தேவைப்படுகின்றது) தொடர்ந்தும் காணப்படுகின்றது.[21]

அரசின் பன்மைத்தன்மையினை அரசியலமைப்பு வெளிப்படையாக அங்கீகரிக்கின்றது, மேலும், இது தொடர்பான ஒரு தேசிய சட்டக் கட்டமைப்பினை நீதிமன்றங்கள் பற்றிப்பிடித்துள்ளன. பன்மைவாதத்துடன் தொடர்புடைய பல சட்ட ஏற்பாடுகள் இலங்கையின் சட்ட முறைமையில் காணப்படுகின்றன. குறிப்பாக, சமயச் சுதந்திரத்தினையும் (உறுப்புரை 10) ஒவ்வொரு பிரசையும் தமது சமயத்தினைப் பகிரங்கமாகப் பின்பற்றுவதற்கு அவர்களுக்கு இருக்கும் சுதந்திரத்தினையும் (உறுப்புரை 14(1)(உ)) அரசியலமைப்பு அங்கீகரிக்கின்றது. "இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியற் கொள்கை அல்லது பிறப்பிடம் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் எந்த ஒன்று காரணமாகவும் ஓரங்கட்டப்படுவதில் இருந்தும் அரசியலமைப்பு பாதுகாப்பளிக்கின்றது" (உறுப்புரை 12(2)). அரசியலமைப்பின் 18 ஆம் உறுப்புரை சிங்களத்தினையும் தமிழையும் அரசகரும மொழிகளாகவும் ஆங்கிலத்தினை இணைப்பு மொழியாகவும் அங்கீகரிக்கின்றது.

எவ்வாறாயினும், இவ்வாறான ஏற்பாடுகள் இருந்தும், மொழிகள் மற்றும் சமயம் என்ற இரண்டு விடயங்களும் வருகையில், அரசியலமைப்பு ஓர் அதிகாரப் படிநிலையினைச் சுட்டிக்காட்டுகின்றது. உதாரணமாக, இலங்கையின் அரசகரும மொழி சிங்களம் என அது குறிப்பிடுகின்றது. அதே சந்தர்ப்பத்தில், அடுத்து வரும் வாசகத்தில்,

தமிழும் அரசகரும மொழியாக இருக்கும் எனக் குறிப்பிடுகின்றது. சமயம் என வரும்போது, பௌத்தமே அதியுன்னத இடத்தினைக் கொண்டுள்ளது என அது மொட்டையாகக் குறிப்பிடுவதுடன் பௌத்தத்தினை மேம்படுத்திப் போஷிப்பது அரசின் கடமை எனக் குறிப்பிடுகின்றது.

பௌத்தத்திற்கான சிறப்புரிமைமிக்க அந்தஸ்து 1972 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனை 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்புப் பேணியது. அரசகரும மொழிகளுடன் தொடர்புடைய சொற்பதவியல், 1956 ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டமொன்றின் மூலம் சிங்களம் மாத்திரமே அரசகரும மொழியாக்கப்பட்டு 1972 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் மூலம் வலுப்படுத்தப்பட்ட சர்ச்சைக்குரிய வழியில் இருந்து தோற்றம் பெறுகின்றது. சுதந்திரத்தினைத் தொடர்ந்து இந்தியத் தமிழர்கள் (பிரதானமாகத் தேயிலைப் பெருந்தோட்டங்களில் வேலை செய்பவர்கள்) பிரசாவுரிமையினைப் பெற்றுக்கொள்வதைத் தடைசெய்த கொள்கைகளே பாகுபாடுமிக்க இந்த மொழிச் சட்டவாக்கத்திற்கான முன்நிகழ்வாக அமைந்திருந்தது. இருப்பினும், கிட்டத்தட்ட இலங்கையிலுள்ள சகல இந்தியத் தமிழர்களும் இப்போது பிரசாவுரிமையினைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

## 3. உள்ளடக்கும்தன்மை மிக்க பிரசாவுரிமை

## ஒட்டுமொத்த மதிப்பெண்: 8

மதம் | **மதிப்பெண் : 8**

இனம் | **மதிப்பெண்: 8**

தற்போது, இலங்கையர்களைப் பெற்றோராகக் கொண்ட, இலங்கையில் பிறந்த அனைவரும் பிரசாவுரிமையினைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாவர். அரசியலமைப்பு ரீதியாக, இனம், மதம், சாதி அல்லது அரசியற் கொள்கை ஆகியவற்றின் அடிப்படையில் பிரசாவுரிமை மறுக்கப்படலாகாது. “வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசை என்ற அந்தஸ்து பெறப்பட்டிருப்பினுஞ்சரி அல்லது பதிவு செய்வதன் பயனாக அத்தகைய அந்தஸ்து பெறப்பட்டிருப்பினுஞ் சரி, அதனை விவரித்துக் குறிப்பீடு செய்வதன் மூலம் இலங்கைப் பிரசைகளுக்கிடையே வேறுபாடு எதுவும் காட்டப்படுதல் ஆகாது” என அரசியலமைப்புக் குறிப்பிடுகின்றது.

நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னமே பதிவு செய்வதன் பயனாகப் பிரசாவுரிமை பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டவர்களையே கடைசி வாக்கியம் குறிப்பீடு செய்கின்றது.[22] பணமுடை கொண்ட அரசாங்கங்கள் அண்மைக் காலங்களில் ஊக்குவித்த இரட்டைப் பிரசாவுரிமை கொண்டவர்களையே வாசகம் குறிப்பீடு செய்கின்றது. 2020 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்புக்கான 20 ஆவது திருத்தத்தின் பிரகாரம், இரட்டைப் பிரசாவுரிமையுடையவர்களால் பாராளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட முடியும் மேலும் அவர்களை அமைச்சர்களாகவும் கூட நியமிக்க முடியும். அரசியலமைப்புக்கு 21 ஆவது திருத்தத்தினைக் கொண்டுவருவது தொடர்பாக நாடு விவாதித்துக் கொண்டிருக்கின்றது. இரட்டைப் பிரசாவுரிமையுடையவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் அமைச்சர்களாகவும் வருவதற்கான இயலுமையினை அனுமதிக்கும் வாசகத்தினை நீக்குவதா இல்லையா என்பதே இந்த விவாதித்தில் உள்ள ஒரு சர்ச்சைக்குரிய விடயமாகக் காணப்படுகின்றது.

இரட்டைப் பிரசாவுரிமையினைப் பொறுத்த அளவில், வெளிநாட்டுப் பிரசாவுரிமையினை எடுத்துள்ள தமிழர்கள் இலங்கைப் பிரசாவுரிமையினை மீளப் பெறுவதற்காக விண்ணப்பிக்கையில் கடுமையாகப் பரிசீலிக்கப்படுவதாகவே தென்படுகின்றது. பெரும்பான்மைச் சமுதாயத்தினைச் சேர்ந்தவர்களுக்கு அரசாங்கம் எவ்வாறு முந்துரிமை அளிக்கின்றது என்கின்ற காரணத்தினால், இலங்கையர்களாக இருப்பதை விடச்

**வம்சாவளி மூலமான பிரசாவுரிமைக்கும் அல்லது பதிவு செய்வதன் பயனாகப் பெற்ற பிரசாவுரிமைக்கும் இடையிலான வித்தியாசம், நாடு சுதந்திரம் பெற்ற அரசாக உருவெடுத்த நேரத்தின் போதான சர்ச்சைக்குரிய ஒரு பிரச்சினையினை நினைவுபடுத்து-கின்றது**

சிங்கள பௌத்தர்களாக இருப்பதே மிக முக்கியமானது என்னும் சிறுபான்மையினர் மத்தியிலான உணர்வுடன் இது பொருந்திச் செல்கின்றது. கொவிட் - 19 இனால் இறந்தவர்களை அடக்கம் செய்வதை அரசாங்கம் சில காலம் தடைசெய்தமையின் மூலம் இந்த உணர்வு மிக அப்பட்டமாக வலுப்படுத்தப்பட்டது. இந்தக் கொள்கை குறிப்பாக நாட்டின் முஸ்லிம்களுக்குப் பாரிய மன அதிர்வினை ஏற்படுத்தியது (தமது உறவுகளைத் தகனம் செய்ய விரும்பாத சில கிறிஸ்தவர்களுக்கும்).

வம்சாவளி மூலமான பிரசாவுரிமைக்கும் அல்லது பதிவு செய்வதன் பயனாகப் பெற்ற பிரசாவுரிமைக்கும் இடையிலான வித்தியாசம், நாடு சுதந்திரம் பெற்ற அரசாக உருவெடுத்த நேரத்தின் போதான சர்ச்சைக்குரிய ஒரு பிரச்சினையினை நினைவுபடுத்துகின்றது. 1948 ஆம் ஆண்டு சுநத்திரம் பெற்று சில காலமே ஆனதன் பின்னர் அரசாங்கம் பாராளுமன்த்தில் இலங்கை பிரசாவுரிமைச் சட்டத்தினை நிறைவேற்றியது. பிரசாவுரிமையினைப் பெறுவதற்கான வழிகளை வழங்குவதே இச்சட்டத்தின் வெளிவேடக் காரணமாக இருந்தது. ஆனால், இச்சட்டத்தின் உண்மையான நோக்கம் நாட்டிற்குள் அண்மைக் காலங்களில் வந்தேறிய இந்திய வம்சாவளித் தமிழர்களுக்குப் பிரசாவுரிமையினை மறுப்பதாகவே அமைந்திருந்தது. இந்த அநீதி 1988 ஆம் ஆண்டின் போதே மறுதலையாக்கப்பட்டது.

இந்தியத் தமிழர்கள் பிரசாவுரிமைக்கான உரிமையற்றவர்களாக இருந்த காலகட்டத்தில், சமூக நலனோம்புகை நிகழ்ச்சித்திட்டங்களுக்கான அணுகல் அவர்களுக்கு இருக்கவில்லை. இந்தப் பாரம்பரியம் இந்த மக்கள் குழுமத்தின் மீது தொடர்ந்தும் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தி வருகின்ற அதேவேளை, வாழ்க்கை நிலைமைகளும் கல்விக்கான வாய்ப்புக்களும் தொடர்ந்தும் சொல்லுந்தரமற்றவையாகவே காணப்படுகின்றன.[23] மேலும், தேயிலைப் பெருந்தோட்டங்களில் பிரதானமாக வாழும் இந்தத் தமிழ் மக்கள் தொடர்ந்தும் பெருந்தோட்ட முறைமையுடனேயே கட்டுண்டு கிடக்கின்றனர். இருப்பினும், பெருந்தோட்ட நிலைமைகளில் வெறுப்புக்கொண்ட இளம் பரம்பரையினர் அண்மைக் காலங்களில் நகரங்களில் உணவு பரிமாறுவோராகவும் கடைச் சிப்பந்திகளாகவும் தொழில் தேடிச் செல்லத் தொடங்கியுள்ளனர்.

# II. நடைமுறைகள்

# 4. கொள்கை அமுல்படுத்தல்
## ஒட்டுமொத்த மதிப்பெண்: 5.5

மதம் | **மதிப்பெண்: 6**

இனம் | **மதிப்பெண்: 5**

**பன்மைவாதத்தினை மேம்படுத்தும் சட்டங்களை முறைமைப்படுத்தும் விடயத்தில் இலங்கை உயர் ஸ்தானத்தினைப் பேணிவரும் அதேவேளை, நீண்ட காலம் நிலவிவரும் பேரினவாதத்தினாலும் இனத் தேசியவாத ஜனரஞ்சகவாதத்தினை நோக்கிச் செயற்படும் அரசியல்வாதிகளாலும் இந்தச் சட்டக் கட்டமைப்புக் கீழறுக்கப்படுகின்றது.**

பன்மைவாதத்தினை மேம்படுத்தும் சட்டங்களை முறைமைப்படுத்தும் விடயத்தில் இலங்கை உயர் ஸ்தானத்தினைப் பேணிவரும் அதேவேளை, நீண்ட காலம் நிலவிவரும் பேரினவாதத்தினாலும் இனத் தேசியவாத ஜனரஞ்சகவாதத்தினை நோக்கிச் செயற்படும் அரசியல்வாதிகளாலும் இந்தச் சட்டக் கட்டமைப்புக் கீழறுக்கப்படுகின்றது. 1950 களின் நடுப்பகுதியில் ஆரம்பித்த இச்செயன்முறை சிங்களம் மாத்திரமே தேசிய மொழியாக ஆக்கப்படுவதற்கும் அரச தொழில்வாய்ப்புக்களில் சிங்கள மொழி பேசுபவர்களுக்கு ஏனையோரை விட வெளிப்படையாகவே பரிவு காட்டப்படுவதற்கும் இட்டுச்சென்றது. இதன் விளைவாக, தற்போது அரச ஊழியர்களில் 90 சதவிகிதத்திற்கும் அதிகமானவர்கள் சிங்களவர்களாக இருக்கின்றனர். இராணுவ ஆளணியினரில் சிங்களவர்களின் எண்ணிக்கை 95 சதவிகிதத்திற்கும் அதிகமாகக் காணப்படும் வாய்ப்பே நிலவுகின்றது.[24] நாட்டில் 15 லட்சத்திற்கும் மேற்பட்ட அரச ஊழியர்கள் காணப்படுகின்ற காரணத்தினால் (செயற்படுவதற்கு அரசுக்கு இந்த எண்ணிக்கையில் அரைவாசியே போதும் என நிர்வாகத்தர்கள் கூறுவதைத் தாண்டி),[25] இவ்வாறான ஆட்சேர்ப்புக்கள் ஒரு பன்மைவாத அரசாங்கத்தினை விட ஓர் குறிப்பிட்ட இனத்துக்குப் பரிவு காட்டப்படுவதையே பெரிதும் ஒத்திருக்கின்றது.

பணித்துறைப் பதவிகள் உயர்வானதாக இருக்கையில் சிறுபான்மையினரைப் பாதிக்கும் பக்கச்சார்புகளும் அதீதமானவையாக இருக்கின்றன. உதாரணமாக, அரசாங்க நிர்வாக உத்தியோகத்தர் ஒருவரினால் ஓர் அமைச்சின் செயலாளர் அந்தஸ்து வரையில் பதவியில் உயர முடியும். ஆனால், 2021 ஆம் ஆண்டின் போது, அரசாங்க அமைச்சுக்களுக்கான 32 செயலாளர்களுள் ஒருவர் கூட இன – மதச் சிறுபான்மையினரில் இருந்து வரவில்லை. மேலும், இரண்டாம் மட்ட அமைச்சுக்களைக் கொண்ட 42 இராஜாங்க அமைச்சுக்களில், ஒரு செயலாளர் மாத்திரமே சிறுபான்மைச் சமுதாயத்தினைச் சேர்ந்தவராக உள்ளார். ஜனாதிபதி கோதபாய ராஜபக்ஷ 2022 மே மாதத்தில் புதிய அமைச்சுச் செயலாளர்களை நியமித்த வேளை, அதில் ஒருவர் கூட இனச் சிறுபான்மைச் சமுதாயத்தினைச் சேர்ந்தவராக இருக்கவில்லை. சனத்தொகையில் 25 சதவிகிதமானவர்கள் சிறுபான்மையினராக இருந்தும் இந்த நிலையே காணப்பட்டது.

அரசியல் பழிவாங்கல்கள் பற்றி ஆராய்வதற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் தமிழ்ப் பதிப்புருவானது எவ்வாறு அறிக்கையின் பெரும் பகுதியினை உள்ளடக்கியிருக்கவில்லை என்பது தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினரான எம் ஏ சுமந்திரனால் கோடிட்டுக்காட்டப்பட்ட போது எழுத்திலான கொள்கைக்கும் அமுல்படுத்தலுக்கும் இடையிலான இடைவெளி அண்மையில் வெளிப்படையாகத் தெரியவந்தது. சுமந்திரனின் கருத்தின்படி, 2043 பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கையின் அத்தியாயம் II முழுவதுமே தமிழில் எழுதப்பட்டிருக்கவில்லை என்பதுடன் விடுபட்ட பக்கங்களுள் 160–554, 570–608, 667–1556 மற்றும் 1565–2043 பக்கங்கள் உள்ளடங்கியிருந்தன.[26] அரசாங்கத்தினுள் தமிழைச் சமமான மொழியாக நடத்துவதில் காட்டப்படும் இந்த அலட்சியம் சிங்கள மொழியில் செயற்படுவோர் மத்தியில் இருந்து வரும் ஒரு தொடர்ச்சியான முறைப்பாடாக உள்ளது.[27] இதனால், தமிழ் மொழி பேசுவோர்களுக்குச் சிங்கள மொழியில் வழங்கப்படும் அரசாங்கப் படிவங்கள் தொடர்பாகவும் சிங்களம் வாசிக்கவும் எழுதவும் தெரியாதவர்கள் பொலிஸ் நிலையங்களில் சிங்களத்தில் வாக்குமூலங்களில் ஒப்பமிடுமாறு நிர்ப்பந்திக்கப்படுவது தொடர்பாகவும் நாளாந்தம் பரவலான முறைப்பாடுகள் வந்தவாறே உள்ளன.

**பெண்களின் கல்வி என்று நோக்குகையில், ஏனைய சக தெற்காசிய நாடுகளை விட இலங்கையின் செயற்பாடுகள் மிகச் சிறப்பானதாக இருந்த போதிலும் இலங்கை தொடர்ந்தும் ஓர் ஆண் தலைமைச் சமூகமாகவே விளங்குகின்றது.**

மொழியியல் ரீதியாக அரசாங்கச் சேவைகளுக்கான சமமான அணுகலை உறுதிப்படுத்துவதற்குத் தவறுகின்றமை, மிகவும் விளிம்புநிலையிலுள்ளவர்களைக் குறிப்பாகப் பாதிக்கின்றது. சிங்கள வறிய மக்களுக்குச் சிங்கள மொழி பேசத் தெரியும் என்ற காரணத்தினால் அவர்களால் அரச பணித்துறை முறைமையினை இலகுவாகக் கடந்துசெல்ல இயலுமாக இருக்கின்ற அதேவேளை, சமூக – பொருளாதார ரீதியாக விளிம்பு நிலையில் வாழும் தமிழ் பேசும் மக்கள் அரசுடன் ஈடுபாடு கொள்ள நாடுகையில் மேலதிகத் தடைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். 2009 ஆம் ஆண்டு சிவில் யுத்தம் முடிவடைந்தாலும் முடிவுறாத செயன்முறையான வடகிழக்கின் இராணுவமயமாக்கம் குறிப்பாகத் தமிழ்ப் பெண் தலைமைக் குடும்பங்களைப் பாதிப்புறுநிலைக்கு ஆளாக்குகின்றது. ஏனெனில், இந்தக் குடும்பங்களுக்குப் பொறுப்பாக இருக்கும் பெண்கள், தமிழில் செயற்படுவதற்கான எந்தக் காரணமும் கொண்டிராத சிங்களப் படைவீரர்களின் மத்தியில் பிரதானமாகத் தமது வாழ்வாதாரங்களைத் தேடவேண்டிய கட்டாயத்தில் இருப்பதால் ஆகும்.[28]

எனவே, 1956 ஆம் ஆண்டிற்கும் 1977 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், இலங்கை, கொள்கை அளவில் மிகவும் பன்மைவாத நாடாக இருக்கின்றது என எவரும் வாதிடக் கூடும் எனினும் கள யதார்த்தமானது அவ்வாறான எடுகோளைச் சவாலுக்கு உட்படுத்துகின்றது. ஏனெனில், ஒரு புறம், இலங்கையர்கள் அவர்களின் மதத்தினை சுதந்திரமாகவும் பகிரங்கமாகவும் அனுஷ்டிக்கவே செய்கின்றனர்; மறு புறத்தில், பௌத்தர்களல்லாத சகலரும் பௌத்தத்திற்கும் அதன் பிரதிநிதிகளுக்கும் தெளிவாகத் தெரியும் வகையிலான பணிவிணக்கத்தினை வெளிப்படுத்தியே அவ்வாறு தம் மதங்களை அனுஷ்டிக்கின்றனர். பல்வேறு சந்தர்ப்பங்களில், கத்தோலிக்கர்களுக்கும் கிறிஸ்தவத் தூதுப் பணியாளர்களுக்கும், மிக அண்மையில், முஸ்லிம்களுக்கும் அவர்களின் பள்ளிவாயல்களுக்கும் எதிராகத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. கிராமப் பிரதேசங்களில், வாடகைக் குடியிருப்புக்களைத் தேடுகையிலும் வணக்கத்தலங்களை அமைப்பதற்காக இடம் தேடுகையிலும் குறிப்பாகத் தூதுப் பணியாளர்கள் அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுத்துள்ளதுடன் அப்பட்டமான பக்கச்சார்புகளுக்கும் முகங்கொடுத்துள்ளனர். இவ்வாறான பாகுபாடுமிக்க செயற்பாடுகளுக்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக அனேகமாக ஒருபோதுமே சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை. ஏனெனில் பொலிசாரும் அரச அதிகாரிகளும் குற்றமிழைக்கும் பௌத்தர்களின் பக்கம் சார்வதால் அவர்கள் வழமையாகவே அரசியல் அனுசரணையினை அனுபவிக்கின்றனர்.[29]

மொழி ரீதியாகவும் மத ரீதியாகவும் வேறான பாடசாலைகள் அமைக்கப்பட்டுள்ளமையும் பன்மைவாதத்தினைப் பாதித்துள்ளது. ஏனெனில் இது இன மற்றும் சமயச் சமுதாயங்கள் ஒருவர் மற்றவருடன் இணைந்து கலப்பதைத் தடுக்கின்றது. பாடசாலையில் மூன்றாம் மொழி ஒன்றினைப் போதிப்பது (ஆங்கிலத்திற்கு மேலதிகமாகச் சிங்களம் அல்லது தமிழ்) உறவுப் பாலமாக அமைவதற்கான சாத்தியத்தினைக் கொண்டுள்ளது. ஆனால், இது இணைந்து கலப்பதை மேம்படுத்தாது, ஏனெனில் இந்த நாட்டு மாணவர்கள் அவர்களின் பாடசாலை வாழ்க்கையினை இனச் சமயக் கட்டுக்கோப்புக்களுக்குள் முன்னெடுப்பதாலாகும்.

பெண்களின் கல்வி என்று நோக்குகையில், ஏனைய சக தெற்காசிய நாடுகளை விட இலங்கையின் செயற்பாடுகள் மிகச் சிறப்பானதாக இருந்த போதிலும் இலங்கை தொடர்ந்தும் ஓர் ஆண் தலைமைச் சமூகமாகவே விளங்குகின்றது. இந்த ஆண் தலைமைப் பண்பும் மதமும் ஒன்றிணைகையில், அது சில மதச் சமுதாயங்களை ஏனையவற்றினை விட அதிகமாக விளிம்புநிலைக்குத் தள்ளுகின்றது. நாட்டின் முஸ்லிம் பெண்கள் தொடர்பாக இந்த நிலையே காணப்படுகின்றது.[30] ஆயிரக்கணக்கான பெண் தலைமைக் குடும்பங்கள் குறிப்பாக நாட்டின் வட மாகாணத்தில் உருவாகுவதற்குச் சிவில் யுத்தம் வழியமைத்ததுடன் இப்பிரதேசத்திலுள்ள பல பெண்கள், அரச அதிகாரிகளிடம் இருந்து கிடைக்கும் அற்ப சொற்ப உதவிகளுடன் அல்லது அவ்வாறான எந்த உதவியும் இல்லாது தம்மைச் சூறையாட முனையும் சக்திகளுக்கு எதிராகப் போராடுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் (அவர்களின் தமிழ்ச் சமுதாயத்தினுள்ளும் அதற்கு வெளியேயும்).[31]

1977 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கை இன – சமய ரீதியிலான ஏற்றத்தாழ்வுகளை ஆழப்படுத்தியது, குறிப்பாக, கிராமப் புறங்களில் வாழ்வோர் இவ்வாறான ஏற்றத்தாழ்வுகளுக்கு முகங்கொடுத்தனர். கொவிட் 19 பெருந்தொற்றும் அதனைத் தொடர்ந்து வந்த நடமாட்டத் தடையும் இந்த ஏற்றத்தாழ்வுகளை முனைப்பாக்கியுள்ளது. உதாரணமாக, இணைய அணுகலைக் கொண்டிராத மாணவர்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டுள்ள அதேவேளை, நாட்கூலிகள் அவர்களின் குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகளை வழங்குவதற்கே போராடி வருகின்றனர் – எங்கும் வியாபித்துள்ள பணவீக்கத்தின் காரணமாகவும் உணவுப் பற்றாக்குறையின் காரணமாகவும் இந்த நிலைமை மோசமாக்கப்பட்டுள்ளது. 75.1 சதவிகிதமானவர்கள் தமது வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளதாகக் குறிப்பிடுகின்றனர் எனக் காட்டும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அண்மைய கணிப்பீடு இதனை ஊர்ஜிதப்படுத்துகின்ற அதேவேளை, இந்தியத் (பெருந்தோட்ட) தமிழர்களே கொவிட் 19 உடன் தொடர்புறும் பொருளாதாரச் சூழ்நிலைகளினால் விகிதாசாரமற்ற வகையில் பாதிக்கப்பட்டுள்ளனர்.[32] சுகாதாரக் கொள்கைக்கான நிறுவனத்தின் (IHP), 2021 நவம்பர் கணிப்பீட்டின் பிரகாரம், நாட்டின் பொருளாதாரம் மோசமடையும் என வளர்ந்தவர்களில் 72 சதவிகிதமானவர்கள் எதிர்பார்த்தனர் என்பதுடன் இந்த எதிர்ப்பார்பு இப்போது யதார்த்தமாகியுள்ளது.[33]

## 5. தரவுச் சேகரிப்பு

## ஒட்டுமொத்த மதிப்பெண்: 5

மதம் | **மதிப்பெண்: 5**

இனம் | **மதிப்பெண்: 5**

இலங்கையின் மட்டுப்படுத்தப்பட்ட பரப்பெல்லை காரணமாகவும் உயர் எழுத்தறிவு வீதத்தின் காரணமாகவும் இலங்கையின் ஒட்டுமொத்தத் தரவுச் சேகரிப்பானது பாராட்டத்தக்க தரத்தில் காணப்படுகின்றது. மத்திய வங்கியும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களமுமே நாட்டின் பொருளாதார மற்றும் சமூகத் தரவுச் சேகர மூலங்களில் முன்னணியில் உள்ளன. இத்திணைக்களங்களின் தரவுகளுக்கு வெரிடே ஆய்வு மற்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் போன்ற சிந்தனைக் கருவூலங்களினதும் ஆசியா சொசைட்டி, உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்ற சர்வதேச அமைப்புக்களினதும் பல்வேறு ஆய்வுகள் துணை சேர்க்கின்றன.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் பொருளாதாரத் தரவுகளையும் சமூகத் தரவுகளையும் கிரமமாகச் சேகரிக்கின்றது. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் பத்தாண்டுகளுக்கு ஒரு தடவை நடத்தப்படும் குடிசன, வீட்டுவசதிகள் தொகை மதிப்பீடே மிக அதிகமாகப் பயன்படுத்தப்படும் குடிசனவியல் தரவாகும். குடிசன, வீட்டுவசதிகள் தொகை மதிப்பீடு கடைசியாக 2012 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. இந்த மதிப்பீடு வயது - பால் ஆக்கவமைவு, சார்ந்திருக்கும் குடிசனம், திருமண அந்தஸ்து, இனம் மற்றும் மதம், எழுத்தறிவு மற்றும் கல்வி, தொழிற்படை, தொழில், புலப்பெயர்வு மற்றும் குடிசனக் கருவளம் ஆகியவை பற்றிய எண்ணிக்கைகளை வழங்குகின்றது. குடிசனப் புள்ளிவிபரங்களும் குடிசனவியல் புள்ளிவிபரங்களும் தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் கிராமிய மட்டங்களில் கணக்கிடப்படுகின்றன. இத்தரவுகள் நகர, கிராமிய மற்றும் பெருந்தோட்டத் துறைகள் என்பவற்றுக்கு அமைவாக வேறாக்கப்படுகின்றன. பெருந்தோட்டத் துறைகள் தேயிலைப் பெருந்தோட்டங்கள் மற்றும் இறப்பர் பெருந்தோட்டங்கள் நிறைந்துள்ள பிரதேசங்களைக் குறிக்கின்றன.

இக்குடிசனவியல் தரவுகளுடன், சுகாதாரம், வருமானம் மற்றும் செலவு, தொழில் மற்றும் பெண்களின் நலனோம்புகை ஆகியவை பற்றிய பருவகாலக் குடும்பக் கணிப்பீடுகள்

**தரவுச் சேகரிப்பினை மேற்கொள்வதற்கான அரசின் ஆற்றலின் காரணமாக, இன – மதக் குழு ஏற்றத்தாழ்வுகளைக் குறித்துக்காட்டும் தகவல்களைச் சேகரிப்பதில் அரசாங்கம் ஆர்வம் காட்டாமை சந்தேகத்துக்குரியதாகவே உள்ளது.**

இணைக்கப்படுகின்றன. குறிப்பாகக் குழுச் சமத்துவமின்மைகளுடன் தொடர்புடைய தரவுச் சேகரிப்பு இல்லாமையே இதில் பாரிய இடைவெளியாகக் காணப்படுகின்றது. எனவே, மதம் மற்றும் பால்நிலை தொடர்பான குழுச் சமத்துவமின்மைகளை ஒருவர் அறிந்துகொள்ள விரும்புகையில், அது மாவட்ட மட்டத் தரவுகளைப் பயன்படுத்தியே அண்ணளவாக்கப்பட வேண்டியுள்ளது. அரசாங்கத் திட்டமிடல் என்பது குழுச் சமத்துவமின்மைகளுக்கு மாறாகப் பிராந்திய ஏற்றத்தாழ்வுகளையே அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பதே இதன் அர்த்தமாகவுள்ளது. அரசாங்க முகவர்கள் சார்பளவில் சிறந்த தரவுகளைக் கொண்டிருந்த போதிலும் கூட, இன மதக் குழுக்களைப் பாதிக்கும் பேதங்களைக் கருத்தில் கொள்ளாது தேசிய மட்டத்தில் கொள்கைகள் உருவாக்கப்படுவாதாகவே தோன்றுகின்றது.[34]

நாட்டின் பல நிர்வாகப் பிரிவுகளில் அதிகமான மக்கள் ஒரே இனத்தினைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுவதால் சில குறிப்பிட்ட பிரதேசங்களில் இருந்து இனங்களுக்கு இடையிலான வித்தியாசங்கள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பது சாத்தியமானது என்பது முக்கியமாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். 2015 ஆம் ஆண்டின் உலக வங்கி வறுமை மதிப்பீட்டின் படி, சிவில் யுத்தம் பிரதானமாக இடம்பெற்ற வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் பெருந்தோட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு விவசாயம் இடம்பெறும் பிரதேசங்களிலும் தென்கிழக்கு மாகாணத்தில் மிகப் பெரும்பான்மையாகச் சிங்களவர்கள் வாழும் மொனராகல மாவட்டத்திலும் உயர் மட்டத்திலான வறுமைக்கு முகங்கொடுக்கும் எத்தனிப்புக்கள் காணப்படுகின்றன.

தரவுச் சேகரிப்பினை மேற்கொள்வதற்கான அரசின் ஆற்றலின் காரணமாக, இன – மதக் குழு ஏற்றத்தாழ்வுகளைக் குறித்துக்காட்டும் தகவல்களைச் சேகரிப்பதில் அரசாங்கம் ஆர்வம் காட்டாமை சந்தேகத்துக்குரியதாகவே உள்ளது. பெரும்பான்மைச் சமுதாயத்தினை விடச் சிறுபான்மைச் சமுதாயங்கள் எந்த அளவுக்குப் பின்தங்கியுள்ளன என்பதை அரசாங்கம் குறைத்துக் கூற விரும்புகின்றது என்பதே இது குறித்து நிற்கும் சாதாரண விடயமாகும். இது தொடர்பாக நோக்குகையில், வட மாகாணத்தில் பெண் தலைமைக் குடும்பங்களின் நிலையானது, ஏனைய அனைத்துக் குடும்பங்களை விடவும் பின்தங்கியதாக இருப்பதற்கான சாத்தியமே காணப்படுகின்றது.

# 6. கோரிக்கை விடுத்தலும் போட்டியும்

## ஒட்டுமொத்த மதிப்பெண்: 6

மதம் | **மதிப்பெண்: 6**

இனம் | **மதிப்பெண்: 6**

சொல்லுந்தரமற்ற ஆளுகை காணப்படினும் இலங்கை தொடர்ந்தும் ஒரு வலுவான ஜனநாயகமே விளங்குகின்றது. தனிநபர்கள் அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தல் என வருகையில் இந்த நிலை குறிப்பாகக் காணப்படுகின்றது. இவ்வாறு ஆர்ப்பாட்டம் செய்வதற்கான உரிமை அரசியலமைப்பு ரீதியாகப் பாதுகாக்கப்பட்டுள்ளதுடன் கோதபாய ராஜபக்ஷ அரசாங்கத்தின் கீழ் அதிகரித்துக் காணப்பட்ட விலைவாசிக்கு எதிராகவும் அத்தியாவசியப் பண்டங்களுக்கான பற்றாக்குறைக்கு எதிராகவும் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள் இதற்கான உதாரணமாகும். இதன் இறுதி விளைவாக, தொழிற் சங்கங்கள் மற்றும் இன – மதச் சமுதாயங்கள் எனப் பல்வகைமை மிக்க குழுக்கள் சிவில் சமூகம் மூலமாகவும் நீதிமன்றங்கள் மூலமாகவும் அரசாங்கத்திற்கு எதிரான முறைப்பாடுகளைத் தயாரித்துப் பிரசித்தப்படுத்தியுள்ளன. சிலவேளைகளில், குற்றச்சாட்டுக்களும் எதிர்க்குற்றச்சாட்டுக்களும் வன்முறையில் முடிவடையலாம். எதிராளிச் சங்கங்கள் அரசியல் கட்சிகளுடன் இணைந்து ஒன்று மற்றொன்றுடன் முரண்படுகையில் இது நிகழ்வதற்கான எத்தனிப்புக் காணப்படுகின்றது.

**எதிராளிச் சங்கங்கள் அரசியல் கட்சிகளுடன் இணைந்து ஒன்று மற்றொன்றுடன் முரண்படுகையில் இது நிகழ்வதற்கான எத்தனிப்புக் காணப்படுகின்றது.**

மக்களின் நடமாட்டத்தில் இன - மதத் தேசியவாதம் ஒரு முன்னணி வகிபாத்திரத்தினை வகித்துவருகின்றது. ஆனால் இது இலங்கை ஜனநாயகத்தினைப் பொறுத்த அளவில் ஒரு வரமாகவும் சாபமாகவும் இருந்து வருகின்றது. ஒருபுறம் மக்கள் அவர்களின் துயரங்களையும் நியாயமான கரிசணைகளையும் கோடிட்டுக்காட்டுவதற்கு அது மக்களை வலுவூட்டும் அதேவேளை மறுபுறத்தில் நாட்டின் குடிசனவியல் சிங்களவர்களுக்கும் பௌத்தர்களுக்கும் அதீத பரிவு காட்டுவதால் அது பெரும்பான்மையானோரின் விருப்பங்களுக்கு ஏற்பத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவதை இயலுமாக்கியுள்ளது. எனவே, 1956 தொடக்கம், பெரும்பான்மைச் சிங்கள பௌத்தர்களின் கோரிக்கைகள் சிறுபான்மையினரின் நியாயமான கரிசணைகளை விலையாகக் கொடுத்தே திடப்படுத்தப்பட்டுள்ளன. அதிகமான விடயங்கள் தொடர்பாக அரசாங்கத்திற்கு எதிராகக் கிட்டத்தட்ட அனைத்து இலங்கையர்களாலும் குற்றச்சாட்டுக்களை முன்வைக்க முடியுமாக இருக்கும் அதேவேளை, பெரும்பான்மைச் சமுதாயத்தினைச் சேர்ந்தவர்களுக்குப் பிரதானமாக பதிற்செயற்பாடாற்றும் எத்தனிப்பினையே அரசாங்கங்கள் கொண்டுள்ளன என்பதையும் சிங்கள பௌத்தப் பெருவிருப்புக்கள் தொடர்பில் அரசாங்கங்கள் ஆக்ரோஷமான நிலைப்பாட்டினையே பெரிதும் விரும்புகின்றன.

குறிப்பாகச் சிவில் யுத்தத்துடன் தொடர்புடைய பிரச்சினைகள் என வருகையில் இந்த நிலை காணப்படுகின்றது. உதாரணமாக, சிவில் யுத்தத்திற்கு ஒரு சமாதானத் தீர்வு வேண்டும் என ஆதரித்துவாதாடிய அரசியல் கட்சிகளும் சிவில் சமூகமும் துன்புறுத்தப்பட்டதோடு மாத்திரமன்றி, யுத்தத்தின் பின்னர் அவர்கள் கண்காணிக்கப்பட்டு யுத்தத்துடன் தொடர்புடைய அட்டூழியங்கள் பற்றிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சுய தணிக்கை செய்யுமாறு பலவந்தப்படுத்தப்பட்டனர்.[35] சிவில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தின் போது தேசப்பற்றாளர்கள் மற்றும் தேசத்துரோகிகள் எனக் கருதப்படுவர்கள் பற்றிய ஒரு கூற்றுரை வேண்டுமென்றே தூண்டிவிடப்பட்டதுடன் இராணுவத்திற்கும் அதன் நடவடிக்கைகளுக்கும் ஆதரவு தெரிவித்தவர்கள் தேசப்பற்றாளர்கள் என முத்திரை குத்தப்பட்டு, இராணுவ நடவடிக்கைகளை விமர்சித்தவர்கள், அந்த நடவடிக்கைகள் எந்த அளவு ஊழல்மிக்கதாகவும் வெறுக்கத்தக்கதாக இருந்தபோதிலும், அவர்கள் தேசத்துரோகிகள் எனக் கருதப்பட்டனர்.[36]

குறிப்பாக ராஜபக்ஷ குடும்பம் எப்போதெல்லாம் அதிகாரத்தில் இருந்ததோ அப்போதெல்லாம் இந்தச் சூழல் முனைப்புடன் காணப்பட்டது. ஆனால், எந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும், இராணுவத்தினைப் பற்றித் தவறாகப் பேசுவது தடைசெய்யப்பட்ட ஒன்று என்பதை அனைவரும் உணர்ந்துள்ளனர். யுத்தத்தின் போது காணமற்போன தமது அன்புக்குரியவர்களைக் கண்டுபிடிக்க நாடிய தமிழ் மக்களை இது குறிப்பாகப் பாதித்துள்ளது. வடக்குக் கிழக்கில் தமது காணிகள் இன்னும் மீள ஒப்படைக்கப்படாமல் இருக்கும் தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் இது பாதிக்கின்றது. இந்த மக்களும் இவர்களின் பிரதிநிதிகளும் அரசாங்கத்திற்கு எதிராகக் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கான சுதந்திரத்தினைக் கொண்டுள்ள போதிலும், அவ்வாறான குற்றச்சாட்டுக்கள் இராணுவத்துடன் தொடர்புடையதாக இருக்கையில் இம்மக்கள் சிறிய அளவிலான மாற்றங்களைச் செய்து முடிப்பதற்கான எத்தனிப்புக்களையே கொண்டுள்ளனர்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் நீதிமன்றங்களும் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கான இடங்களாக உள்ளன. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் குழுக்களினதும் சமுதாயத்தினதும் உரிமை சார்ந்த பிரச்சினைகளைப் பெற்று அவற்றினை விசாரிக்க முடியும் என்ற போதிலும், உயர் நீதிமன்றம் மூலமாகவும் மேன்முறையீட்டு நீதிமன்றம் மூலமாகவும் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதென்பது மிகவும் முறைசார்ந்ததாக இருப்பதற்கான எத்தனிப்புக்களே காணப்படுகின்றன. சட்டமா அதிபர் அலுவலகத்தில் பணியாற்றிய பின்னர் மேல் நீதிமன்றங்களுக்கு நியமிக்கப்படும் எண்ணற்ற தனிநபர்கள் காரணமாக இலங்கை நீதிமன்றங்கள் நீண்ட காலமாக ஜனாதிபதி சார்பு மனோபாவத்தினால் பாதிக்கப்பட்டு வருகின்றன.[37]

நீதிமன்றங்களின் மூலமாக அரசிற்கு எதிராகக் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்குச் சுதந்திரம் உள்ளது என்பதுடன் அவ்வாறான வழக்குகளை முன்னெடுப்பதற்குச்

சட்டத்தரணிகள் தயாராக உள்ளனர். இவ்வாறான வழக்குகளை விசாரிப்பதை நீதிமன்றங்கள் நிராகரித்த சந்தர்ப்பங்களும் உள்ளன. உதாரணமாக, கொவிட் பெருந்தொற்றினால் இறந்தவர்களின் உடல்களைத் தகனம் செய்வதைக் கட்டாயமாக்கும் அரசாங்கத்தின் ஒழுங்குவிதிகளுக்கு எதிராக முஸ்லிம் சமுதாய உறுப்பினர்களினால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை உயர் நீதிமன்றம் நிராகரித்தது. எவ்வாறாயினும், எதிர்க் குற்றச்சாட்டுக்களுக்குத் தீர்வு காணப்படும் வரையில் சடலங்கள் பிணவறையில் வைத்திருக்கப்பட வேண்டும் எனக் கட்டளையிட்டதன் மூலம் தகனம் செய்வதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்தினைத் தாமதப்படுத்தச் சில கீழ்நிலை நீதிமன்றங்கள் முயற்சித்தன. சிறுபான்மையினரின் மத உரிமைகளை நீதிமன்றங்கள் பாதுகாத்த ஏனைய பல வழக்குகள் உள்ளன.[38]

அதிகமான சமூகங்களில் காணப்படுவதைப் போன்று, பண வசதி படைத்தவர்களினால் மிகச் சிறந்த சட்டத்தரணிகளை அமர்த்தக் கூடியதாகவுள்ளது. இவ்வாறான தனிநபர்கள் அதிகாரத்திலுள்ளவர்களுடன் சிறந்த தொடர்பினைக் கொண்டுள்ளதுடன் தங்களின் வழக்குகளைத் தமக்குச் சாதகமாகத் திருப்புவதற்காகத் தங்களின் செல்வாக்கினைப் பயன்படுத்தக்கூடியவர்களாக உள்ளனர். கீழ்நிலை நீதிமன்றங்களில் மிகவும் பிரச்சினைக்குரியதாகக் காணப்படும் நீதிமுறை ஊழல் இவ்வாறான அநீதியினை மோசமாக்குகின்றது.[39]

சிவில் யுத்தத்தின் போது எண்ணற்ற ஆண்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ள காரணத்தினால் விகிதாசாரமற்ற எண்ணிக்கையிலான குடும்பங்கள் பெண் தலைமைக் குடும்பங்களாக இருப்பதால், குறிப்பாக இந்த நிலைமை வட மாகாணத்தில் காணப்படுவதால், குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் தமிழ்ப் பெண்களின் ஆற்றலும் அணுகலும் வலுவிழக்கச் செய்யப்படுவதற்கான எத்தனிப்புக் காணப்படுகின்றது. இதனால், அதீதமாக இராணுவமயமாக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் வாழும் பலரும் அரச அதிகார அமைப்புக்களிடம் இருந்து நீதியைக் கோருவதற்கான தமது ஆற்றலை மேலும் இழக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.[40]

# III. தலைமைத்துவமும் பன்மைவாதமும்

# 7. அரசியல் கட்சிகள்
# ஒட்டுமொத்த மதிப்பெண்: 5

மதம் | **மதிப்பெண்: 5**

இனம் | **மதிப்பெண்: 5**

**சகல கட்சிகளும் பன்மைவாதத்தினைத் தழுவிக்கொள்வதாகக் கூறிக்கொண்டாலும், அக்கட்சிகளின் சில மேடைகளில் முழங்கப்படுவதோ பேரினவாதமாக இருக்கின்றது.**

1948 ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்தது முதல் 1977 ஆம் ஆண்டு வரை, இலங்கையின் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் இலங்கை சுதந்திரக் கட்சியுமே மாறி மாறி ஆட்சிக் கட்டிலேறியிருக்கின்றன. ஆனால், 1978 ஆம் ஆண்டு ஜனாதிபதி முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது முதல் இது குறைவாகவே நிகழ்ந்திருக்கின்றது. ஆனால் கட்சிகள் மாறி மாறி ஆட்சி செய்தபோது கூட, அவை பேரினவாதச் சூழமைவுடனேயே ஆட்சி செய்தன. அதாவது, இந்த இரண்டு பிரதான கட்சிகளும், குறிப்பாக 1950 களில் ஆரம்பித்து, தமது அரசியல் நலனுக்காக இன அடையாளத்தினை முன்வைத்தே போட்டியிட்டு வந்திருக்கின்றன. இக்கட்சிகள், குறிப்பாகத் தமிழ்ச் சிறுபான்மையினரை விலையாகக் கொடுத்தே பெரும்பான்மையினரின் நலன்களை மேம்படுத்துவதற்குப் போட்டியிட்டு வருகின்றன.[41] இவ்வாறு இன அடையாளத்தினை வைத்துப் போட்டியிடுவது, ஒரு குறிப்பிட்ட இனத்தின் சகல நன்களையும் மேம்படுத்தி, ஏனைய இனங்களின் நலன்களைப் பாதித்து அரசியல் நடத்தும் நிலைக்கும் சிவில் யுத்தத்திற்கும் இட்டுச்செல்லும். பிரிவினைவாத விடுதலைப் புலிகளை வெற்றிகொண்டமையானது, சில கட்சிகளில் மிகப் பரவலாகக் காணப்படும் பேரினவாதத் தீவிரவாதிகளையே வலுப்படுத்தியுள்ளது.

சகல கட்சிகளும் பன்மைவாதத்தினைத் தழுவிக்கொள்வதாகக் கூறிக்கொண்டாலும், அக்கட்சிகளின் சில மேடைகளில் முழங்கப்படுவதோ பேரினவாதமாக இருக்கின்றது. இலங்கை சுதந்திரக் கட்சியும், ராஜபக்ஷ குடும்பத்திற்கு ஆதரவு வழங்குவதற்காக அக்கட்சியில் இருந்து பிரிந்துசென்ற பலரை உறுப்பினர்களாகக் கொண்ட இலங்கை பொதுஜன பெரமுனவும் நாட்டினை ஆளுவதற்குச் சிங்கள பௌத்த பேரினவாதத்திலேயே தஞ்சமடைந்துள்ளன. விளைவாக, பன்மைவாதத்திற்காகக் குரல் கொடுக்கும் பலரை இலங்கை கொண்டுள்ள போதிலும் இலங்கையின் அரசியல் என்பது நீண்ட காலமாகவே இனத்தினை மையப்படுத்தியதாகவே உள்ளது. தேசியவாதத்தினை ஊக்குவித்த தமிழ்க் கட்சிகளும் (சிங்கள பௌத்தத் தேசியவாதத்திற்கான எதிர்வினையாகவும்) முஸ்லிம் கட்சிகளும் நாட்டின் அரசியல் கட்சி முறைமையினை இனரீதியான திசையினை நோக்கித் தள்ளிய போதிலும், சிவில் யுத்தமானது இதனை மோசமாக்கியது.

மக்கள் இனத் - தேசிய மற்றும் மதப் பிரிவுகள் சார்ந்து கட்சிகளுக்கு வாக்களிக்கும் பாராளுமன்றத் தேர்தல்களின் போது இந்த இன உண உணர்வு துலாம்பரமாகக் காணப்படுகின்றது. எவ்வாறாயினும், தேர்தலின் பின்னர், இன – மத ரீதியாகப் போட்டியிட்ட கட்சிகள் தேர்தல் பெறுபேறுகளைப் பொறுத்துக் கூட்டமைப்புப் பங்காளர்களாக மாறலாம். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஆதிக்கமிக்க இரண்டு கட்சிகளையும் சேர்ந்த வேட்பாளர்கள் அனைத்து இன மக்களுக்கும் சார்புடையவர்களாகத் தம்மைக் காட்டிக்கொள்ளும் எத்தனிப்பினைக் கொண்டுள்ள போதிலும் 2010 ஆம் ஆண்டில் மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் தேர்வு செய்யப்பட்டமையும் 2019 ஆம் ஆ்ண்டில் கோதபாய ராஜபக்ஷ தேர்வு செய்யப்பட்டமையும், அதிகாரத்தினைப் பிடிப்பதற்கு அவர்களுக்குச் சிறுபான்மையினரின் வாக்குகள் தேவையில்லை என்ற கூற்றுக்களுக்கு இட்டுச்சென்றன.[42]

செல்வமும் செல்வாக்கும் அதிகாரமும் கொண்ட சில சுயாதீனமான அரசியல்வாதிகளின் மத்தியில் தார்மீகப் பொறுப்புப் பொதுவானதாக உள்ளது,[43] ஆனால் கடந்த சில தசாப்தங்களாக, கட்சி அரசியல் என்பது விரைவாகச் செல்வந்தராவதற்கான திட்டங்களுக்கு ஒப்பானதாக உள்ளது. இது ஆளுகையின் தரத்தினைச் சமரசம்

செய்துள்ளதோடு மாத்திரமன்றி, செயற்திறனும் ஒழுக்கமும் குறைந்த கட்சிகளுக்கும் இட்டுச் சென்றுள்ளது. கட்சிக்கு இடையே ஜனநாயகம் இல்லாமையும் இதற்கு ஒரு காரணமாகும்.

உள்ளூர் மற்றும் மாகாண மட்ட அரசியலானது ஊழலின் படிநிலைகளுக்குப் பங்களிப்பு வழங்கியுள்ள அதேவேளை, இந்த மட்டங்களில் நிலவும் அரசியல் போட்டிகள், குறைந்த வருமானப் பின்புலங்களைச் சேர்ந்தவர்கள் பிரபல்யமடைந்து ஈற்றில் தேசிய மட்டத்தில் அரசியல் பதவிகளுக்குப் போட்டியிடுவதை இயலுமாக்கியுள்ளது. அரசியல் அபிலாஷை கொண்டவர்கள் சார்பளவில் ஏகவினமான வாக்காளர்களைக் கவர்வதற்கான எத்தனிப்பினை இது கொண்டுள்ளதுடன் இவ்வாறான உயர் மட்டங்களை நோக்கிய நகர்வுகள் ஜனநாயகத்தினதோ அல்லது பன்மைவாதத்தினதோ தரத்தினை அவசியம் மேம்படுத்துகின்றன என்பது அர்த்தமல்ல.

உலகின் முதல் பெண் பிரதமர் இலங்கையைச் (அப்போது சிலோன் என அழைக்கப்பட்டது) சேர்ந்தவர். எஸ் டபிளியு ஆர் டி பண்டாரநாயக்கவின் மனைவியாக இருந்து விதவையானவர் என்பதாலேயே சிறிமாவோ பண்டாரநாயக்க இப்பதவியினைப் பிரதானமாக அடைந்து கொண்டார். இவரின் மகளான சந்திரிகா குமாரதுங்க இந்தப் பரம்பரை வம்சாவளி காரணமாகவே பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் ஆனார் என்றால் அது மிகையாகாது.[44] வாரிசு அரசியல் என்பது தெற்காசியா முழுவதுமே பொதுவானதாகக் காணப்படுகின்றது,[45] மேலும், பிராந்தியதில் அதிகளவான பெண்கள் கட்சிகளிலும் அரசாங்கத்திலும் மிக உயர்ந்த பதவிகளை அடைந்துகொள்வதற்கான ஒரே காரணம் ஓய்வுபெற்ற அல்லது இறந்த அவர்களின் கணவர்கள் அல்லது தந்தையரால் என்பது துலாம்பரமாகத் தெரியும் ஒன்றாக உள்ளது. கோதபாய ராஜபக்ஷவின் முதலாவது அமைச்சரவையில் ஒரு பெண் மாத்திரமே உள்ளடக்கப்பட்டிருந்தார், ஆனால் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ 2022 மே மாதம் இராஜினாமாச் செய்த போது அமைச்சரவையும் கலைக்கப்பட்டிருந்தது. 2022 ஜுன் மாதத்தின் ஆரம்பத்தின் போதுள்ளவாறாக, நியமிக்கப்பட்டிருந்த புதிய அமைச்சர்களின் மத்தியில் ஒரு பெண் அமைச்சர் கூட இருக்கவில்லை. நாட்டின் சனத்தொகையில் பெண்கள் 52 சதவிகிதமாகக் காணப்படுவதையும் தாண்டி, 225 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் வெறும் 12 பெண் உறுப்பினர்களே உள்ளனர். உள்ளூர் மட்டத்தில் அதிகளவான பெண் பிரதிநிதிகள் இயங்கி வருகின்றனர். இருப்பினும், “கருத்து வெளிப்பாட்டுக்காக அரசியலமைப்பு ரீதியாக உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்கும் சுதந்திரத்தினைப் பயன்படுத்துவதற்குக் கூட அனுமதிக்கப்படாமலேயே பெண் கவுன்சிலர்கள் பெரும் துன்புறுத்தலுக்கு மத்தியில் இயங்கி வருகின்றனர் [. . .].”[46] ஆண்களை விடப் பெண்களை அதிகமாகக் கொண்ட ஒரு நாட்டிலே, ஆண்களுக்குச் சற்றும் சளைக்காத எழுத்தறிவினைப் பெண்கள் கொண்டுள்ள ஒரு நாட்டிலே, இது ஒரு பரிதாபகரமான நிலைமையே ஆகும்.

## 8. செய்தி ஊடகங்கள்

## ஒட்டுமொத்த மதிப்பெண்: 4.5

### அ. பிரதிநிதித்துவம் | ஒட்டுமொத்த மதிப்பெண்: 5.5

மதம் | **மதிப்பெண்: 5**

இனம் | **மதிப்பெண்: 6**

சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் ஊடகங்கள் இயங்குகின்றன. அச்சு ஊடகத்திலும் தொலைக்காட்சியிலும் இந்த நிலை காணப்படுவதுடன் அண்மைக் காலங்களில் சமூக ஊடகங்களின் வழியே தொடர்பாடுவதற்கு இந்த மூன்று மொழிகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது சமூக ஊடகங்களில்

**எவ்வாறாயினும், இலங்கையர்களில் மிகப் பெரும்பான்மையானோர் அவர்களின் செய்திகளைத் தொலைக்காட்சி வழியேயும் வானொலி வழியேயும் பெறுகின்றனர் என்பதுடன் இங்கே அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படும் செய்தி நிறுவனங்கள் முன்னரை விடக் குறைந்த செல்வாக்கினையே கொண்டுள்ளன. இதற்குக் காரணம் பல தனியார் செய்தி நிறுவனங்கள் பல்கிப் பெருகியுள்ளமையே ஆகும்.**

மொழிகளை இணைத்து, குறிப்பாகச் சிங்களத்தை ஆங்கிலத்துடனும் தமிழை ஆங்கிலத்துடனும் இணைத்து சமூக ஊடகப் பதிவுகள் இடப்படுவதைக் காண்பது பொதுவானதாக உள்ளது. எனவே, இலங்கை ஊடகமானது பல்வகைமை மிக்கதாக இருந்தாலும், சமூக ஊடகமானது தொடர்பாடல் என வரும்போது மொழிகளை ஒருங்கிணைத்துத் தனித்துவமான தாக்கத்தினை ஏற்படுத்தி வருகின்றது. எவ்வாறாயினும், இலங்கையர்களில் மிகப் பெரும்பான்மையானோர் அவர்களின் செய்திகளைத் தொலைக்காட்சி வழியேயும் வானொலி வழியேயும் பெறுகின்றனர் என்பதுடன் இங்கே அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படும் செய்தி நிறுவனங்கள் முன்னரை விடக் குறைந்த செல்வாக்கினையே கொண்டுள்ளன. இதற்குக் காரணம் பல தனியார் செய்தி நிறுவனங்கள் பல்கிப் பெருகியுள்ளமையே ஆகும்.[47]

மொழியியல் கண்ணோட்டத்திலும் பன்மைவாதக் கண்ணோட்டத்திலும் நோக்குகையில் இலங்கையில் ஊடகங்கள் தனித்தே இயங்குகின்றன என்பதை இங்கு கவனத்தில் கொள்வது முக்கியமானதாகும். சிங்கள மொழியில் இயங்கும் ஊடகங்கள் பொதுவாகச் சிங்கள மக்களின் கரிசணைகளைில் மாத்திரமே கவனம் குவிக்கின்றன. அதாவது, பெரும்பான்மைச் சமுதாயம் தொடர்பான பிரச்சினைகள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை ஆனால் சிறுபான்மையினரின் பிரச்சினைகளோ பிராந்தியம் சார்ந்தவை என்ற கருத்தினையே இது சுட்டுகின்றது. இதன் விளைவாக, சிங்களச் செய்திகள் தமிழ் மக்களின் கண்ணோட்டத்தினைப் போதிய அளவுக்கு வெளிப்படுத்துவதற்குத் தவறிவிடுகின்றன. தமிழ் மொழி ஊடகங்கள் தேசியத் தலைப்புக்கள் பற்றிப் பரந்த அளவுக்கு அறிக்கையிடுவதுடன் தமிழ் பேசும் சிறுபான்மையினர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்காக அதிக வெளியினை வழங்குகின்றன. இது தமிழ் மக்களையும் சிங்களவர்களையும் உள்ளடக்கும் அதேவேளை, சிவில் யுத்தத்திற்குப் பின்னர் ஏற்பட்ட பிணக்குகள் மற்றும் சமுதாயத்தின் தொடரும் துயரங்கள் காரணமாகத் தமிழ் மக்கள் தொடர்பான பிரச்சினைகளில் மேலதிக கவனத்தினைக் குவிக்கின்றது. ஆங்கில மொழி ஊடகங்கள் அவற்றின் நோக்கிலே மிகுந்த பன்மைவாதமிக்கவையாக உள்ளன என்றாலும் அவற்றின் அடைவு என்பது வரையறுக்கப்பட்டதாகவே உள்ளது, மேலும் அதன் உள்ளடக்கமானது பெருநகரத்தினை நோக்கியும் வியாபார நலன்களை நோக்கியும் சாயும் எத்தனிப்பினையே கொண்டுள்ளது (சுதேச மொழிகளில் இயங்கும் ஊடகங்களுடன் ஒப்பிடுகையில்).

இதனால், பொதுவாக, பன்மைவாத விழுமியங்களை முன்னெடுத்துச் செல்லாது இன – மதப் பன்மைச் சமூகத்திற்குச் சேவையாற்ற நாடும் ஊடகமே உருவாகின்றது. உண்மையில், ஊடக உரிமையாளர்களும் பத்திரிகையாளர்களும் சமுதாய ரீதியான பக்கச்சார்புகளையும் இருப்பியல் அச்சங்களையும் தூண்டுகின்ற குறுகிய தேசியவாத நிலைப்பாட்டினையே எடுக்க எத்தனிக்கின்றனர்.[48] உண்மைத்தன்மைக்காக மூலங்களை உறுதிப்படுத்துவதையும் மாற்றுக் கண்ணோட்டங்களைச் சமர்ப்பிப்பதையும் உள்ளடக்கும் அடிப்படைத் தொழில்முறை ஊடக நெறிகளைப் பின்பற்றுவதற்குப் பத்திரிகையாளர்கள் தவறிவிடுகின்றனர். புலம்பெயர் சமூகத்தில் இருந்து வரும் ஊடகங்களினால் இந்தப் பிரச்சினை உக்கிரமாக்கப்படுகின்றது – இங்கே இது பிரதானமாகத் தமிழ்ப் புலம்பெயர் சமூகம் தொடர்பான கரிசணையினையே குறித்து நிற்கின்றது – ஏனெனில் இதன் செய்திகளில் உள்ள உண்மைகள் பரீட்சிக்கப்படாமல் நாட்டினுள் மீள்விநியோகிக்கப்படுகின்றன. போலியான பதிவுகளைக் கோடிட்டுக் காட்டும் விடயங்களை இலங்கை பத்திரிகை நிறுவனம் கிரமமான அடிப்படையில் வெளியிட்டாலும், இதன் முயற்சிகள் பிரச்சினைக்குரிய மற்றும் போலியான சமர்ப்பணங்களுக்கு நிகராக ஆகுவது கடினமான ஒன்றாகவே இருக்கின்றது (குறிப்பாகச் சமூக ஊடகங்கள் மூலம்).

வரையறுக்கப்பட்ட விநியோகத்துடனும் இன – மதச் சகவாழ்விற்காக ஆதரவு வழங்குகின்ற ஒலிவடிவப் பதிவுகளுடனும் செய்திப் பத்திரிகைகளின் வடிவில் மாற்று ஊடகங்கள் உள்ளன. மாற்றுக் கருத்துக்களைத் தேடுபவர்களுக்கு அவை கிடைக்கின்றன என்பதே இதன் அர்த்தமாகும். இதற்குக் காலம் எடுக்கின்றது, மேலும், இந்த உள்ளடக்கத்தில் பெரும்பாலானவை சமூக ஊடகத்தில் உள்ளதால், இதற்கான செலவும் அதிகமாகவே இருக்கும் (நுகரப்படுகின்ற பேண்ட்வித்திற்காகப் பலரும் கட்டணம்

**அதிகமான உடகங்கள் சிறுபா-ன்மையினரின் குறைகளைக் குறைத்துக் கூறுகின்ற அரசாங்கத்தின் கூற்றுரைகளையே ஊக்குவிக்கின்றன.**

செலுத்த வேண்டியுள்ளதால், குறிப்பாகத் தொலைபேசிகளில்). சில குறிப்பிட்ட சமூகத் தட்டினர் மாத்திரமே இவ்வாறான மாற்று ஊடகங்களை அணுகும் சாத்தியத்தினைக் கொண்டுள்ளனர் என்பதையே இது குறிக்கின்றது.

இலங்கையின் பிரதான செய்தி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆண் மற்றும் பெண் செய்தி வழங்குனர்களைப் பயன்படுத்தும் எத்தனிப்பினைக் கொண்டுள்ளன. இருப்பினும் ஆண் செய்தி வழங்குனர்களே அதிக ஒலிபரப்பு மற்றும் ஒளிபரப்பு நேரங்களைப் பெறும் எத்தனிப்பினைக் கொண்டுள்ளதாகத் தென்படுகின்றது. எவ்வாறாயினும், மனித அக்கறைக் கதைகளுடனும் விபரக் கட்டுரைப் பகுதிகளுடனும் நவீனங்களுடன் தொடர்புடைய பகுதிகளுடனும் தொடர்புடைய ஊடகங்களில் பெண்கள் ஆதிக்கம் செலுத்தும் எத்தனிப்பினைக் கொண்டுள்ளனர். இளம் பெண்கள் இப்போது அதிக அளவில் அரசியல் விவகாரங்கள் பற்றி அறிக்கையிடுவதையும் அரசியல் பற்றிய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நடத்துவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இவர்கள் குறைந்த எண்ணிக்கையிலானவர்களாகவே தொடர்ந்தும் காணப்படுகின்றனர். ஆனால், பால்நிலைக் கண்ணோட்டத்தில் நோக்குகையில் இது ஒரு முக்கியமான பிறள்வாகும். ஆங்கில ஊடகங்களில் அதிகமான பெண்கள் செய்திப் பத்திரிகைப் பத்திகளை எழுதுவது போல் தென்படுகின்றது. சுதேச மொழி ஊடகங்களில் பத்திகளை எழுதும் புறக்கணிக்கத்தக்க எண்ணிக்கையிலான பெண்களுடன் ஒப்பிடுகையில் இது ஒரு கூர்மையான வித்தியாசமாகும்.

## ஆ. பன்மைவாதச் செயற்படுனர்களின் பிரபல்யம் | ஒட்டுமொத்த மதிப்பெண்: 3.5

### மதம் | மதிப்பெண்: 4

### இனம் | மதிப்பெண்: 3

அதிகமான உடகங்கள் சிறுபான்மையினரின் குறைகளைக் குறைத்துக் கூறுகின்ற அரசாங்கத்தின் கூற்றுரைகளையே ஊக்குவிக்கின்றன. அரசுக்குச் சொந்தமான ஊடகங்களைப் பொறுத்த அளவில் குறிப்பாக இதுவே நிலைமையாகக் காணப்படுகின்றது. இதனால் சமூக ஊடகங்களில் வெறுப்புப் பேச்சுக்கள் மலிந்து காணப்படுகின்றன. இதன் விளைவானது அரிதாகவே பன்மைவாதத்திற்குப் பங்களிப்பு வழங்குகின்றது; மாறாக, இது சமுதாயப் பக்கச்சார்பினையுமம் குறைகளையும் வலுப்படுத்துகின்றது. உதாரணமாக, 2012 ஆம் ஆண்டளவில் தொடங்கி இடம்பெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையானது, பெரும்போக்கு ஊடகம் இஸ்லாமோபோபியாவினை (இஸ்லாம் பற்றிய அச்சத்தினை) எவ்வாறு புறவயமாகக் கலந்துரையாடத் தவறியது என்பதற்கான செம்மையான உதாரணமாக விளங்குகின்றது. மாறாக, வெறுப்புப் பேச்சுக்களுக்கு நேரலை உள்ளடக்கத்தினை வழங்கியதன் மூலமும் தீவிரவாதத் துறவிகளுக்கு முன்னணித் தளங்களை வழங்கியதன் மூலமும் இலங்கை ஊடகங்கள் மென்உணர்வுகளைத் தூண்டிவிடுவதை ஏற்று அங்கீகரித்து அண்மைக் கால சமுதாயப் பதற்றங்களுக்கும் பங்களிப்பு வழங்கியுள்ளன.

கொவிட் – 19 இலங்கைக்கு முதன் முதலில் வந்தபோது இதனை மீண்டும் சான்றாகக் காண முடிந்தது. முஸ்லிம்கள் செறிவாக வாழும் சில பகுதிகளில் ஆரம்பத்தில் கொரொனா வைரஸ் கண்டறியப்பட்டதும், சில அரசாங்க அதிகாரிகளுடன் ஊடகங்கள் கூடிச்சதிசெய்து கொவிட் – 19 இன் பரவலுக்கு முஸ்லிம்களைக் குற்றம் கூற ஆரம்பித்தன.[49] முஸ்லிம்களின் மனங்களில் ஆழமான வடுவினை ஏற்படுத்திய, கொவிட் - 19 இனால் இறந்தவர்களை அடக்கம் செய்வதை அரசாங்க அதிகாரிகள் தடைசெய்த கொள்கை நிலைப்பாட்டிற்குச் சிங்கள ஊடகங்கள் ஏகமனதாக ஆதரவு தெரிவித்தன. இக்கொள்கை 2021 பெப்ரவரியில் பகுதியாக நீக்கப்பட்டு 2022 மார்ச்சில் பூரணமாக நீக்கப்பட்டது – இந்த இரண்டு சந்தர்ப்பங்களும் மனித உரிமைகள் பற்றிய ஐநா ஆணைக்குழு இலங்கையில் வன்முறைகளைப் பற்றிக் கலந்துரையாடுவதற்குச்

**இராணுவம் தொடர்புற்றிருந்த தவறுகளை வெளியி-டுவதையும் சித்தாந்த ரீதியான காரணங்க-ளுக்காக ஊடகங்கள் தவிர்த்தன. இதனால் ஆயுதப் படைகள் நட்புமிக்கவையாகச் சித்தரிக்கப்பட்டன.**

சற்று முன்னரானவையாகும் – இதில் இருந்து இந்த நடைமுறையானது அறிவியல் சான்றுகளுடன் அரிதாகவே பொருந்தியது என்பது சான்றாகத் தெரியவருகின்றது. கொள்கை நீக்கப்பட்ட போது, அது பற்றித் தொலைக்காட்சி ஊடகங்களில் பெரிதாக எதுவும் குறிப்பிடப்படவில்லை.

269 பேரைப் பலியெடுத்த உயிர்த்த ஞாயிறுக் குண்டுத் தாக்குதலை நேர்மையாகக் கையாளுவதற்கான அரசாங்கத்தின் ஆர்வமின்மையானது, கோதபாய ராஜபக்ஷ-வின் ஜனாதிபதி வேட்பாளர் நிலையினை மேம்படுத்துவதற்காகச் சில குறிப்பிட்ட பு-லானய்வு ஆளணியினருடன் கூட்டுச்சதியில் இயங்கிய இஸ்லாமியத் தீவிரவாதிகளாலேயே உயிர்த்த ஞாயிறுக் குண்டுத் தாக்குதல்கள் திட்டமிடப்பட்டன என கத்தோலிக்க மதகுருக்களும் சில பொதுமக்களும் காட்டமாகப் பேசுவதற்கு இட்டு-ச்சென்றது.[50] கத்தோலிக்க மக்களின் ஆர்ப்பாட்டங்களை ஊடகங்கள் அறிக்கையி-ட்ட அதேவேளை, கத்தோலிக்க மதகுருமார்களை அச்சுறுத்தும் சில தீவிரவாத பௌத்தர்களின் கருத்துக்களையும் பொறுப்பற்ற முறையில் வெளியிட்டன.

இராணுவம் தொடர்புற்றிருந்த தவறுகளை வெளியிடுவதையும் சித்தாந்த ரீதியான காரணங்களுக்காக ஊடகங்கள் தவிர்த்தன. இதனால் ஆயுதப் படைகள் நட்புமிக்க-வையாகச் சித்தரிக்கப்பட்டன.[51] இராணுவமயமாக்கத்திற்குத் தமிழ் மக்களின் நில-ங்கள் இரையாவதைத் தாண்டியும் இதுவரை காலமும் தமிழ் மக்களினதும் முஸ்லிம் மக்களினதும் பிரதேசங்களாக இருந்த இடங்களில் சிங்கள பௌத்தப் பிரசன்ன-த்தினை மேம்படுத்துவதற்காகத் தீவிரவாதிகளுடன் இராணுவம் கூட்டுச்சதியில் ஈடு-பட்டதையும் தாண்டியே இவை நடைபெற்றன. எனவே, இராணுவத்துடன் தொடர்புடையவர்களை விமர்சிப்பதற்குத் தமக்குச் சுதந்திரம் இல்லை எனக் குறிப்பா-கச் சிறுபான்மையினர் உணர்ந்தமை ஒன்று ஒரு விபத்தல்ல.[52] இலங்கையினுள் இரா-ணுவத்தின் தலைமையிலான அரசாங்கத்திற்கு ஆதரவு இல்லை என்பதுவும் இங்கே கவனிக்கப்பட வேண்டும்.[53]

பன்மைவாத விழுமியங்களை மேம்படுத்துவதில் இலங்கை ஊடகங்கள் மிகவும் மனம் வருந்தத்தக்க அளவில் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றன. நீண்ட காலம் நிலைத்த சிவில் யுத்தம் இதற்குத் தெளிவாகப் பங்களிப்பு வழங்கியது. ஆனால் கடந்த காலங்களில் ஜனநாயக ரீதியில் பின்னோக்கிச் சென்றமை, குறிப்பாக 2005 இல் ரா-ஜபக்ஷ குடும்பம் அரசியலில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியதில் இருந்து இந்நி-லைமை ஏற்பட்டமையும் இதற்கான காரணமாகும். பேரினவாதம் மிகுந்த ஆதிக்கமிக்கதாக மாறிவருகையில் சில குறிப்பிட்ட தலைப்புக்கள் தொடர்பாகச் சுய தணிக்கை செய்யப்படுவதற்கு ஊழலும் அச்சுறுத்தலும் இட்டுச்சென்றமையே இதன் பலனாக ஏற்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில் பன்மைவாதத்திற்காகக் குரல் கொடுப்பது பெரிதும் விரும்பப்படாத ஒன்றாக மாறியுள்ளது. எவ்வாறாயினும், தொடர்ந்து நிலவி வரும் பொருளாதார நெருக்கடிகள் மிகவும் கருத்தொருமிப்புமிக்க அரசியலுக்கு இட்டு-ச்செல்லலாம்.

சமூகத்தினை எவையெல்லாம் பாதகமாகப் பாதிக்கின்றனவோ அவற்றினால் சிறு-பான்மையினரும் விளிம்புநிலை மக்களும் மிகவும் உக்கிரமாகப் பாதிக்கப்படுகி-ன்றனர். எனவே, பன்மைவாதத்தில் வேர்கொண்டுள்ள விடயங்களைப் பொறுத்த அளவில் பெண்கள், குறிப்பாக, சிறுபான்மைப் பெண்கள் அதீதமான தடைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். பன்மைவாதச் சமூகம் விளிம்புநிலையிலுள்ளவர்களுக்கு, தனிப்பட்ட உரிமைகளின் விழுமியங்களின் மத்தியில் சில பாதுகாப்புக்களை வழ-ங்குகின்றது. இதனை ஆக்ரோஷமாக வலியுறுத்துவதற்கான வாய்ப்பும் வளமும் ஊட-கத்திற்கு உண்டு. இதனைச் செய்யத் தவறுகின்றமையானது பேரினவாதத்தினை உக்கிரப்படுத்துவதோடு மாத்திரமன்றி, பால்நிலை அடிப்படையிலான பாகுபாடு மற்றும் விளிம்புநிலையாக்கத்திற்கும் பங்களிப்பு வழங்குகின்றது.

# 9. சிவில் சமூகம்

# ஒட்டுமொத்த மதிப்பெண்: 6

மதம் | **மதிப்பெண்: 6**

இனம் | **மதிப்பெண்: 6**

இலங்கையில் மக்கள் அவர்களின் சமுதாய வாழ்வினையும் சமூக வாழ்வினையும் மத அடிப்படையில் அமைத்துக்கொண்டமை காலனித்துவத்திற்கு முற்பட்டதாகும். நாட்டின் பல்வகைமை விரிவடைந்த காரணத்தினால், சமுதாய வாழ்வும் சமூக வாழ்வும் இன அடிப்படையில் வளரத் தொடங்கின. இந்தப் போக்கினை நாட்டின் பழைமையான கிரிக்கெட் அணிகள் கொண்டிருந்தன. இந்த அணிகளின் பெயர்களுள், சிங்கள விளையாட்டுக் கழகம், தமிழ் யூனியன் கிரிக்கெட் மற்றும் மெய்வல்லுனர் கழகம், முஸ்லிம் விளையாட்டுக் கழகம், பறங்கியர் ஓய்வுநேரப் பொழுதுபோக்குக் கழகம் என்பன உள்ளடங்கியிருந்தன. விளைவாக, சுதந்திரத்திற்குப் பின்னர், குறிப்பாகச் சிவில் யுத்தத்தின் பின்னர், இலங்கைச் சிவில் சமூகம் பாரிய அரசியல் சமூகத்தில் உள்ளதைப் போன்று இன - மத அடிப்படையில் துருவமயப்பட்டமை ஒன்றும் ஆச்சரியத்திற்குரியதல்ல. எவ்வாறாயினும், இந்தத் துருவமயமாதல் ஒரேயடியாகத் தீவிரமடையாமல் இருப்பதற்கான காரணம் சமூகத்தின் பல்வேறு பிரிவுகளூடே சிவில் சமூகம் கொண்டுள்ள செல்வாக்காகும். உதாரணமாக, அரசியல் கட்சிகளுடன் தொடர்பற்ற தொழிற் சங்கங்கள், நுகர்வோர் சங்கங்கள் மற்றும் சுற்றாடல் குழுக்கள் பல்வகைமைமிக்க உறுப்பாண்மையினைக் கொண்டிருக்கும் எத்தனிப்பினைக் கொண்டுள்ளன.[54] இது பேதங்களைச் சூழ்ச்சித்திறனுடன் கையாண்டு, தேர்தல் பிரச்சாரங்களின் போது வன்முறையில் கூட இறங்கக் கூடிய அரசியல் கட்சிகளுக்கு (அவற்றின் சங்கங்கள்) மாற்றமானதாகும்.[55]

மொத்தத்தில், சிவில் சமூகத்தினுள் கணிசமான அளவு பன்மைவாதம் தொடர்ந்து காணப்படுகின்றது. வித்தியாசமான இன, மத, மற்றும் நலன் அடிப்படையிலான குழுக்களைச் சேர்ந்தவர்கள் சமூக மற்றும் பொருளாதாரத் தொழில் முனைவுகளில், குறிப்பாகத் தனியார் துறையில் சுதந்திரமாகக் கலக்கும் எத்தனிப்பினைக் கொண்டுள்ளனர். இந்த அமைப்புக்களில் உள்ள ஊழியப்படை பல் இனம் சார்ந்ததாக உள்ளது. விளையாட்டுக் கழகங்களும் சமூகக் கழகங்களும் இதேபோன்று கணிசமாகக் கலந்துள்ளன, குறிப்பாகக் கொழும்பில் இந்த நிலைமை காணப்படுகின்றது. எவ்வாறாயினும், அரச துறையினுள் சிங்கள பௌத்தர்களின் அதீத பிரதிநிதித்துவமானது தொழிற்சங்கங்கள் இன ரீதியான துருவமயமாதலைத் தூண்டுவதற்குப் பங்களிப்பு வழங்கியுள்ளது.[56]

பன்மைவாதத்தின் மையமான, சமூகத்தின் பல்வகைமை எவ்வாறு அங்கீகரிக்கப்படுகின்றது மற்றும் பேதங்களை ஏற்றுக்கொள்வது தொடர்பாக மக்கள் எவ்வாறு நடந்துகொள்கின்றனர் என்பதன் காரணமாக, பன்மைவாதம் எனும் கருத்தியல் சமூகத்தில் உறுதியாக நிலைகொண்டுள்ளமை தெளிவான ஒன்றாகும்.[57] அரசியலமைப்பு ரீதியாகப் பாதுகாக்கப்பட்ட உரிமைகளான சமத்துவத்தினையும் சங்கம் அமைப்பதற்கான சுதந்திரத்தினையும் கருத்து வெளிப்பாட்டுக்கான சுதந்திரத்தினையும் பாதுகாக்கும் சட்டங்களிலும் பன்மைவாதத்தினை உணரக் கூடியதாக உள்ளது. எவ்வாறாயினும், பன்மைவாதம் என்பது கருத்தியலாகவும் உணரக்கூடியதாகவும் இருப்பதையும் தாண்டி, பன்மைவாதத்தின் நடைமுறை என்பது பல பிரதான பரப்புக்களில் போதாததாகவே உள்ளது.

தமிழ் மொழியில் தேசிய கீதத்தினைப் பாடுவதை அனுமதிப்பதற்கு நடப்பு அரசாங்கம் மறுத்தமையில் இருந்து பன்மைவாத நடைமுறை இல்லாதிருப்பது தெளிவாகப் புலப்படுகின்றது. மஹிந்த அரசாங்கத்தின் தலைமையிலான ஆட்சியிலும் இதே நிலைமையே நிலவியது. இருந்தபோதிலும், கோதபாய ராஜபக்ஷவின் ஆட்சிக்கு

**இலங்கையிலே சமாதானத்திற்கும் மனித உரிமைகளுக்கும் அர்ப்பணிப்புக் கொண்ட சிறிய ஆனால் செல்வாக்குமிக்க சிவில் சமூக அமைப்புக்களின் குழுக்கள் (CSOs) உள்ளன. இந்த அரச சார்பற்ற அமைப்புக்கள் (NGOs) தொடர்ச்சியாகப் பன்மைவாதத்தினையும் ஜனநாயகத்தினையும் மேம்படுத்தி மனித உரிமைகளுக்காக ஆதரித்து வாதாடி வருகின்றன.**

முன்பிருந்த ஆட்சியில் சிங்களத்திலும் தமிழிலும் தேசிய கீதம் பாடப்படுவதற்கு அனுமதியளிக்கப்பட்டது. தமிழ் மக்கள் அவர்களின் மொழியில் தேசிய கீதத்தினைப் பாடுவதைத் தடை செய்தமை, குறிப்பாகச் சுதந்திர தினம் போன்ற தேசிய வைபவங்களில் அதனைத் தடை செய்தமை, 1950களின் நடுப்பகுதியில் இருந்து நாட்டைப் பீடித்துள்ள பேரினவாத உணர்வினையே உக்கிரப்படுத்துகின்றது.

இலங்கையிலே சமாதானத்திற்கும் மனித உரிமைகளுக்கும் அர்ப்பணிப்புக் கொண்ட சிறிய ஆனால் செல்வாக்குமிக்க சிவில் சமூக அமைப்புக்களின் குழுக்கள் (CSOs) உள்ளன. இந்த அரச சார்பற்ற அமைப்புக்கள் (NGOs) தொடர்ச்சியாகப் பன்மைவாதத்தினையும் ஜனநாயகத்தினையும் மேம்படுத்தி மனித உரிமைகளுக்காக ஆதரித்து வாதாடி வருகின்றன. நல்லாட்சியுடன் தொடர்புறும் நிகழ்ச்சிநிரலைக் கொண்டுள்ள கொடையாளர் சமுதாயத்தினாலும் வெளிநாட்டு ராஜதந்திரப் பணியாளர்களாலுமே இந்த அமைப்புக்கள் இச்செல்வாக்கினைக் கொண்டுள்ளன. இவ்வாறான குழுக்கள் நடத்தியுள்ள கல்வியும் ஆதரித்துவாதாடலும் அரசியல் மற்றும் நிர்வாக மட்டங்களில் தீர்மானம் வகுப்போரிலும் பொதுவாகச் சிவில் சமூகத்திலும் கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தி வருகின்றது.[58]

போரில் ஈடுபட்ட இரு தரப்பினர்களாலும் இலங்கையில் நடைபெற்ற சிவில் யுத்தத்தின் போது அட்டூழியங்கள் இழைக்கப்பட்டன. யுத்தம் உக்கிரமடைந்த போது, விமர்சனங்களைச் சகித்துக்கொள்ளும் அரசின் சக்தி மிக மிக பலவீனமடைந்தது. மஹிந்த ராஜபக்ஷ 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக வந்ததன் பின்னர் குறிப்பாக இந்த நிலைமை காணப்பட்டது. அமுல்படுத்தப்பட்ட வேவுபார்த்தல் மற்றும் கண்காணிப்பு முறைமைகள் யுத்தத்தின் பின்னரும் தொடர்ந்தன. ஆனால் அவை முன்னைய ஆட்சியின் கீழ் முனைப்பின்றி மேற்கொள்ளப்பட்டன. எவ்வாறாயினும், கோதபாய ராஜபக்ஷ ஆட்சி, அச்சுறுத்தலை உருவாக்குவதற்காகவும் அமைப்புக்களைச் சமனிலையற்ற விதத்தில் பேணுவதற்காகவும் கண்காணிப்பினையும் வேவுபார்த்தலையும் அதிகரித்தது. உதாரணமாக, வெவ்வேறு புலனாய்வுக் கிளைகளைச் சேர்ந்ததாகக் கூறிக்கொண்ட பொலிசாரும் இராணுவ ஆளணியினரும் சிவில் சமூக அமைப்புக்களுக்குப் பல தடவைகள் விஜயம் செய்து அவற்றுக்குக் கிடைக்கும் நிதிகளின் மூலங்கள் பற்றியும் அங்கே பணியாற்றுபவர்கள் பற்றியும் விசாரித்து வந்தனர். பல்வேறு விசாரணைகள் சிவில் சமூக அமைப்புக்களைத் தொந்தரவு செய்ததால் அவை தம் பணிகளில் கவனம் குவிப்பதை விட அரசாங்க விசாரணைகளில் தம் சக்தியினைச் செலவழிக்கும் நிர்ப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம் காலத்திற்குக் காலம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டது. சிவில் சமூக அமைப்புக்களை அரசாங்கம் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் மிக்கவையாக நோக்குகின்றது என்ற மனப்பதிவினை இது உருவாக்குகின்றது.[59]

இவற்றினைப் பாதுகாத்துப் போஷிப்பதற்கு உதவக்கூடிய பொறிமுறை இல்லாமையினால் இலங்கையிலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களில் அதிகமானவை வெளிநாட்டு நிதியிடலிலேயே தங்கியுள்ளன. இவை வருடா வருடம் கிடைக்கும் நிதியிலேயே தங்கியுள்ளதுடன் எதிர்கால நிதியிடல் கிடைக்குமா என்ற நிச்சயமின்மையுடனேயே இயங்கி வருகின்றன. நாட்டில் நிலவி வரும் பொதுவான சூழல் உள்நாட்டு நிதியிடலுக்கு உகந்ததாக இல்லை என்பதுடன் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உதவுவதற்கு எந்த அரசாங்கமும் முயற்சிக்கவில்லை. அரச சார்பற்ற நிறுவனங்களை அரசாங்கங்கள் எப்போதுமே எதிராளிகளாகவும் பகைவர்களாகவுமே கருதுகின்றது. உண்மையில், அனைத்து அரசாங்கங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான வெளியினைக் கட்டுப்படுத்தவே முயற்சித்து வருகின்றன. வெகுமக்களில் பெரும்பான்மையானவர்கள் என வருகையில், கடை மட்டத்தில் மேற்கொள்ளப்படும் முன்னெடுப்புக்கள் சந்தேகத்தினையும் அவநம்பிக்கையினையும் ஏற்படுத்துகின்றன. ஏனெனில், டொலர்களைப் பெற்றுக்கொண்டு அந்நிய நாட்டு விழுமியங்களை ஊக்குவிக்கும் செயற்பாட்டாளர்களுடன் சிவில் சமூக அமைப்புக்கள் சமப்படுத்தப்படுகின்றன. குறிப்பாக, ராஜபக்ஷ அரசாங்கங்கள், பொதுவாக, சிங்கள பௌத்தத் தேசியவாதிகள், மனித உரிமைகளில் கவனம் குவிக்கின்ற மற்றும் சிறுபான்மையினருக்குச் சாதகமான விடயங்களில் கவனம் குவிக்கின்ற சிவில் சமூக அமைப்புக்களைத் “தேசியத்திற்கு

**பன்மைவாதம் சனநாயகத்திற்குப் பங்களிப்பு வழங்குகின்ற அதேவேளை, சனநாயகமும் பன்மைவாதத்திற்கு அதே போன்று பங்களிப்பு வழங்குகின்றது என எதிர்பார்ப்பதற்கு எவ்விதமான காரணமும் இல்லை என்பதையே நாடு கோடிட்டுக் காட்டுகின்றது.**

எதிரானவர்கள்" என்றும் தேசப்பற்றில்லாதவர்கள் என்றும் முத்திரை குத்தியமையும் இந்தப் புலனுணர்வினைத் தூண்டுவதில் ஒரு முன்னணி வகிபாத்திரத்தினை வகித்தது.[60] ஆனால் இந்தப் புலனுணர்வு அண்மைக் காலமாக மாறிவருகின்றது, குறிப்பாக, தற்போது நிலவும் பொருளதாரச் சூழமைவிலும் ஆர்ப்பாட்ட இயக்கச் சூழமைவிலும் இது மாறிவருகின்றது.

கொழும்பிலும் கொழும்பைச் சுற்றியும் அமைந்துள்ள முன்னணிச் சிவில் சமூக அமைப்புக்களால் இலகுவாக ஊடகங்களின் அவதானத்தினைப் பெற்று, அதனால் நன்கறியப்பட்டவையாக இருக்க முடியும் என்றாலும், நாடு எதிர்நோக்கியுள்ள கொவிட் – 19 இற்குப் பின்னரான பொருளாதார நெருக்கடியானது கிராமங்களில் சமூக வாழ்வின் நிலைகளையும் சமுதாய வாழ்வின் நிலைகளையும் கோடிட்டுக் காட்டியுள்ளது. நாட்டின் சனத்தொகையில் மிகப் பெரும்பான்மையாக இருப்பவர்கள் பௌத்தர்கள் என்பதாலும் கிராமிய பௌத்தர்களும் வலுவான தேசியவாதிகளாக இருப்பதாலும் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களும் சிங்கள பௌத்த விருப்புக்களுக்குத் தீனி போட்டதாலும் இவ்வாறான குழுக்களைச் சேர்ந்தவர்கள் அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்வதற்கு முன்னர் பெரிதாகக் காரணங்கள் எவையும் இருக்கவில்லை. ஆனால், பொருளாதார நெருக்கடியோ இவர்களின் நடத்தையினை மாற்றி, கிராமங்களில் இலங்கையின் சிவில் சமூகத்தின் செழுமையினை இச்செயன்முறை கோடிட்டுக் காட்டியுள்ளது. நாடு முழுவதும் பௌத்த மற்றும் இந்துக் கோவில்களும் பள்ளிவாயல்களும் சமய நடவடிக்கைகளைச் சமூக நடவடிக்கைகளுடன் இணைத்துள்ளதால், இது ஆச்சரியமேற்படுத்தும் ஒன்றல்ல. நாட்டில் எவ்வாறான சமூக – பொருளாதார நிலைமைகள் நிலவுகின்றன என்பதற்கு அப்பால், நாட்டினுள் பல்வேறு பட்ட சிவில் சமூகங்கள் உள்ளன என்பதையும் இது தெளிவாகக் காட்டுகின்றது. எவ்வாறாயினும், இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும் இன – மதத் தேசியவாதம் எவ்வாறு ஊடுருவியுள்ளது என்கின்ற காரணத்தினால் இவை எல்லாமே பன்மைவாதத்தினையே ஊக்குவிக்கின்றன என்பது இதன் அர்த்தமாகாது.

பெண்கள் சிவில் சமூகத்தில் முனைப்பான வகிபாத்திரத்தினை வகித்திருக்கின்றனர் மேலும் தொடர்ந்து வகித்து வருகின்றனர். எவ்வாறாயினும், அவர்களின் வகிபாத்திரங்களும் செயற்பாடுகளும் பொதுவாகச் சிதறடிக்கப்படுகின்றன, மேலும் சிறந்த ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையும் அவசியமாகவுள்ளது. பெண்கள் பிரதானமாகச் சமூகம் சார்ந்த விடயங்களிலும் அரசியல் செயற்பாட்டியத்தில் குறைவாகவும் செயற்படுவதற்கான எத்தனிப்பினைக் கொண்டுள்ளனர். அரசியல் செயற்பாட்டியத்தில் ஈடுபடுகின்ற பெண்கள் பிரதானமாக முறைசாரா வட்டங்களை விட மேட்டிய வட்டங்களைச் சார்ந்தவர்களாகவே உள்ளனர். நாடு எதிர்நோக்கியுள்ள கொவிடுக்குப் பின்னரான பொருளாதார நெருக்கடி பெண்களையும் ஆர்ப்பாட்டம் செய்வதற்கு நிர்ப்பந்தித்துள்ளது என்பதுடன் கிராமிய மட்டத்தில் சிவில் சமூக அமைப்புக்களில் பெண்கள் சம்பந்தப்படுகின்ற அளவினைப் பற்றி இப்போது ஒருவருக்கு உறுதியாகத் தெரிய வருகின்றது.

மொத்தத்தில், சனநாயகத்திற்குச் சார்பான சிவில் சமூக அமைப்புக்கள் இலங்கையில் இல்லை எனக் கூற முடியாது. இங்கே இல்லாதிருப்பது, சனநாயகத்திற்குப் பன்மைவாதம் எவ்வாறு அவசியப்படுகின்றது என்பது பற்றிய மெச்சுதலும் மிகவும் சகிப்புத்தன்மை மிக்க சமூகமுமே ஆகும். பன்மைவாதம் சனநாயகத்திற்குப் பங்களிப்பு வழங்குகின்ற அதேவேளை, சனநாயகமும் பன்மைவாதத்திற்கு அதே போன்று பங்களிப்பு வழங்குகின்றது என எதிர்பார்ப்பதற்கு எவ்விதமான காரணமும் இல்லை என்பதையே நாடு கோடிட்டுக் காட்டுகின்றது.

# 10. தனியார் துறை

## ஒட்டுமொத்த மதிப்பெண்: 6

மதம் | **மதிப்பெண்: 6**

இனம்| மதிப்பெண்: **6**

**மொத்தத்தில், ஒருவரின் சமுதாயத்தினைச் சேர்ந்தவர்களைத் தொழிலுக்கு அமர்த்தும் எத்தனிப்பு இனசமயம் சார்ந்த சமூகப் பிரிவுகளையே வலுப்படுத்துகின்றது.**

இலங்கை அரசு பெரும்பான்மைச் சமுதாயத்தினைச் சேர்ந்தவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதில் நாட்டம் கொண்டுள்ளதுடன் ஒப்பிடுகையில், இலங்கையின் தனியார் துறையோ இன – மதப் பாகுபாடின்றிச் செயற்படுவதாக உறுதிபடக் கூறுகின்றது. ஆனால், பன்மைவாதத்திற்கான வலுவான ஆதரவாளராகத் தனியார் துறை அரிதாகவே காணப்படுகின்றது என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டும். முரண்பாடு என்பது வியாபாரத்திற்கு உகந்ததல்ல என்பதைத் தனியார் துறை அங்கீகரிக்கின்ற அதேவேளை, பன்மைவாத விழுமியங்களை மேம்படுத்தும் உறுதியான நிலைப்பாட்டினை அது தவிர்த்தே வருகின்றது.

இலங்கையின் தனியார் துறையினை இரண்டு பிரதான குழுக்களாகப் பிரிக்க முடியும். சிறிய வர்த்தகர்கள் மற்றும் பெரிய கம்பனிகள். சிறிய வர்த்தகர்கள் குடும்ப உறுப்பினர்களை அல்லது தமது குடும்பங்களுக்குத் தெரிந்தவர்களைத் தொழிலுக்கு அமர்த்துவதற்கான எத்தனிப்பினையே கொண்டுள்ளனர், குறிப்பாகப் பதவியானது மிகவும் பொறுப்பு வாய்ந்ததாக இருக்கையில் இவ்வாறு ஆட்சேர்ப்புச் செய்ய எத்தனிக்கின்றனர். உதாரணமாக, தமிழ்ச் சாப்பாட்டுக் கடையில் தமிழர்கள் மாத்திரமே வேலை செய்வதற்கான சாத்தியம் காணப்படுகின்றது. அதேவேளை, சிங்கள வியாபாரிகள் பொதுவாகச் சிங்களவர்களையே தொழிலுக்கு அமர்த்துகின்றனர் (பொதுவாக அவர்களின் சொந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்களை அல்லது சமுதாயத்தினைச் சேர்ந்தவர்களை). இது முஸ்லிம் நிறுவனங்களுக்கும் உண்மையாகும். அவையும் சக முஸ்லிம்களை ஆட்சேர்ப்புச் செய்யவே விரும்புகின்றன. பாரிய வியாபார நிலையங்களைத் தவிர, முஸ்லிம் அல்லாதவர்கள் மத்தியிலான பொதுவான முறைப்பாடு என்னவென்றால், முஸ்லிம் வியாபாரங்கள் அவற்றின் சக மதத்தவர்களை மாத்திரம் தொழிலுக்கு அமர்த்தாது சக முஸ்லிம்களுடன் மிகவும் பரிவு மிக்க நிபந்தனைகளுடன் வியாபாரம் செய்கின்றன என்பதாகும்.[61]

சில வருடங்களுக்கு முன்னர் சில்லறைக் கடைகள், தொடர்பாடல் நிலையங்கள், வீடியோ நிலையங்கள், நகைக் கடைகள், சிறிய உணவு விடுதிகள், ஆடைக் கடைகள், உற்பத்தி நிலையங்கள், சிறு மருந்தகங்கள், ஹாட்வெயார்கள், மற்றும் வெவ்வேறு முறைசாராச் சேவைகள் போன்றவற்றில் கவனம் குவித்து நடத்தப்பட்ட கணிப்பீட்டில் இருந்து கண்டறியப்பட்டது என்னவெனில், சிறிய வியாபாரங்களில் 68 சதவிகிதமானவை அவற்றின் சொந்த இனச் சமுதாயத்தினைச் சேர்ந்த தொழிலாளர்களை மாத்திரம் தொழிலுக்கு அமர்த்துகின்றன என்பதும் 25 சதவிகிதமானவை இரண்டு இனச் சமுதாயங்களைச் சேர்ந்தவர்களையும் தொழிலுக்கு அமர்த்துகின்றது என்பதும் 7 சதவிகிதமானவை மாத்திரமே மூன்று பிரதான சமுதாயங்களில் இருந்தும் தொழிலுக்கு அமர்த்துகின்றன என்பதுமாகும்.[62] கடந்த தசாப்தங்களில் அதிகமான பெருந்தோட்டத் தமிழர்கள் (இந்தியத் தமிழர்கள்) ஏனைய குழுமங்களுக்குச் சொந்தமான சிறு நிறுவனங்களில் தொழிலுக்கு அமர்த்தப்பட்டிருப்பதைக் காண முடிந்தது. இது ஒரு வரவேற்கத்தக்க மாற்றமாகும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள கணிப்பீட்டில் மலையகத் தமிழர்கள் தமிழர் வகையினராகவே கருதப்பட்டனர் என்ற ஊகமே காணப்படுகின்றது. மொத்தத்தில், ஒருவரின் சமுதாயத்தினைச் சேர்ந்தவர்களைத் தொழிலுக்கு அமர்த்தும் எத்தனிப்பு இனசமயம் சார்ந்த சமூகப் பிரிவுகளையே வலுப்படுத்துகின்றது.

பாரிய கம்பனிகள் உயர் மட்ட ஆளணியினரைத் தொழிலுக்கு அமர்த்துகையில் பிரதானமாகத் திறமை அடிப்படையிலேயே செயலாற்றுகின்றன. துப்பரவாளர்களாகவும் சாரதிகளாகவும் பாதுகாப்புக் காவலாளிகளாகவும் பொதுவாகத் தொழிலுக்கு

அமர்த்தப்படும் கீழ் மட்டத்தினைச் சேர்ந்தவர்கள் சகல சமுதாயங்களையும் சார்ந்த விளிம்புநிலைப் பிரிவினரைப் பிரதிநிதித்துவம் செய்யும் எத்தனிப்பே காணப்படுகின்றது.

இலங்கையின் மிகப் பெரிய கம்பனிகளில் சிலவற்றின் உயர் பதவிகளில் எண்ணற்ற சிறுபான்மையினர் பணியாற்றுகின்றனர். இக்கம்பனிகளில் பல, மிகவும் தேவைப்படும் அந்நியச் செலாவணியினை விகிதாசாரமற்ற மட்டத்தில் உருவாக்குகின்றன. சுற்றுலாத்துறை, தேயிலை மற்றும் ஆடைத் தொழிற்துறை இது தொடர்பில் தனித்து விளங்குகின்றன.

தேயிலை மற்றும் ஆடைத் துறைகள் விகிதாசாரமற்ற எண்ணிக்கையில் பெண்களைத் தொழிலுக்கு அமர்த்துகின்றன. தொழிற்சாலைகளில் இதே துறைகளில் பணியாற்றும் ஆண்களுக்கு என்ன கொடுப்பனவு வழங்கப்படுகின்றனவோ அதனை விடக் குறைவாக இவர்களுக்குக் கொடுப்பனவு வழங்கப்படும் எத்தனிப்பே காணப்படுகின்றது.[63] எவ்வாறாயினும், முகாமைத்துவத்தின் உயர் மட்டத்தில் பெண்கள் குறைவாகவே பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றனர். இலங்கையில் ஆண்களை விடப் பெண்களே அதிக எண்ணிக்கையில் காணப்படுவதைத் தாண்டியும் பெண்கள் சராசரியாக முன்னணிப் பரீட்சைகளில் சிறப்பாகவும் பொதுவாக ஆண்களை விடத் திறமையாகவும் செயற்படுவதைத் தாண்டியுமே இந்த நிலை காணப்படுகின்றது.

சமுதாயவாத வைரசினால் நீண்ட காலம் பீடிக்கப்பட்ட ஒரு நாட்டில், தனியார் துறை தேசியவாதத்திற்கான அதன் பங்கினைப் பொருளாதாரச் சூழமைவில் எடுத்துக் காட்டியுள்ளது. எனவே, அற்பத்தனமான பொறாமைகள் சிங்களச் சிறு வியாபாரிகள் சகித்துக்கொண்ட சிங்களவர்களல்லாத போட்டியாளர்களுக்கு எதிராக வன்முறையினைத் தூண்டுவதற்கு அவர்களைத் தள்ளியுள்ளது. இஸ்லாமோபோபியாவினை அண்மைக் காலத்தில் தூண்டிய பொது பல சேன சிங்கள வியாபார நலன்களுடன் இணைந்துள்ளதாகக் கருதப்படுவதுடன் முஸ்லிம்களுக்குச் சொந்தமான நிறுவனங்களைத் தவிர்க்குமாறு நுகர்வோரை ஊக்குவித்து வருகின்றது.[64] கிழக்கு மாகாணத்தில், தமிழ்ச் சிறு வியாபாரிகள் தம்மை முஸ்லிம் சிறு வியாபாரிகளுக்கு எதிராக முன்னிறுத்துகின்றனர். அதேபோன்று முஸ்லிம் சிறு வியாபாரிகளும் செய்து வருகின்றனர். இந்தச் சூழமைவில், சமுதாய வன்முறையின் போது வியாபாரங்கள் இலக்குகளாக மாறுவது ஒன்றும் ஆச்சரியத்துக்குரியதல்ல.

அரசாங்கம் அண்மைக் காலங்களில் ஊழியர் ஓய்வூதியப் பணத்தினைத் தனியார் கம்பனிகளில் (குறிப்பாக நிதித் துறைகளில்) பங்குகளை வாங்குவதற்குப் பயன்படுத்தியுள்ளது. இதன் மூலம் கம்பனிச் சபைகளில் அதன் உறுப்பினர்களை ஏற்கனவே இருக்கும் உறுப்பினர்களுக்கு மேலதிகமாக அமர்த்தியுள்ளது. பல பெரும் தனியார் கம்பனிகள் இனச்சமய வன்முறைக்கு எதிராகப் பேசுவதற்கு நீண்ட காலமாகத் தயக்கம் கொண்டிருந்ததுடன் அவற்றின் சபைகளில் சிலவற்றில் அரசாங்கப் பிரதிநிதிகள் இருப்பது அவற்றின் அசட்டு தைரியத்தினையே அதிகரித்துள்ளது.[65]

இறுதியில், தனியார் துறையினுள் உள்ள பெரிய கம்பனிகள் பன்மைவாதத்தினை மேம்படுத்தும் சக்தியாக இருப்பதற்குத் தவறிவிட்டன. சிறிய தனியார் வியாபாரங்கள் பன்மைவாதத்தினைப் பலவீனப்படுத்துவதற்குப் பங்களிப்பு வழங்கியுள்ளன.

# IV. குழு அடிப்படையிலான சமத்துவமின்மைகள்

# 11. அரசியல் சமத்துவமின்மைகள்
## ஒட்டுமொத்த மதிப்பெண்: 6.5

மதம் | **மதிப்பெண்: 7**

இனம் | **மதிப்பெண்: 6**

இலங்கை சுதந்திரம் பெற்ற உடனேயே, நாட்டின் சிங்களவர்களும் சில உயர் சாதித் தமிழ்த் தலைவர்களும் தேயிலைப் பெருந்தோட்டங்களில் வேலை செய்த நாட்டின் இந்தியத் தமிழர்களில் பெரும்பான்மையானவர்களின் வாக்குரிமையைப் பறித்தனர். எனவே, 1931 ஆம் ஆண்டில் சர்வசன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டாலும், நாட்டின் மிகவும் விளிம்பு நிலையிலுள்ள சமுதாயத்தினரின் வாக்குரிமை திட்டமிடப்பட்டுப் பறிக்கப்பட்டமையே நாட்டின் முதலாவது ஜனநாயக விரோத நடவடிக்கையாக அமைந்தது. இது பின்னர் திருத்தப்பட்டதென்றாலும் தொடர்ந்து வந்த காலங்களில் நாடு பின்பற்றிய இன – மதப் பாதையினையே அது குறியீடாகக் காட்டி நின்றது.

இலங்கையர்கள் அவர்களின் வாக்கினை மதிக்கின்றனர், மேலும் அவர்கள் உயர் எண்ணிக்கையில் வாக்களிக்கின்றனர் (வாக்களிப்பில் 80 சதவிகிதத்தினைப் பொதுவாக நெருங்குகின்றனர் அல்லது மிகைக்கின்றனர், குறிப்பாக சனாதிபதித் தேர்தலில்) என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.[66] இந்த வாக்களிப்பானது தேசிய, மாகாண மற்றும் உள்ளூர் மட்டங்களில் நடைபெறுகின்றது (இருப்பினும், மாகாண மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளது). வன்முறை அச்சுறுத்தலைப் பயன்படுத்தி எதிர்க் கட்சியினைச் சேர்ந்தவர்கள் வாக்களிப்பதில் இருந்தும் தடுக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. அதிகரிக்கப்பட்ட இராணுவமயமாக்கம் வடக்குக் கிழக்கில் சில தமிழ் மக்கள் அவர்களின் வாக்குரிமையினைப் பயன்படுத்துவதைத் தடுக்கலாம். ஆனால், மொத்தத்தில், சகல சமுதாயங்களும் சார்பளவான சுதந்திரத்துடன் வாக்களிக்கும் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை நாடு பிரதானமாக நடத்துகின்றது.

இலங்கையில் தற்போது 100 இற்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகள் உள்ளன. இருப்பினும் இவற்றில் பல செயற்படாதுள்ளதுடன் சிறிய கட்சிகளாகவும் உள்ளன. பெரும்பான்மைச் சிங்கள பௌத்தர்களுக்குச் சிறந்த நிகழ்ச்சித்திட்டங்களை யார் வழங்கலாம் என்பது தொடர்பாக இரு பெரும் கட்சிகளுக்கிடையில் 1950களின் நடுப்பகுதியில் ஆரம்பித்த இன ரீதியான போட்டியானது தமிழ் மக்கள் பிரதானமாகத் தமிழ் வேட்பாளர்களுக்கே வாக்களிக்கும் நிலையினை உருவாக்கியது. இதே நிலைமை பாராளுமன்றத் தேர்தல்களில் தொடர்ந்து நிலவினாலும், ஜனாதிபதித் தேர்தல்களின் போது, சிங்கள பௌத்தத் தேசியவாதத்திற்குக் குறைந்த அளவில் ஆதரவு வழங்கும் வேட்பாளர்களுக்கே தமிழ் மக்கள் பொதுவாக வாக்களிக்கின்றனர். கடந்த நான்கு தசாப்தங்களாகக் குறிப்பாகச் சமுதாயத்தின் தேவைகளுக்குச் சேவையாற்றுவதற்காக முஸ்லிம் கட்சிகள் இயங்கி வந்த நிலையில், முஸ்லிம்களும் இப்போது பாராளுமன்றத் தேர்தல்களின் போது அவர்களின் சக சமயவாதிகளுக்கு வாக்களிக்கின்றனர். இவர்கள், ஜனாதிபதித் தேர்தல்களின் போது உக்கிரம் குறைந்த சிங்கள பௌத்தத் தேசியவாதிகளுக்கு வாக்களிக்கின்றனர்.

போட்டியிடுவதற்கும் எதிர்த்து நிற்பதற்குமான ஆற்றல் ஜனநாயகத்தின் அடிப்படை அம்சங்களாகும் என்பதுடன் இந்த விடயத்தில் இலங்கை உயர் தரத்தினைப் பேணி வருகின்றது. ஆனால், பௌத்தரல்லாத ஒருவர் நாட்டின் சனாதிபதியாவதை ஒருவரால் எண்ணிப் பார்க்க முடியாது. உண்மையில், சந்திரிக்கா குமாரதுங்கவின் சனாதிபதிப் பதவியின் போது, பிரிவினைவாத எல்டிடிஈற்கு எதிராக நாடுகளைப் பிணைப்பதில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் என்ற ரீதியில் முன்னணி வகிபாத்திரத்தினை வகித்த லக்ஷ்மன் கதிர்காமர் பிரதமராக வரலாம் என்ற எண்ணக்கருவினை பௌத்த தேசியவாதிகள் அவர் தமிழர் என்ற ஒரே காரணத்திற்காக

**சுருங்கக் கூறின், இலங்கையின் அரசியல் முறைமையினுள் அரசியல் பங்கேற்பும் போட்டியும் நன்கு வேரூன்றியுள்ள சிங்கள பௌத்தத் தேசியவாதச் சித்தாந்தத்தின் மத்தியில் இருந்தே நிகழ்கின்றன. இலங்கையில் வாழும் சிறுபான்மையினர்கள் சிங்கள பௌத்தத் தாட்சணியத்திற்கு நன்றி கூறவேண்டும் என்றும் சிங்கள பௌத்த மேலாண்மைக்குச் சவால் விடுக்கக் கூடிய முறையற்ற கோரிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது என்றும் இச்சிந்தாந்தம் வாதிடுகின்றது.**

எதிர்த்தனர்.[67] சுருங்கக் கூறின், இலங்கையின் அரசியல் முறைமையினுள் அரசியல் பங்கேற்பும் போட்டியும் நன்கு வேரூன்றியுள்ள சிங்கள பௌத்தத் தேசியவாதச் சித்தாந்தத்தின் மத்தியில் இருந்தே நிகழ்கின்றன. இலங்கையில் வாழும் சிறுபான்மையினர்கள் சிங்கள பௌத்தத் தாட்சணியத்திற்கு நன்றி கூறவேண்டும் என்றும் சிங்கள பௌத்த மேலாண்மைக்குச் சவால் விடுக்கக் கூடிய முறையற்ற கோரிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது என்றும் இச்சிந்தாந்தம் வாதிடுகின்றது.

90 சதவிகிதத்திற்கும் அதிகமான சிங்களவர்களைக் கொண்டுள்ள இலங்கையின் பணித்துறையாட்சியினை நோக்கும் போது, பேரினவாதப் பொதுப்பண்பு தெளிவாகத் தெரியும். இதே போன்று இலங்கை இராணுவத்திலும் கிட்டத்தட்ட 96 சதவிகிதமான சிங்களவர்கள் காணப்படுகின்றனர்.[68] சிங்கள அரச அதிகாரிகள் தமிழ் மேலாளர்களின் கீழ் வேலை செய்வதற்கு மறுத்த சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன.[69] அரசாங்கத்தினுள் சேவையாற்றுகையில், மிக முக்கியமான அரசாங்கப் பதவிகளைச் சிறுபான்மையினர்கள் அரிதாகவே பெற்றுக்கொள்கின்றனர். இதன் அடிப்படையில் நோக்குகையில், அரசாங்கத்தினுள் தீர்மானம் வகுத்தல் என்பது தெளிவாகவே பெரும்பான்மைச் சமுதாயத்தின் ஆதிக்கத்திற்கு உட்பட்டுள்ளது. குறிப்பாக, ராஜபக்ஷ ஆட்சியின் கீழ் இடம்பெற்ற அதிகரித்த இராணுவமயமாக்கம், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் (இந்த மாகாணங்கள் இரண்டில் மாத்திரமே சிங்களவர்கள் பெரும்பான்மையினராக இல்லை) எவ்வாறு ஆளப்பட வேண்டும் என்பதில் இராணுவம் ஆதிக்கம் செலுத்துவதற்கு இட்டுச் சென்றது.[70] இப்பிரதேசங்களில் வாழும் சிறுபான்மையினர், சமூக – பொருளாதார ரீதியாக மிகவும் விளிம்பு நிலையிலுள்ளவர்களாக இருப்பதால், ஆளுகையில் காணப்படும் சமமற்ற பிரதிநிதித்துவத்தில் இருந்து எழும் வலுக்குறைப்பு இவ்வாறான சிறுபான்மையினர் தற்போது எதிர்நோக்கும் சமத்துவமின்மையினை மேலும் அதிகரிக்கவே செய்யும்.

உலகின் முதலாவது பெண் பிரதமரை இந்த நாடு உருவாக்கியிருந்தாலும், பெண் ஜனாதிபதி ஒருவரைத் தேர்வு செய்திருந்தாலும் காலத்திற்குக் காலம் பல்வேறு அரசாங்க மட்டங்களில் எண்ணற்ற பிரபலமிக்க பெண்களை நியமித்திருந்தாலும், அரசியல் வாழ்வில் பெண்கள் தொடர்ந்தும் குறைவாகப் பிரதிநிதித்துவம் செய்யப்படுபவர்களாகவே உள்ளனர். தற்போதைய பாராளுமன்றத்தில் 12 பெண்கள் மாத்திரமே காணப்படுகின்றனர் (225 பேரில்). இது ஆறு சத வீதத்தினையும் விடக் குறைவானதாகும். 27 அமைச்சர்களில் ஒரே ஒரு பெண் அமைச்சரே உள்ளார். உள்ளூராட்சி மட்டத்தில் 25 சத விகித ஆசனங்கள் பெண்களுக்காக ஒதுக்கப்பட வேண்டும் என்றாலும், வேட்புமனுத் தாக்கல் செய்யும் செயன்முறைக்கு அப்பால் இதனை அமலாக்குவதற்கு தேர்தல் ஆணைக்குழுவிடம் எவ்விதமான பொறிமுறையும் இல்லாதிருக்கின்றது. தேர்வு செய்யப்படுபவர்கள் இன்னும் செயற்திறன் மிக்க பிரதிநிதிகளாக வருவதற்குத் தேவைப்படும் வசதிகளும் பயிற்சியும் அற்றவர்களாக இருப்பதோடு மாத்திரமன்றி, பெண்களை வலுவூட்டும் விதத்தில் (தேர்வு செய்யப்படுபவர்கள் மற்றும் தமது தேர்தல் தொகுதிகளில் உள்ளவர்கள்) இந்தக் கோட்டாவினைப் பயன்படுத்துவதற்கு அரசியல் கட்சிகளில் ஆதிக்கம் செலுத்தும் ஆண்கள் விரும்பாதிருக்கின்றனர். உண்மையில், பதவிகளுக்காகப் போட்டியிடுவதற்கு ஏற்படும் செலவுகள் மற்றும் பெண்களை நியமனம் செய்வதற்கு ஆண் அரசியல்வாதிகள் “பாலியல் இலஞ்சம்” கோருவது உள்ளடங்கலான பால்நிலைப் பாகுபாடுகள் ஆகியன பெண்கள் எதிர்நோக்கும் தடைகளுள் உள்ளடங்குகின்றன.[71]

# 12. பொருளாதாரச் சமத்துவமின்மைகள்
## ஒட்டுமொத்த மதிப்பெண்: 5

மதம் | **மதிப்பெண்: 5**

இனம் | **மதிப்பெண்: 5**

உலக வங்கி அறிக்கையின் படி, இலங்கையின் ஜீனிச் சுட்டியின் பெறுமதி 1990 ஆம் ஆண்டில் 32.4 ஆகக் காணப்பட்டாலும் 2016 ஆம் ஆண்டில் அது 39.80.[72] எனப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் விரிவடைந்துள்ளன என்பதற்கான மிகச் சிறந்த குறிகாட்டியாக இது காணப்படுவதுடன் இதற்கான பெரும் காரணம் 1977 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த சந்தைக் கொள்கைகளாகும். இலங்கை அதன் முன்னைய இறுக்கமான பொருளாதாரக் கொள்கைகளில் இருந்தும் தன்னிறைவில் இருந்தும் விலகியதால் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) அதிகரித்தது. நாடு கீழ் நடுத்தர வருமான அந்தஸ்தினை அடைவதற்கு இந்த மாற்றம் உதவியதுடன் 2019 ஆம் ஆண்டில் தலா நபர் வருமானம் US$3,852 ஆகக் காணப்பட்டது.[73] பொருளாதார ஏற்றத்தாழ்வின் அதிகரிப்புக்குப் பங்களிப்பு வழங்கியே இந்த மாற்றம் நிகழ்ந்தது. எவ்வாறாயினும், சுதந்திரத்திற்குப் பின்னரான சமவுடைமைக் கொள்கைகளுக்குச் சார்பான கொள்கைகள் தொடர்ந்தும் சில நன்மைகளை வழங்கின. மேலும், மனித விருத்திச் சுட்டித் (HDI) தரமிடலில் நாட்டின் சார்பளவான உயர் நிலையானது இதற்குச் சான்றாக விளங்குகின்றது. 2019 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் HDI பெறுமதி 0.782 ஆகும். இது இலங்கையை உயர் மனித விருத்தி வகையில் பேணி, 189 நாடுகளிலும் பிராந்தியங்களிலும் இலங்கையை 72 வது நாடாக நிலைப்படுத்துகின்றது (மொத்தத் தேசிய உற்பத்தியின் தரமிடலான 113 உடன் ஒப்பிடுகையில்).

2021 ஆம் ஆண்டும் 2022 ஆம் ஆண்டும் நாட்டினைப் பாதித்த கொவிட் – 19 பெருந்தொற்றும் அந்நியச் செலாவணி நெருக்கடியும் சமத்துவமின்மையினை மேலும் விரிவாக்குவதற்குக் காரணமாகின.[74] இருப்பினும், இவ்வாறான சமத்துவமின்மையினால் சில குறிப்பிட்ட இன – மதக் குழுமங்கள் எவ்வாறு வித்தியாசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன என்பது தெளிவற்றதாக உள்ளது. கொரொனா வைரஸ் பெருந்தொற்றுக்கு முன்னமே கூட இவை தொடர்பான தரவுகள் நாட்டில் இல்லாதிருந்தன. எனவே, தனித்துவமான கணிப்பீடுகள் நடத்தப்படாவிட்டால், இன மதச் சமுதாயங்களின் மத்தியில் பொருளாதாரச் சமத்துவமின்மைகள் எந்த அளவுக்கு விரிவடைந்துள்ளன என்பதைப் பூரணமாகத் தீர்மானிப்பது சவால்மிக்கதாக இருக்கும். செய்தி விபரணைகள் மற்றும் நாட்டில் அவதானிக்கத்தக்க பொதுவான சூழ்நிலைகள் ஆகியவற்றின் அடிப்படையில் நோக்குகையில், கொவிட் காலத்திற்குப் பின்னர் பொருளாதாரச் சமத்துவமின்மை விரிவடைந்துள்ளதுடன் ஏற்கனவே சமூக - பொருளாதார ரீதியாக விளிம்பு நிலையிலுள்ளவர்கள் இவ்வாறான சமத்துவமின்மைகளின் தாக்கத்திற்கு இப்போது முகங்கொடுத்து வருகின்றனர்.[75]

அனைத்துச் சமுதாயங்களையும் சேர்ந்த இளைஞர்களில் கணிசமான விகிதாசாரத்தினர் தம்மால் இயலுமாக இருப்பின் புலம்பெயரவே விரும்புகின்றனர் என்பதை அண்மைய கணிப்பீடு காட்டுகின்றது.[76] கொவிட் – 19 இனால் தொழிற் சந்தை பல வழிகளில் பாதகமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. 2020 மார்ச் 20 பொருளாதார ஸ்தம்பிதத்துடன் முறைசாராத் துறையினைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானவர்கள் உடனடியாகவே தொழில்வாய்ப்பிழந்தவர்களாக மாறினர் அல்லது தொழில் புரிந்த பலரின் தொழில்வாய்ப்புக்கள் பறிக்கப்பட்டன. தனியார் துறை ஊழியர்கள் இந்த அலையினால் பாதிக்கப்பட்டனர். சுருங்கக் கூறின், திரும்பி வருகின்ற அல்லது புலம்பெயர அபிலாஷை கொண்டுள்ள புலம்பெயர் தொழிலாளர்களைக் கருத்தில் கொள்ளாமல் பார்த்தாலும் கூட, இலங்கைத் தொழிற் சந்தை ஏற்கனவே கொவிட் – 19 இனால் ஏற்கனவே இடர்நிலையில் காணப்படுகின்றது.[77]

**கல்வி, சுகாதாரம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் போதிய அளவில் கிடைக்காமை, பெருவாரியாகக் கிராமிய மாவட்டங்களில் வாய்ப்புக்கள் இல்லாமை ஆகியனவே, மேல் மாகாணத்திற்கும் ஏனைய மாகாணங்களுக்கும் இடையில் காணப்படும் பொருளாதாரச் சமத்துவமின்மைக்கான பிரதான காரணங்களாகக் காணப்படுகின்றன. பொதுவாக, சிறுபான்மையினர் பெருவாரியாக வாழும் பிரதேசங்களில், ஒட்டுமொத்தப் பொருளதாரக் கண்ணோட்டத்தில் நோக்குகையில், அவர்கள் அனுகூலம் கிட்டாதவர்களாகவே உள்ளனர்.**

வகுப்பு அடிப்படையில் இருந்து நோக்குகையில், செல்வமிக்க 20 சதவிகிதத்தினர் பிறப்பிக்கப்படும் மொத்தக் குடும்ப வருமானத்தில் அரைவாசிக்கும் அதிகமானவற்றினை அனுபவிக்கின்ற அதேவேளை வறியவர்களான 20 சதவிகிதத்தினர் 5 சதவிகிதத்தினை மாத்திரமே அனுபவிக்கின்றனர். மிகவும் வறிய 10 சதவிகித குடும்பங்களின் நிலைமை மிக மோசமானதாகக் காணப்படுவதுடன் இவர்களின் பங்கு 1.8 சதவிகிதத்தினை விடக் குறைவாகவே காணப்படுகின்றது.[78] ஓர் ஊழியப் படையில், 53 சதவிகிதத்தினர் முறைசாராத் துறையினைப் பிரதிநிதித்துவம் செய்கின்றனர், 29 சதவிகிதத்தினர் முறைசார் தனியார் துறையினைப் பிரதிநிதித்துவம் செய்கின்றனர் மற்றும் 18 சதவிகிதத்தினர் அரச துறையினைப் பிரதிநிதித்துவம் செய்கின்றனர் – இதில் அரச துறையில் 1.5 லட்சம் ஆளணியினர் உள்ளனர்.[79]

மேலும், மிகவும் கூர்மையான பிராந்திய / மாகாண வேறுபாடுகளும் காணப்படுகின்றன. கொழும்பு அமைந்துள்ள மேல் மாகாணத்தில் 39 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தி பிறப்பிக்கப்படுவதுடன் நாட்டின் சனத்தொகையில் 29 சதவிகிதமானவர்கள் இங்கு வாழ்கின்றனர். கல்வி, சுகாதாரம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் போதிய அளவில் கிடைக்காமை, பெருவாரியாகக் கிராமிய மாவட்டங்களில் வாய்ப்புக்கள் இல்லாமை ஆகியனவே, மேல் மாகாணத்திற்கும் ஏனைய மாகாணங்களுக்கும் இடையில் காணப்படும் பொருளாதாரச் சமத்துவமின்மைக்கான பிரதான காரணங்களாகக் காணப்படுகின்றன. பொதுவாக, சிறுபான்மையினர் பெருவாரியாக வாழும் பிரதேசங்களில், ஒட்டுமொத்தப் பொருளதாரக் கண்ணோட்டத்தில் நோக்குகையில், அவர்கள் அனுகூலம் கிட்டாதவர்களாகவே உள்ளனர். இருப்பினும், ஊவா மாகாணத்தில் உள்ள பெருவாரியாகச் சிங்களவர்கள் வாழும் பிரதேசங்களும் பொருளாதார ரீதியாகத் தாக்கமடைந்துள்ள நிலைமைகளையே அனுபவிக்கின்றன. அரச தொழில்வாய்ப்பு என வருகையில் பெரும்பான்மைச் சமுதாயத்திற்கு வாய்ப்பளிப்பதற்கான அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களின் விருப்பங்களினால் இந்த நிலைமை மோசமாக்கப்பட்டுள்ளது. சிங்கள பௌத்தர்களைத் தொழிலுக்கு அமர்த்துவதற்கான இந்த விருப்பு குறிப்பாக இராணுவத்தில் மிகவும் தூக்கலாகக் காணப்படுகின்றது.[80]

பெருவாரியாகத் தமிழர்கள் வாழும் வடகிழக்கிலேயே சிவில் யுத்தம் பிரதானமாக நடைபெற்றது. எனவே, ஏற்கனவே செழிப்பற்றிருந்த பிராந்தியத்தின் பொருளாதாரம் இதனால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது ஒன்றும் ஆச்சரியத்துக்குரியதல்ல. வட மாகாணத்தின் மொத்தத் தேசிய உற்பத்தி 5 சதவிகிதமாகக் காணப்படுகையில், மிக வறிய குழுவினுள் வரும் இலங்கைக் குடும்பங்களில் ஆகக் கூடிய சதவிகிதமானவர்கள் வடகிழக்கு மாவட்டங்களான முல்லைத்தீவிலும் (சனத்தொகையில் 71 சதவிகிதம்) கிளிநொச்சியிலும் (66 சதவிகிதம்) மட்டக்களப்பிலும் (65 சதவிகிதம்) வாழ்கின்றனர்.

யுத்தத்திற்குப் பின்னரான சிங்கள பௌத்த வெற்றிக்களிப்பும் இராணுவமயமாக்கமும் இராணுவத்தினால் நடத்தப்படும் சுற்றுலா விடுதிகள் உருவாகுவதற்குக் காரணமாகியுள்ளன. இது பிராந்தியத்தில் உள்ள சிறுபான்மையினரின் தொழில்முனைவுக்கான வாய்ப்புக்களைக் குறைத்துள்ளது. சிங்களவர்களால் ஆதிக்கம் செலுத்தப்பட்ட தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களும் வடகிழக்கில் மிகக் குறைவாகவே கவனம் செலுத்தின. ஏனெனில், அரசியல்வாதிகளில் அதிகமானவர்களின் தளங்கள் நாட்டின் ஏனைய பகுதிகளிலேயே அமைந்திருந்தன. சிவில் யுத்தம் இயலுமாக்கிய இந்தப் புறக்கணிப்பு பொருளாதார ரீதியாகப் பின்தங்கியிருந்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஏற்படுத்திய தாக்கங்கள் அற்பமானவையல்ல.

பிரதானமாக இந்தியத் தமிழர்களான மலைநாட்டுத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மோசமான வாழ்க்கை நிலைமைகளில் மிகக் குறைந்த சம்பளங்களுடன் வாழ்வது, இவர்கள் முறையான கல்வியினை அல்லது சுகாதார வசதிகளை அணுகுவதைத் தடுக்கின்றது. தொடர்ச்சியாக மலிவான தொழிற் படை கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்காக இந்தப் பிரதேசங்களை வளங்களற்ற பிரதேசங்களாக வைத்திருப்பதற்குச் சில அரசாங்க அதிகாரிகள் திடசங்கற்பம் பூண்டிருப்பதாகவே தென்படுகின்றது. இருப்பினும், பல இளம் தோட்டத் தமிழர்கள் நகரப் பிரதேசங்களில்

**இவ்வாறு இருந்த போதிலும், பெண்களுக்குக் குறைவாகவே கொடுப்பனவு வழங்கப்படுவதுடன் தொழிற் படையில் இவர்கள் குறைவாகவே பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றனர்.**

உள்ள சிறிய கடைகளிலும் உணவகங்களிலும் தொழில்களைப் பெற்றுக்கொள்வதில் வெற்றி கண்டுள்ளனர்.

இந்தியத் தமிழர்களினதும் இலங்கைத் தமிழர்களினதும் வறுமை வீதங்கள் முறையே 3.3 மற்றும் 5.3 சதவிகிதம் சிங்கள மக்களின் வறுமை வீதத்தினை விட அதிகமாகக் காணப்படுகின்றன. ஒட்டுமொத்த வறுமைத் தலை எண்ணிக்கையான 32.1 சதவிகிதத்துடன் ஒப்பிடுகையில், இந்தியத் தமிழர்களுக்கான வறுமைத் தலை எண்ணிக்கை 46.3 சதவிகிதமாகவும் இலங்கைத் தமிழர்களுக்கான வறுமைத் தலை எண்ணிக்கை 44.4 சதகிவிதமாகவும் உள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளது.[81]

பெரும் எண்ணிக்கையான பெண் தலைமைக் குடும்பங்கள் வட மாகாணத்தில் தமிழ்ப் பெண்களைக் குறிப்பாகப் பாதிப்புறுநிலைக்கு ஆளாக்குகின்றன. பெருந்தோட்டத் துறையும் பெரும் எண்ணிக்கையான தமிழ்ப் பெண்களைத் தேயிலைக் கொழுந்து பறிப்பவர்களாகத் தொழிலுக்கு அமர்த்தியுள்ளதுடன் இந்தச் சமுதாயம் இலங்கையில் நீண்ட காலமாக மிகவும் பாகுபாட்டுக்கு உட்பட்ட மற்றும் மிகவும் விளிம்பு நிலைக்கு ஆளான சமுதாயமாக இருந்து வருகின்றது. அதிகமான ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களும் பெண்களாக உள்ளனர் - தெற்கிலுள்ள தொழிற்சாலைகளில் உள்ள சிங்களவர்களும் சிவில் யுத்தத்தின் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட வட மாகாணத் தொழிற்சாலைகளிலுள்ள தமிழர்களும் சுரண்டப்பட்டு வருகின்றனர்.[82] இருப்பினும் இவர்கள் ஏனைய பிரதேசங்களில் உள்ள மிகவும் குறைந்த வருமானம் பெறும் பெண்களை விட மிகவும் ஒழுங்கமைக்கப்பட்டவர்களாகவும் வலுவூட்டப்பட்டவர்களாகவும் உள்ளனர்.[83] பிரதானமாக மத்திய கிழக்கில் பணியாற்றும் பெண்கள் அனுப்பிவைக்கும் பணத்துடன் சேர்த்து நோக்குகையில், இலங்கையின் பொருளாதாரம் பெண்களாலேயே சுமக்கப்படுகின்றது என்றால் அது மிகையாகாது.

இவ்வாறு இருந்த போதிலும், பெண்களுக்குக் குறைவாகவே கொடுப்பனவு வழங்கப்படுவதுடன் தொழிற் படையில் இவர்கள் குறைவாகவே பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றனர். ஆண்களும் பெண்களும் ஒரே விதமான எழுத்தறிவு வீதத்தினைக் கொண்டுள்ளதைத் தாண்டியே இந்த நிலை காணப்படுகின்றது. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொழிற் படைக் கணிப்பீட்டின் படி, 2019 ஆம் ஆண்டில், தொழிற்படையில் பங்குபற்றிய 73 சதவிகித ஆண்களுடன் ஒப்பிடுகையில், 35 சதவிகிதமான பெண்கள் மாத்திரமே தொழிற் படையில் பங்குபற்றியிருந்தனர். முகாமைத்துவப் பதவிகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் 26 சதவிகிதமாகக் காணப்படுகின்றது. தீர்மானம் வகிக்கும் பதவிகளில் இவர்கள் கீழ் மட்டத்தில் தரமிடப்பட்டுள்ளதை இது தெளிவாகக் காட்டுகின்றது.[84] மேலும், சர்வதேச தொழில் அமைப்பினால் 2016 ஆம் ஆண்டு இலங்கையில் தனியார் துறை தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வின் படி, திட்டவட்டமாக ஒரே தொழிலுக்காக, அதே தொழிலைச் செய்யும் தங்கள் சகபாடிகளான ஆண்களை விடப் பெண்கள் 30 முதல் 36 சதவிகிதம் குறைவாகவே ஊதியம் ஈட்டுகின்றனர் என்பது தெரியவந்துள்ளது.

நாட்டிலுள்ள இலங்கையர்கள் சொத்துக்களைச் சொந்தமாகக் கொண்டுள்ளதுடன் சொத்துக்களை வாங்குவதற்கும் விற்பதற்குமான சுதந்திரத்தினைக் கொண்டுள்ளனர். ஆனால் முஸ்லிம் சமுதாயம் என வருகையில் இந்த நிலைமை வித்தியாசமாகவுள்ளது. ஏனெனில், முஸ்லிம்களுக்குச் சொத்துக்களை விற்பதற்கு விரும்பாதவர்கள் உள்ளனர், அத்துடன் முஸ்லிம்களுக்கு விற்க வேண்டாம் எனத் தேசியவாதிகள் வழங்கும் அழுத்தத்திற்கு உட்படுபவர்களும் உள்ளனர். இதனால் முஸ்லிம்கள் பொதுவாகச் சொத்துக்களை வாங்குவதற்கு இடைத் தரகர்களைப் பயன்படுத்த வேண்டியுள்ளதால் சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கு அதிக பணம் செலுத்த வேண்டியும் இருக்கின்றது. வடகிழக்கில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் இராணுவமயமாக்கத்தினால் தமிழ் மக்கள் அவர்களின் பரம்பரைக் காணிகளை அணுகுவதில் இருந்தும் தடுக்கப்பட்டுள்ளனர் (ஓரளவுக்கு முஸ்லிம்களும் தடுக்கப்பட்டுள்ளனர்). காணி அபகரிப்பின் மூலம் அரசியல் செல்வாக்கு உள்ளவர்கள் அரச காணிகளை அபகரிப்பது ஒரு பொதுவான விடயமாக மாறியுள்ளதுடன் இது நாட்டில் சட்டத்தின் ஆட்சி

வீழ்ச்சியடைந்திருப்பதையே காட்டுகின்றது. குறிப்பாக, தமிழ் மக்கள் சிவில் யுத்தம் முடிவடைந்ததில் இருந்து இந்த நடைமுறையினால் பாதிக்கப்பட்டவர்களாக உள்ளனர்.[85]

## 13. சமூகச் சமத்துவமின்மைகள்

## ஒட்டுமொத்த மதிப்பெண்: 7

மதம் | **மதிப்பெண்: 7**

இனம் | **மதிப்பெண்: 7**

**இதற்கு ஒரு காரணம், ஆயுதச் சேவைகள் பிரதானமாகச் சிங்கள பௌத்தர்களையே ஆட்சேர்ப்புச் செய்துள்ளமையும் இராணுவம் இப்போது ஒரு தொழில் நிகழ்ச்சித்திட்டமாகக் கருதப்படுவதாலும் ஆகும். எனவே, சுகாதாரம் மற்றும் கல்வியினை விட இராணுவச் செலவுகளுக்காக நாடு அதிக வளங்களைத் தொடர்ந்து ஒதுக்கி வருகின்றது. கொவிட் – 19 பெருந்தொற்று ஏற்பட்டமையினைத் தாண்டியே இது நிகழ்கின்றது.**

மருந்தகங்கள், வைத்தியசாலைகள், முதியோர் பராமரிப்பு இல்லங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் அனாதை இல்லங்கள் வரையானவற்றினைக் கொண்டிருக்கும் அரசினால் நடத்தப்படும் நிறுவனங்களில் கிடைக்கும் இலவசக் கல்வி மற்றும் கல்வி வசதிகள் வரை பரவியிருக்கும் இலங்கையில் அமுலில் உள்ள பரிபூரணமான சமூக நலனோம்புகை நிகழ்ச்சித்திட்டம் இலங்கை அதன் மனித விருத்திச் சுட்டியில் சார்பளவில் உயர் தரத்தினை அடைவதற்கு உதவியுள்ளது. சிவில் யுத்தத்தின் போது போராளிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்களில் உள்ள நிறுவனங்களுக்கு நிதியளிப்பதற்கு அரசு மேற்கொண்ட பிரயத்தனம், சமூக நலனோம்புகை நிகழ்ச்சித்திட்டங்களுக்கான பூரணமான கடப்பாட்டினையே கோடிட்டுக் காட்டுகின்றது (தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்களில் வாழ்ந்த தமிழர்களுக்கும் அரசாங்கம் கடப்பாடு கொண்டிருந்தது என்கின்ற கருத்தினை இது நியாயப்படுத்தியது). இந்தக் கடப்பாடு மக்களில் அதிகமானவர்களின் மத்தியில் ஓர் உரித்தாக இப்போது உணரப்படுகின்றது. இதனால், சமூக நிகழ்ச்சித்திட்டங்களை யாராவது நிறுத்துவதற்கு அல்லது தனியார்மயப்படுத்த விரும்பினால் மக்கள் அதற்கெதிராக ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.

குறைந்து வரும் வளங்களின் காரணமாகவும் ஊழல் காரணமாகவும் யுத்தம் முடிந்திருந்தும் பாரிய அளவிலான இராணுவ வரவுசெலவுத் திட்டம் காரணமாகவும் இவ்வாறான நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்திருந்த தரம் பாதிப்படையத் தொடங்கியது. உதாரணமாக, சிவில் யுத்தம் முடிவடைந்த பின்னர் இலங்கை அதன் இராணுவத்தினைக் கலைப்பதற்கு மறுத்துவிட்டது. இதற்கு ஒரு காரணம், ஆயுதச் சேவைகள் பிரதானமாகச் சிங்கள பௌத்தர்களையே ஆட்சேர்ப்புச் செய்துள்ளமையும் இராணுவம் இப்போது ஒரு தொழில் நிகழ்ச்சித்திட்டமாகக் கருதப்படுவதாலும் ஆகும். எனவே, சுகாதாரம் மற்றும் கல்வியினை விட இராணுவச் செலவுகளுக்காக நாடு அதிக வளங்களைத் தொடர்ந்து ஒதுக்கி வருகின்றது. கொவிட் – 19 பெருந்தொற்று ஏற்பட்டமையினைத் தாண்டியே இது நிகழ்கின்றது.[86] நாடு எதிர்நோக்கியுள்ள அந்நியச் செலாவணி நெருக்கடியானது அரசாங்கம் இறக்குமதிகளைத் துண்டிக்க நிர்ப்பந்தித்துள்ளது. இதில், அத்தியாவசியமான மருந்துகளும் உள்ளடங்குகின்றன. நாட்டில் நிலவும் பொருளாதாரப் பிரச்சினைகளின் காரணமாகச் சுகாதாரத் துறை மிக மோசமாகப் பாதிக்கப்படும் சாத்தியமுள்ளது.

கல்வியில் காணப்படும் நகர – கிராமப் பிளவினை கொரொனா வைரஸ் குறிப்பாகக் கோடிட்டுக் காட்டியுள்ளது. கிட்டத்தட்ட இலங்கையிலுள்ள சகல பிள்ளைகளும், கிராமத்துப் பாடசாலைகளில் தரமான ஆசிரியர்களும் வசதிகளும் இல்லாதிருந்தாலும் கூட ஆரம்பப் பாடசாலைகளுக்குச் செல்கின்றனர். பல்கலைக்கழகக் கல்வி தொடர்ந்தும் இலவசமாகக் காணப்படுவதுடன் கிராமிய மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் நன்கு பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றனர் (கோட்டா முறைமையும் ஒரு காரணம்). சகல கற்பித்தல்களும் ஒன்லைனில் நடத்தப்பட வேண்டும் என நிர்ப்பந்திக்கப்பட்ட போது, கணினிகளுக்கும் ஸ்மார்ட் தொலைபேசிகளுக்கும் அணுகலற்ற கிராமப் பிரதேசங்கள் அல்லது வறிய குடும்பங்கள், தங்களின் பிள்ளைகள்

**உயர் எண்ணிக்கையில் பெண்கள் சேர்ந்த போதிலும், பால்நிலை ஏற்றத்தா-ழ்வுகள் காரணமாகப் பெண்கள் தொடர்ந்தும் தாழ்வான திறன்களைக் கொண்டுள்ளனர், இதன் காரணமாகக் குறைந்த ஊதியம் வழங்கப்படும் தொழில்களிலேயே சேர்கின்றனர்.**

பாடங்களைத் தவற விடவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காக அதீத வலிமிக்க சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டது. கிராமப் பிரதேசங்களைச் சேர்ந்த மாண-வர்கள் இணையச் சமிக்ஞைகளைப் பெற்றுக்கொள்வதற்காகக் கூரை மீதும் மரங்கள் மீதும் குன்றுகளின் மீதும் ஏறியதை ஊடகங்கள் தொடர்ச்சியாக அறிக்கையிட்டன. செய்தி அறிக்கைகளின் அடிப்படையில், மாணவர்களில் 50 சதவிகிதத்துக்கும் கு-றைவானவர்களுக்கே இணைய அணுகல் உண்டு. சிறிய பாடசாலையைச் சேர்ந்த மா-ணவர்களில் எட்டு சதவிகிதமானவர்களுக்கு மாத்திரமே ஒன்லைன் கல்வியினை அணுகக் கூடியதாக உள்ளது. பெரிய மற்றும் வளங்கள் நிறைந்த பாடசாலைகளில் கூட, 59 சதவிகிதமான மாணவர்களுக்கே இணையத்திற்கான நேரடி அணுகல் உண்டு. 60 சதவிகிதமான மாணவர்கள், நாட்டில் முறையாகத் திட்டமிடப்படாத ஒன்லைன் கல்வி காரணமாகப் பாடசாலையினை விட்டு இடைவிலகுகின்றனர் என மதிப்பிட-ப்பட்டுள்ளது.[87]

நகர – கிராம ஏற்றத்தாழ்வுகள் கல்வியினை மாத்திரம் பாதிக்காது, அபிவிருத்தி உள்ளி-ட்ட சகல காரணிகளையும் பாதிக்கின்றது. கொழும்பு அமைந்துள்ள மேல் மாகாணம், மொத்தத் தேசிய உற்பத்தியில் 40 சதவிகிதத்திற்கும் மேல் உருவாக்குகின்றது. 2015 ஆம் ஆண்டின் தரவுகளுக்கு அமைவாக, மத்திய மாகாணமும் தென் மாகாணமும் மொத்தத் தேசிய உற்பத்தியில் 10 சதவிகிதத்திற்கும் மேல் தலா பங்களிப்பு வழங்கி-யுள்ளன. அதேவேளை, வட மாகாணம் (பெருவாரியாகத் தமிழர்கள் வாழும் பிரதே-சம்) மொத்தத் தேசிய உற்பத்தியில் 5.4 சதவிகிதத்தினைப் பங்களிப்பாக வழங்கியுள்ளது. சிங்களவர்களை விடத் தமிழர்களும் முஸ்லிம்களும் அதிகமாக வாழும் கிழக்கு மா-காணமும் மொத்தத் தேசிய உற்பத்தியில் வெறும் 6 சதவிகிதத்தினையே பங்களிப்பாக வழங்கியுள்ளது.[88] சனத்தொகைச் செறிவின் அடிப்படையில் நோக்குகையில், கிரா-மங்களாக இருக்கும் பெருவாரியாகச் சிறுபான்மையினர் வாழும் பிரதேசங்கள் குறைந்த வளங்களைக் கொண்டுள்ளதுடன் பாரிய சமூகச் சமத்துவமின்மைகளாலும் பாதிக்க-ப்படுகின்றன.

நாட்டின் எழுத்தறிவு வீதம் 92 சதவிகிதமாகக் காணப்படுவதற்கான காரணம் கல்வி இலவசமாக வழங்கப்படுவதாகும். ஆனால், மேலே குறிப்பிடப்பட்டவாறு, பிராந்திய-ங்களினூடு மாறுபடும் நியமங்களை இது பிரதிபலிக்கவில்லை. கொழும்பும் ஏனைய பெரிய நகரங்களும் மிகச் சிறந்த தனியார் மற்றும் அரசாங்கப் பாடசாலைகளைக் கொண்டுள்ளன. கடந்த நான்கு தசாப்தங்களாக வளர்ச்சி கண்டுள்ள சர்வதேசப் பா-டசாலைகள் மேல் தட்டு வருமான வகுப்புக்களுக்கு ஆங்கிலத்தில் கல்வி வழங்குகி-ன்றன. இவற்றின் பரவலானது பொருளாதாரப் பிளவினைக் கோடிட்டுக் காட்டியது. இந்த நிறுவனங்கள் அனைத்திலும், பெண் மற்றும் ஆண் மாணவர்கள் கல்விக்கான ஒரே அணுகலைக் கொண்டுள்ளனர். உண்மையில், இரண்டாம் நிலைக் கல்வியில் பெண்கள் சேர்வது ஆண்கள் சேரும் அதே தரத்தில் காணப்பட்டாலும்[89] மூன்றாம் நிலைக் கல்வியில் பெண்கள் சேர்வது ஆண்கள் சேர்வதை விட மிகைத்துக் காண-ப்படுகின்றது.[90]

உயர் எண்ணிக்கையில் பெண்கள் சேர்ந்த போதிலும், பால்நிலை ஏற்றத்தாழ்வுகள் காரணமாகப் பெண்கள் தொடர்ந்தும் தாழ்வான திறன்களைக் கொண்டுள்ளனர், இதன் காரணமாகக் குறைந்த ஊதியம் வழங்கப்படும் தொழில்களிலேயே சேர்கி-ன்றனர். நாடு இன்னும் பிரதானமாக ஆண் வழிச் சமூகமாகக் காணப்படுகின்ற காரா-ணத்தினால் (ஏனைய தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இது தொடர்பில் இலங்கை சிறந்த நிலையில் காணப்படுகின்றது), ஆண்களே குடும்பத்தின் தீர்மானம் வகுப்போராகக் காணப்படுகின்றனர். இந்த நியமங்கள் குடும்பம் சார்ந்த உறவுகளைக் கட்டமைத்து ஊழியத்தின் பால்நிலை ரீதியான பிரிவுக்கும் பெண் ஊழியர்களின் குறைந்த தரங்களுக்கும் பங்களிப்பு வழங்குகின்றன. இது சமூகச் சமத்துவமின்மை-களுக்குப் பங்களிப்பு வழங்குகின்றது.

இலங்கையின் சமயக் குழுக்கள் அவற்றின் சொந்தப் பாடசாலைகளை மேற்பார்வை செய்ய முடியும் என்பதுடன் இது பன்மைவாதத்திற்குப் பங்களித்துள்ள அதேவேளை, வெவ்வேறு சமயப் பின்புலங்களைச் சேர்ந்த மாணவர்களின் ஒன்றுகலப்பினை இது

தடுத்துள்ளது. அண்மைக் காலங்களில் மதரசாக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு (குறிப்பாக பதிவுசெய்யப்படாதவை) சமுதாய உணர்வுகளை எழுப்ப விரும்புவர்களினால் ஒரு பிரச்சினையாக ஆக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மட்டத்தில், அதிகமான மாணவர்கள் கலைப் பிரிவில் கற்க நேரிடுகின்றது. இந்த நிலைமை குறிப்பாகக் கிராமப் பிரதேச மாணவர்களுக்கே ஏற்படுகின்றது. அறிவியல் அடிப்படையிலான துறைகளில் பாடவிதானங்கள் மிகவும் கடினமானவையாக இருப்பதும் கிராமப் பிரதேசங்களில் அறிவியல் அடிப்படையிலான கல்வியினை ஊக்குவிப்பதற்கு வசதிகள் போதாதவையாக இருப்பதும் இதற்கான சில காரணங்களாகக் காணப்படுகின்றன. சந்தைப்படுத்தப்படக் கூடிய திறன்கள் அற்ற இந்தப் பட்டதாரி மாணவர்களே வகைமாதிரியாக அரசாங்கத் தொழில்களைக் கோருவோரில் முன்னணியில் இருப்பது இதனால் ஏற்பட்டுள்ள விளைவாகும். இலங்கையின் அரச துறை அளவுக்கு மீறிப் பெரிதாகக் காணப்படுவதற்கான ஒரு பிரதான காரணம் இதுவாகும். இலங்கையில் கொவிடினால் தூண்டப்பட்ட பொருளாதாரச் சவால்களும் அதனுடன் சேர்ந்துள்ள சொல்லுந்தரமற்ற ஆளுகையும் பெரும் எண்ணிக்கையிலான இளைஞர்கள் வெளிநாடுகளில் தொழில்வாய்ப்புக்களை முயன்று தேடுவதற்குக் காரணமாகியுள்ளது.பெருந்தொற்றுத் தொடர்பான பொதுமக்களின் அபிப்பிராயத்தினை மதிப்பிடுவதற்காகத் தொடங்கப்பட்ட இலங்கை ஒபினியன் டிரெக்கர் கணிப்பீட்டின் பெறுபேறுகளை ஜஎச்பி வெளியிட்ட போது இது தெளிவாகத் தெரியவந்தது. இலங்கையர்களில் 27 சதவிகிதமானவர்கள் புலம்பெயர விரும்புகின்றனர் என்பதை அது வெளிப்படுத்தியது.[91] இளைஞர்களும் கற்றவர்களுமே அதிகமாகப் புலம்பெயர விரும்புகின்றனர். கிட்டத்தட்ட, இருவரில் ஒருவர் தாம் நாட்டை விட்டு வெளியேற விரும்புவதாகக் கூறுகின்றனர். ஏற்படப் போகும் மூளைசாலிகளின் வெளியேற்றம் தொடர்பாக அரசாங்கம் கரிசணை கொண்டுள்ளதாகத் தெரியவில்லை; மாறாக, தற்போது மிகவும் தேவைப்படும் அந்நியச் செலாவணியினை உருவாக்குவதற்கான ஒரு தீர்வாக அரசாங்கம் இதனை நோக்குகின்றது. உண்மையில், அரசாங்க ஊழியர்களை அவர்களின் வேலையில் இருந்து விடுப்பு எடுத்துத் தொழிலுக்காக வெளிநாட்டுக்குச் செல்லுமாறு அரசாங்கமே ஊக்குவிக்கும் அளவுக்கு நாட்டின் பொருளாதார நிலைமை மிக மோசமானதாகக் காணப்படுகின்றது என்பதுடன்,[92] இவ்வாறு போவதற்காகக் கடவுச் சீட்டுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு அதனை வழங்குவதற்கே அரசாங்கம் திண்டாடிக் கொண்டிருக்கின்றது.[93]

## 14. கலாசார சமத்துவமின்மைகள்
## ஒட்டுமொத்த மதிப்பெண்: 7

### மதம் | **மதிப்பெண்: 7**

### இனம் | **மதிப்பெண்: 7**

இன ரீதியான கோணத்தில் நோக்குகையில், இலங்கை பெருவாரியாகச் சிங்களவர்களைக் கொண்டுள்ளது (75 சதவிகிதம்), மத ரீதியான கண்ணோட்டத்தில் நோக்குகையில், இலங்கை பெருவாரியாக பௌத்தர்களைக் கொண்டுள்ளது (70 சதவிகிதம்). இலங்கையின் அரசியலமைப்பு பௌத்தத்திற்கு “முதன்மை ஸ்தானத்தினை” வழங்குகின்றது, இதன் அர்த்தமாவது, ஏனைய மதச் சமுதாயத்தினைச் சேர்ந்தவர்கள் கீழ் மட்டத்திலேயே வைக்கப்டுகின்றனர். இலங்கை சிங்கதீபமாகும் (சிங்களவர்களின் தேசம்) மற்றும் தம்மதீபமாகும் (பௌத்த சித்தாந்தங்களின் உறைவிடமான நாடு) என இப்போது வேரூன்றியுள்ள எண்ணக்கருக்களில் இருந்தே இது கட்டமைக்கப்படுகின்றது.[94] இதன் விளைவாக உருவாகியுள்ள தேசியவாதச் சித்தாந்தம், சிங்கள பௌத்தர்களுக்கு இலங்கை மாத்திரமே உள்ள அதேவேளை, மதச் சிறுபான்மையினர்களினால் எங்கு சென்றும் வாழ முடியும் (இந்துக்களுக்கு இந்தியா மற்றும் முஸ்லிம்களுக்கு மத்திய கிழக்கு மற்றும் கத்தோலிக்கர்களுக்கு மேற்குலகம்),

**சகல பிரதான மதப் பண்டிகைகளும் தேசிய விடுமுறைகளாக உள்ளன என்பதுடன் மதக் கொண்டாட்டங்களில் பிரபலமான பௌத்த அரசியல் தலைவர்கள் முஸ்லிம்களுடனும் இந்துக்களுடனும் கிறிஸ்தவர்களுடனும் சேர்ந்து சிறப்பிக்கின்றனர்.**

எனக் கூறும் அதேவேளை, பௌத்தர்கள் அல்லாதவர்கள் இந்த நாட்டில் வாழ முடியும் என்றாலும் அவர்கள் சிங்கள பௌத்தர்களின் அதியுன்னதமான அந்தஸ்திற்குச் சவால் விடுக்கும் தேவையற்ற கோரிக்கைகளை முன்வைக்கக் கூடாது என்றும் கூறுகின்றது. இந்தச் சூழமைவில், இருக்க வேண்டியதை விட அதிகமாகவே இந்த நாடு கலாசாரச் சமத்துவமின்மைகளை அனுபவிக்கின்றது என்பது ஒன்றும் ஆச்சரியத்துக்கு உரியதல்ல.

ஒரு புறம், அனைத்துப் பிரிவுகளையும் சேர்ந்த இலங்கையர்கள் அவர்களின் கலசாரங்களைப் பகிரங்கமாகக் கொண்டாடுகின்றனர். சுருங்கக் கூறின், பௌத்தர்கள் அல்லாதவர்கள் அவர்களின் தனித்துவமான அடையாளங்களை இரகசியமாகக் கொண்டாடுவதில்லை. சகல பிரதான மதப் பண்டிகைகளும் தேசிய விடுமுறைகளாக உள்ளன என்பதுடன் மதக் கொண்டாட்டங்களில் பிரபலமான பௌத்த அரசியல் தலைவர்கள் முஸ்லிம்களுடனும் இந்துக்களுடனும் கிறிஸ்தவர்களுடனும் சேர்ந்து சிறப்பிக்கின்றனர். கண்டியச் சட்டம், தேசவழமை மற்றும் முஸ்லிம் சட்டம் போன்ற வெவ்வேறு சமுதாயங்களுக்கெனத் தனித்துவமான தனியார் சட்டங்கள் நாட்டின் பன்மைவாத உணர்விற்குத் துணை சேர்க்கின்றன. மக்களில் சுமார் 90 சதவிகிதத்தினர் தம்மால் தமது மதத்தினைச் சுதந்திரமாகப் பின்பற்ற முடிகின்றது என உணர்கின்றனர் என 2019 கணிப்பீடு கண்டறிந்தமைக்கான காரணம் வலிதானதாகும்.[95] ஜனாதிபதி கோதபாய ராஜபக்ஷவின் வெளியேற்றத்தினைக் கோரி நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களில் கண்கூடாகக் கண்ட பல் சமய தோழமைப் பண்பினால் இது வலுப்படுத்தப்பட்டுள்ளது.

தனிப்பட்ட நலனுக்காக அல்லது அரசியல் நலனுக்காகத் தேசியவாதச் சக்திகள் சமுதாய உணர்வுகளைத் தூண்டிவிடுவதற்கு அடிக்கடி நாடி வருகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். சிவில் யுத்தத்தின் போது, மிக அண்மைக் காலத்திலும் கூட, சில சிங்கள அடிப்படைவாதிகள் இந்துக் கோயில்களைத் தாக்கியுள்ளனர்.[96] சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் விடுதலைப் புலிகள் பௌத்தத் துறவிகளைக் கொன்று, நாட்டிலுள்ள புனித பௌத்தக் கோவில்களைத் தாக்கினாலும் கூட – சிவில் யுத்தம் நடந்த போதிலும், இது பிரதானமாக இன மோதலேயன்றி மத மோதலாக அமையவில்லை.[97] எல்டிடிஈயினர் கிழக்கு மாகாணத்தில் பள்ளிவாயல்களைத் தாக்கி முஸ்லிம் வழிபாட்டாளர்களைக் கொன்றுள்ளனர்.[98] அடிப்படைவாத பௌத்தத் துறவிகளும் 2000 ஆம் ஆண்டுகளின் ஆரம்பப் பகுதிகளில் கத்தோலிக்க தேவாலயங்களை[99] இலக்குவைத்ததுடன் தூதுத்துவப் பிரச்சாரகர்கள் குறிப்பாக நாட்டின் கிராமப் பிரதேசங்களில் நீண்ட காலமாகத் துன்புறுத்தப்பட்டு வருகின்றனர். மதம் என்பது மக்களின் அடையாளத்துடன் எவ்வாறு பிரிக்க முடியாது இணைந்துள்ளது என்கின்ற காரணத்தினால் இது கலாசாரச் சகிப்புத்தன்மையினைக் கீழறுத்துள்ளது.

சிவில் யுத்தத்தின் பின்னர், முஸ்லிம் சமுதாயமே கலாசாரம் தொடர்பான பாகுபாட்டின் தாக்கங்களுக்கு முகங்கொடுத்தது. புர்காவினையும் நிகாபினையும் அணியும் பெண்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு, ஆதிக்கமிக்க பௌத்த கலாசாரம் நிலைமாற்றப்படுகின்றது என்ற உணர்வுக்கு இட்டுச்சென்று தேசியவாதிகள் முஸ்லிம்களுக்கு எதிரான வெற்றுரைகளைப் பரப்புவதற்குக் காரணமாகியது.[100] தெற்காசியாவுக்கு அந்நியமானது எனக் கருதப்பட்ட இந்த ஆடை, சிவில் யுத்தம் முடியும் வரையில் ஒரு பிரச்சினையாகக் கருதப்படவில்லை. மேலும், முஸ்லிம்கள் நாட்டின் கலாசார மரபுரிமைகளுக்கு ஓர் அச்சுறுத்தல் எனக் கூறிச் சிங்கள பௌத்தத் தேசியவாதிகள் அணிதிரளத் தீர்மானித்தனர். சுருங்கக் கூறின், இனத் – தேசிய நோக்கங்களுக்காகக் குறிப்பாகப் பெண்களின் ஆடைகள் ஆயுதமாக்கப்பட்டன. முகம் முழுவதையும் மறைப்பதைத் தடை செய்யும் சட்டவாக்கத்தினை வரைவதற்கு அமைச்சரவையினை 2021 ஏப்ரில் மாதத்தில் இட்டுச்சென்ற ஒரு தூண்டியாக உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் அமைந்தன. மிகவும் பழமைவாத மற்றும் மரபு வழுவாத பெண்கள் நிற (கறுப்புக்கு மாற்றமாக) புர்காக்களை அணியவேண்டும் என்று முஸ்லிம் மேட்டுக் குடியினர்கள் விரும்பினர். ஆனால் இதுவரை, புர்கா அல்லது நிகாப் அணிவதை நாடிய அதிகமான முஸ்லிம் பெண்கள் கருப்பு நிறத்தினையே தெரிவு செய்தனர்.

சுருங்கக் கூறின், இலங்கையர்கள் அவர்களின் கலாசாரங்களைச் சார்பளவில் சுதந்திரமாகப் பின்பற்றலாம் என்ற போதிலும், அரசாங்கம் பல்வகைமையினை மிக ஆர்வத்துடன் மேம்படுத்துவது இதற்கான பிரதான காரணமில்லை, ஆனால் சிறுபான்மையினர் அவர்களின் கலாசார வைபவங்களை ஓர் அடிப்படை உரிமையாகக் கருதுவதே இதற்கான பிரதான காரணமாகும். இதே வேளை, பெரும்பான்மையினரின் உணர்வுகளைப் புண்படுத்தாமல் தமது பாரம்பரியங்களைக் கொண்டாட வேண்டும் என்பதைச் சிறுபான்மையினர் அறிந்துள்ளனர். இந்த எச்சரிக்கை உணர்வு நாட்டில் சகல கலாசாரங்களுக்குமான சமமான கௌரவம் இல்லாதிருப்பதையே சுட்டிக்காட்டுகின்றது.

## 15. நீதிக்கான அணுகல்
## ஒட்டுமொத்த மதிப்பெண்: 5

மதம் | **மதிப்பெண்: 5**

இனம் | **மதிப்பெண்: 5**

நீதிக்கான அணுகலே இலங்கையில் ஆளுகையின் மிகப் பலவீனமான பரப்பாகக் காணப்படுகின்றது. வழக்காடலுக்கு ஏற்படும் எக்கச்சக்கமான செலவுகள், வழக்குகள் தேங்கிக் கிடப்பதால் ஏற்படும் சட்டத் தாமதங்கள், அரசியல் தலையீடுகள் மற்றும் ஊழல் என அனைத்துமே இந்த விளைவுக்குப் பங்களிப்பு வழங்குகின்றன. இலங்கையின் நீதிமன்றங்கள் கீழ் மட்டங்களில் குறிப்பாகச் சமரசம் செய்யப்படுகின்றன. இதற்கான ஒரு காரணம், பதவியுயர்வினைப் பெற்றுக்கொள்வதற்கான அழுத்தமும் அவ்வாறான பதவியுயர்வுகள் கடந்த மூன்று தசாப்தங்களாக அரசியல்மயமாக்கப்பட்டுள்ளமையும் ஆகும்.[101] இது, சமமற்ற நீதிமன்ற முறைமைக்கு இட்டுச்சென்றுள்ளதுடன் நன்கு விளக்கிக் கூறப்படும் அபிப்பிராயங்கள் பொதுவாக உயர் மட்ட நீதிமன்றங்களால் வழங்கப்பட்டாலும், கீழ் மட்டங்களில் உள்ள சில நீதிபதிகள் அடிப்படை நியதிச்சட்டங்களைக் கிரகிப்பதற்கே கஷ்டப்படுகின்றனர்.

கருத்து வெளிப்பாட்டுக்கான சுதந்திரம், ஒன்று கூடுவதற்கான சுதந்திரம், சாதி, மதம், மற்றும் அரசியல் அபிப்பிராயம் என்பவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படுவதற்கு எதிரான தடை என்பவற்றினை உத்தரவாதப்படுத்தும் அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தினைக் கொண்டு நாட்டின் சட்டத் துறை பிரசைகளின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கின்றது. நன்கு ஸ்தாபிக்கப்பட்ட நீதி முறைமையினையும் இது உறுதிப்படுத்துகின்றது. மனித உரிமைகள் மீறல்களினால் பாதிக்கப்பட்டவர்கள் முறைமையின் முறைசார் இறுக்க நியதிகளுக்கு உட்படாது சிறிய செலவுடன் அல்லது செலவில்லாது நிவாரணத்தினைப் பெற்றுக்கொள்ள வழி செய்யும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு போன்ற நிறுவனங்களுக்கு மேலதிகமாகவே இது காணப்படுகின்றது.

சட்டத்தின் பிரயோகம், குறிப்பாக, நாட்டின் பல்வகைமைமிக்க இன – மதத் தன்மையின் காரணமாக, அதன் அரசியலமைப்பு நியதிச்சட்டங்களுடன் பெரிதும் ஒவ்வாதிருக்கின்றது. இதற்கான ஒரு காரணம், ஏனைய மதங்களை விலையாகக் கொடுத்து பௌத்தத்தின் சிறப்புரிமை வழங்கப்பட்ட அந்தஸ்தினைத் திடப்படுத்தி நீதிமன்றங்கள் கடந்த காலங்களில் எவ்வாறு நியதிச்சட்டங்களை வியாக்கியானப்படுத்தியுள்ளன என்பதாகும். உதாரணமாக, 2023 ஆம் ஆண்டில், அரசானது பௌத்தத்தினை மாத்திரம் பாதுகாக்க வேண்டும் என்றே அரசியலமைப்பின் படி எதிர்பார்க்கப்படுகின்றது என உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அதே வேளை, 2017 ஆம் ஆண்டில், ஒருவரின் மதத்தினைப் பரப்பும் உரிமையினை அரசியலமைப்புப் பாதுகாக்கவில்லை என அதே நீதிமன்றம் தீர்ப்பளித்தது.[102]

**பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படுபவர்களை, அவர்களுக்குப் பிணை வழங்காது கால வரையின்றித் தடுத்துவைப்பதற்கு அனுமதிக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டமானது சிறுபான்மையினரைப் பாதித்துள்ள மிகப் பயங்கரமான நியதிச்சட்டங்களுள் ஒன்றாகும்.**

நீதித்துறையின் உயர் மட்டங்களுக்குத் தமிழ் பேசும் சில நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.[103] குற்றவியல் நடவடிக்கைமுறையினை முன்னெடுக்கும் பொலிசில் தமிழ் பேசும் ஆளணியினர் இல்லாதிருக்கின்றனர். ஒரு குறிப்பிட்ட இடம் அதிகமான சிங்களவர்களைக் கொண்டிருக்கையில், சிங்களத்தில் எழுதப்பட்ட பொலிஸ் அறிக்கையில் அல்லது முறைப்பாட்டில் அல்லது குற்றப் பத்திரிகையில் தமிழ் பேசும் ஒருவர் கையொப்பமிடும் தேவைக்கான சாத்தியம் அதிகமாக உள்ளது. சட்டமா அதிபர் திணைக்களத்திலும் சில தமிழ் பேசும் அரச தரப்புச் சட்டத்தரணிகள் உள்ளனர். உயர் நீதித் துறையிலும் சொற்ப எண்ணிக்கையிலான பெண்கள் காணப்படுவதும்[104] நீதித்துறையுடன் தொடர்புடைய பால்நிலைப் பாகுபாட்டில் இது செல்வாக்குச் செலுத்தக் கூடிய விதமும் ஒரு குறைபாடாகவே உள்ளது.[105] ஒருவர் நீதிமன்ற முறைமையின் பதவி வரிசையில் மேலே செல்லச் செல்ல, அவசியமான பல்வகைமை குறைவடைகின்றது.

நீதியைத் தேடுவதுடன் தொடர்புடைய செலவும் தாமதங்களுமே, பன்மைவாதத்திற்கான உலகளாவிய மையத்தினால் நடத்தப்பட்ட பன்மைவாதப் புலனுணர்வுக் கணிப்பீட்டிற்கு பதிலளித்தவர்களில் கால்வாசியினர் மாத்திரமே, நீதியினை வழங்கும் மற்றும் சட்டத்தினை அமலாக்கும் அரச நிறுவனங்களின் வாய்மையில் தாம் நம்பிக்கை கொண்டுள்ளதாகத் தெரிவித்தமைக்கான காரணமாகும்.[106] மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் நடத்தப்பட்ட வேறான ஒரு கணிப்பீட்டில், இலங்கையர்களில் சுமார் 60 சதவிகிததத்தினர் நாட்டின் சட்டம் ஒழுங்கு தொடர்பான நிலைமை தொடர்பில் அதிருப்தி கொண்டுள்ளமை தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.[107] 2017 ஆம் ஆண்டு, தண்டனைச் சட்டக் கோவை மற்றும் குற்றவியல் நடவடிக்கைமுறைக் கோவைச் சட்டம் ஆகியவற்றினைத் திருத்துவதற்கான விசேட குழு அதன் அறிக்கையில், குற்றவியல் வழக்கொன்றினைப் பூர்த்தி செய்வதற்குச் சராசரியாக 10.2 வருடங்கள் எடுக்கின்றது எனவும் மேன்முறையீட்டுச் செயன்முறையினை நடத்துவதற்கு இன்னும் ஏழு வருடங்கள் எடுக்கின்றது எனவும் அறிக்கையிட்டிருந்தது.[108]

ஆட்சியிலுள்ள அரசாங்கத்திற்கு அமைவாக நீதித்துறையின் சுயாதீனமும் மாறுபடுகின்றது. தேவையற்ற அரசியல் செல்வாக்குகளில் இருந்து நீதித்துறையினதும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களினதும் சுயாதீனத்தினைப் பாதுகாத்து வலுப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவை, முறையே 2000 ஆம் ஆண்டினதும் 2015 ஆம் ஆண்டினதும் 17 ஆம் மற்றும் 19 ஆம் அரசியலமைப்புத் திருத்தங்களின் மூலம் அண்மையில் முயற்சிக்கப்பட்டன. எவ்வாறாயினும், உயர் நீதித்துறைக்கும் அரச நிர்வாகத்திற்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு போன்ற கண்காணிப்பு நிறுவனங்களுக்குக் கூட ஒரு தலைப்பட்சமாக நியமனங்களை மேற்கொள்வதற்கு 20 வது திருத்தம் (இதற்கு முன்னர் 18 ஆம் திருத்தம்) ஜனாதிபதியினை அனுமதிக்கின்றது. இதனுடன் சேர்த்து, நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியின் ஓர் இணைப்பாகவே சட்டமா அதிபர் திணைக்களம் இயங்குகின்றது (மக்களின் நலனுக்காகச் சுயாதீனமாக இயங்குவதற்கு மாறாக). விடயங்களை மோசமாக்குவதற்கு, சட்டமா அதிபர் திணைக்களத்தினைச் சேர்ந்த பலர், உயர் நீதிமன்றங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். இதனல், நீதிமன்றங்களின் உயர் அடுக்குகளில் நிறைவேற்று அதிகார மனப்பாங்கு நிலவுவதற்கு இது பங்களிப்புச் செய்கின்றது.[109] 20 வது திருத்தத்தினைத் தொடர்ந்து நிறைவேற்றப்பட்ட பல தீர்மானங்கள் குறிப்பாக நீதித்துறையின் சுயாதீனத்தில் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையினை அகற்றியுள்ளன. அரசாங்கத்தினைச் சேர்ந்த பல உறுப்பினர்களின் இலஞ்சம் மற்றும் ஊழலுடன் தொடர்புடைய வழக்குகளில் இருந்து அவர்களை விடுவித்தமையே இதற்கான காரணமாகும். குற்றவியல் நடவடிக்கைகளை இழைத்ததாகக் குற்றஞ்சாட்டப்படும் பாதுகாப்பு ஆளணியினரின் வழக்குகளும் இவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகளில் காணப்படுகின்றன.[110]

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படுபவர்களை, அவர்களுக்குப் பிணை வழங்காது கால வரையின்றித் தடுத்துவைப்பதற்கு அனுமதிக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டமானது சிறுபான்மையினரைப் பாதித்துள்ள மிகப் பயங்கரமான நியதிச்சட்டங்களுள் ஒன்றாகும். தமிழ்ப் பிரிவினைவாதத்திற்கு எதிராகவே பயங்கரவாதத் தடைச் சட்டம் முதலில் நிறைவேற்றப்பட்டது. ஆனால், அன்றில்

இருந்து, அற்ப சந்தேகங்களின் அடிப்படையில் 300 இற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் (2019 உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்து).[111] சந்தேகத்துக்குரிய எல்டிடிஈ உறுப்பினர்கள் குற்றச்சாட்டுக்கள் எவையுமின்றி அல்லது நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படாது 10 முதல் 20 வருடங்கள் வரையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையினை நிகழ்த்தியமைக்காகப் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைதுசெய்யப்பட்ட சிங்களவர்களுக்கு, அவர்களைப் பிணையில் விடுவிப்பதை அனுமதிக்கும் நியதிச்சட்டங்களைப் பயன்படுத்தியே குற்றஞ் சாட்டப்பட்டுள்ளமையும், நீதிபதி பிணை வழங்குவதைத் தடுக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தினைப் பயன்படுத்தி சிறுபான்மையினருக்கு எதிராகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமையும் கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.[112]

சிறுபான்மைச் சமுதாயங்களை இலக்குவைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டு வரும் மற்றொரு சட்டம் ICCPR ஆகும். குறிப்பாக, வெறுப்புப் பேச்சுத் தொடர்பான விடயங்களைக் கையாளும் சட்டம், அரசியல் ரீதியாக அரசாங்கத்தினை எதிர்ப்பவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்காக அவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இங்கேயும் இனச் சிறுபான்மையினரும் மதச் சிறுபான்மையினரும் விகிதாசாரமற்ற முறையில் இலக்குவைக்கப்படும் எத்தனிப்பே காணப்படுகின்றது. பெரும்பான்மைச் சமுதாயத்தினுள் உள்ளவர்களினால் நிகழ்த்தப்படும் மிகத் தீங்கான வெறுப்புப் பேச்சினை அரசாங்கமே அலட்சியம் செய்யும் நிலையும் காணப்படுகின்றது[113]

பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை நீக்குமாறு சர்வதேச சமுதாயம் அரசாங்கத்தினைக் கோரியிருப்பது சரியானதேயாகும். எவ்வாறாயினும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் சில அம்சங்களை, அவை மீண்டும் மீண்டும் தணிக்கை செய்யப்படுவதையும் தாண்டி, சட்டப் புத்தகங்களில் வைத்திருப்பதற்கே அரசாங்கம் விரும்புகின்றது. அர்த்தபூர்வமான இன நல்லிணக்கமும் வகைப்பொறுப்பும் இல்லாமை இதனுடன் சேர்வதே, தமிழ் மக்கள், மற்றும் சர்வதேசச் சமுதாயத்தினுள் உள்ள பலர், நாட்டின் ஆயுதப் படைகளினால் இழைக்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்படும் யுத்தக் குற்றங்களை விசாரிப்பதற்குச் சர்வதேச நீதிபதிகளைக் கொண்ட ஒரு குழாம் அமைக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுப்பதற்கான காரணமாக அமைந்துள்ளது. இலங்கையின் நீதித்துறை முறைமையின் சுயாதீனத்தில் நம்பிக்கை இல்லாமையினை, நீண்ட காலமாக விடுக்கப்படும் கோரிக்கை தாமே கோடிட்டுக் காட்டுகின்றது. உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்து, பயங்கரவாதத் தடைச் சட்டத்தினைப் பயன்படுத்தி முஸ்லிம்களும் பழிவாங்கப்பட்டனர். இதில், குண்டுதாரிகளுடன் எதுவுமறியாது தொடர்புற்றிருந்த முஸ்லிம் பெண்களும் அடங்குகின்றனர்.[114]

# V. குழுக்களுக்கு இடையிலான உறவுகளும் உடைமையுரிமைகளும்

# 16. குழுக்களுக்கிடையிலான வன்முறை

## ஒட்டுமொத்த மதிப்பெண்: 5

மதம் | **மதிப்பெண்: 5**

இனம் | **மதிப்பெண்: 5**

**முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை அவர்களின் சொத்துக்களை இலக்கு வைப்பதற்காக வடிவமைக்கப்பட்டது போலவே தென்பட்டது. ஏனெனில், சகல சந்தர்ப்பங்களிலும், சில முஸ்லிம்களே கொல்லப்பட்டனர். ஆனால், வீடுகளுக்கும் வியாபாரங்களுக்கும் பள்ளிவாயல்களுக்கும் வாகனங்களுக்கும் அதிகமான சேதங்கள் ஏற்படுத்தப்பட்டன.**

இலங்கையில் சுதந்திரத்தின் பின்னரான முதல் எட்டு வருடங்களும் சார்பளவில் அமைதி நிறைந்ததாகக் காணப்பட்டது. அதன் பின்னர், 1956 ஆம் ஆண்டில் இடம்பெற்ற தமிழ் மக்களுக்கு எதிரான கலவரத்துடன் ஆரம்பித்து, கலவரங்கள் முதல் இன அழிப்பு மற்றும் கிளர்ச்சி வரை நாடு பரவலான வன்முறைகளைக் கண்டுள்ளது. கிளர்ச்சியானது பிரதானமாகச் சிங்களவர்களை அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன் மக்கள் விடுதலை முன்னணி (ஜேவிபி) ஆட்சியில் இருந்த அரசாங்கத்தினைக் கவிழ்த்து ஆட்சியினைப் பிடிப்பதற்காக முயற்சித்தமையால் 1971 ஆம் ஆண்டிலும் பின்னர் 1988 இற்கும் 1990 இற்கும் இடையிலும் இது இடம்பெற்றது. இதில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் காணப்பட்டாலும் மதிப்பீடுகள் மாறுபடுகின்றன. ஏனைய வன்முறைகள் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான இன வன்முறையாகக் காணப்பட்டதுடன் ஈற்றில் இது மூன்று தசாப்த கால சிவில் யுத்தத்தில் முடிவுற்றது (1983 – 2009). முஸ்லிம்களுக்கு எதிரான கலகங்களும் கிறிஸ்தவர்களுக்கு எதிராக அடிக்கடி மேற்கொள்ளப்பட்ட அச்சுறுத்தல்களும் இதில் அடங்குகின்றன. இலங்கையில் உள்ள ஒவ்வொரு சமுதாயமும் ஏதோ ஒரு வகையில் கடந்த 60 வருடங்களாக வன்முறை மிக்க அச்சுறுத்தல்களுக்கும் நிகழ்வுகளுக்கும் முகங்கொடுக்க நேர்ந்திருக்கின்றது.

சிங்களத்தினை மாத்திரம் அரச கரும மொழியாக ஆக்குவதற்கான அரசாங்கத்தின் முயற்சியினைத் தமிழர்கள் அமைதியான முறையில் எதிர்த்தமையினால் 1956 ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிரான முதல் கலவரம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து மொழி தொடர்பான அதிகமான கலவரங்கள் இரண்டு குழுமங்களுக்கும் இடையில் 1958 ஆம் ஆண்டு நடைபெற்றன. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்த பின்னர் 1977 ஆம் ஆண்டு மீண்டும் தமிழர்களுக்கு எதிரான வன்முறை வெடித்தது. வட மாகாணத்தில் பிரிவினைவாதத்தினை நாடிய தமிழ் இளைஞர்கள் வெவ்வேறு குழுக்களாக அணி திரண்டமைக்கான எதிர்வினையும் இதற்கான ஒரு காரணமாகும்.[115] தமிழ் மக்களுக்கு எதிராக 1983 ஆம் ஆண்டு நடைபெற்ற வன்முறை உண்மையான ஓர் இன அழிப்பாகும். தமிழர்களின் வியாபார ஸ்தானங்களையும் வீடுகளையும் இலக்குவைத்த கலகக்காரர்களுக்கு பொலிசும் இராணுவமும் ஊக்குவிப்பு வழங்க, வன்முறையினை நிறுத்துவதற்கு அரசாங்கம் பல நாட்களாக எதுவும் செய்யவில்லை. இதனால் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் நாட்டை விட்டு வெளியேறினர். மேலும் பலர் தனி நாட்டுக்காகப் போராடும் பல்வேறு போராளிக் குழுக்களுடன் இணைந்துகொண்டனர். அனைத்துச் சமுதாயங்களையும் பாதித்த 1983 ஆம் ஆண்டு வன்முறையின் விளைவுகளுடனேயே இலங்கை தொடர்ந்தும் வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

இது நாடு முழுவதும் உள்ள முஸ்லிம்களை உள்ளடக்குகின்றது, குறிப்பாக வடக்கு கிழக்கு முஸ்லிம்களை உள்ளடக்குகின்றது. வட மாகாணத்தில் உள்ள அனைத்து முஸ்லிம்களையும் விடுதலைப் புலிகள் 1990 ஆம் ஆண்டு பலவந்தமாக வெளியேற்றினர். இதனால் அதிகமானவர்கள் சடுதியாக அகதிகளாக மாறினர். தனிநாடு உருவாக்குவதற்கான எல்டிடியின் வேட்கைக்கு முஸ்லிம்கள் எதிராக இருந்தமையினால் போராளிக் குழுக்கள் கிழக்கு மாகாண முஸ்லிம்களையும் தாக்கினர்.[116]

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்தமையினைத் தொடர்ந்து, பௌத்த தேசியவாதக் குழுக்கள் முஸ்லிம்களை இலக்கு வைத்தன. இதன் காரணமாக 2014 ஆம் ஆண்டு தர்ஹா நகரத்தில் கலகம் இடம்பெற்றதுடன் மேலதிக கலவரங்கள் 2018 ஆம் ஆண்டும் 2019 ஆம் ஆண்டும் இடம்பெற்றன. முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை அவர்களின்

சொத்துக்களை இலக்கு வைப்பதற்காக வடிவமைக்கப்பட்டது போலவே தென்பட்டது. ஏனெனில், சகல சந்தர்ப்பங்களிலும், சில முஸ்லிம்களே கொல்லப்பட்டனர். ஆனால், வீடுகளுக்கும் வியாபாரங்களுக்கும் பள்ளிவாயல்களுக்கும் வாகனங்களுக்கும் அதிகமான சேதங்கள் ஏற்படுத்தப்பட்டன. இவ்வாறான வன்முறை தொடர்பாகச் சொற்பமானவர்களே கைது செய்யப்பட்டனர். அத்துடன், இஸ்லாம் பற்றிய அச்சத்தினைத் தூண்டி, கலகத்தினை நியாயப்படுத்திய முன்னணி பௌத்த துறவிகள் எவரும் குழுமங்களுக்கு இடையிலான வன்முறையினைத் தூண்டியமைக்காகக் குற்றஞ்சாட்டப்படவில்லை.

2019 உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் ஹோட்டல்களை இலக்குவைத்தாலும் இறந்தவர்களில் அதிகமானவர்கள் தாக்குதல்கள் நடத்தப்பட்ட மூன்று கோவில்களிலும் அச்சந்தர்ப்பத்தில் இருந்தவர்களாவர். ஜனாதிபதி வேட்பாளராக கோதபாய ராஜபக்ஷவை முன்னணிக்குக் கொண்டு வரக் குண்டுத் தாக்குதலின் அழிவினைப் பயன்படுத்துவதை இயலுமாக்குவதில் ராஜபக்ஷ குடும்பத்துடன் தொடர்புடைய சில புலனாய்வுப் பணியாளர்கள் ஒரு வகிபாத்திரத்தினை வகித்தனர் என்ற ஊகத்திற்குக் குண்டுத் தாக்குதல் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகள் இட்டுச்சென்றன.[117]

இலங்கையில் இனக் குழுமங்களுக்கு இடையில் நடந்த வன்முறைகளைத் தூண்டுவதற்குப் பிரதானமாக இன – மதத் தேசியவாதமும் தம் தொழில் வாழ்வினை முன்னேற்றுவதற்காக இன – மதப் பிளவுகளைச் சந்தர்ப்பவாதத்துடன் பயன்படுத்த நாடிய அரசியல் தொழில்முனைவோரும் காரணமாக இருந்தாலும், நேர்மையற்ற வியாபார நலன்களும் இவ்வாறான வன்முறையில் ஒரு வகிபாத்திரத்தினை வகித்துள்ளன. தமிழ் மக்களுக்கு எதிராக 1983 இல் நடைபெற்ற இனப் படுகொலையின் போது இதுவே நிச்சயமான காரணமாக அமைந்திருந்தது. 2012 ஆம் ஆண்டில் இருந்து முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெற்ற வன்முறைகளில் அதிகமானவற்றுக்கும் இதுவே காரணமாகத் தெரிகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில், தேசத்தினைப் பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு தமது நிகழ்ச்சிநிரலின் ஓரங்கமாக வெறுப்புப் பேச்சினைப் பரப்பும் ஒரு தேசியவாதக் குழுவிற்கு வியாபாரக் குழுக்கள் நிதியுதவியளிக்க, வன்முறையில் இருந்து அரசியல்வாதிகள் நன்மை பெறுகின்றனர். பௌத்த துறவிகள் தலைமைதாங்கும் தேசியவாதக் குழுவுக்கு பொது பல சேன ஓர் உதாரணமாகும். பொது பல சேனவுக்கு வியாபார நலன் கொண்டவர்கள் நிதியுதவியளிக்க அது அரசியல்வாதிகளின் உடந்தையுடன் இயங்குதாகவே தென்படுகின்றது. இனக் குழுமங்களுக்கு இடையிலான வன்முறையினைத் தூண்டியமைக்காக இதன் தலைவர்களில் எவருக்கு எதிராகவும் வழக்குத் தொடுக்கப்படவில்லை.

வன்முறை எப்போது நிகழ்த்தப்படாலும், அது குறிப்பாகச் சட்டக்காப்புடன் நிகழ்த்தப்படுகையில், மிகவும் விளிம்பு நிலையில் வாழும் மக்களே அதற்கான விலையினைச் செலுத்த வேண்டியிருக்கின்றது. இலங்கையிலும் இதே நிலைமையே காணப்படுகின்றது. வறிய சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பினை வழங்குவதற்கோ அல்லது வன்முறையினை முடிவுக்குக் கொண்டுவருவதற்குக் கலகக்காரர்களுக்கு இலஞ்சம் வழங்குவதற்கோ இயலுமாக இருக்கக் கூடியவர்களைத் தொடர்புகொள்வதற்கான ஆற்றல் அவர்களிடம் இல்லாதிருக்கின்றது. எனவே, வன்முறைக்குச் சமூக – பொருளாதாரப் பரிமாணமும் காணப்படுகின்றது. தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளில் மிக அதிகமானவற்றின் போது, கொழும்பிலுள்ள தமிழ் நகைக் கடைகளில் எவையுமே இலக்கு வைக்கப்படவில்லை என்பதால் இதிலுள்ள பொதுவான புரிதல் என்னவெனில், செல்வாக்குமிக்க அரசியல்வாதிகளுக்கும் பொலிசாருக்கும் இலஞ்சம் வழங்கப்பட்டதால் அவர்கள் கலகக்காரர்களுக்கு எதிாக இந்த நிறுவனங்களுக்குப் பாதுகாப்பு வழங்கினர் என்பதே அறிந்துகொள்ள வேண்டிய விடயமாகும்.

வன்முறை பெண்களைப் பல வழிகளில் பாதிக்கும் எத்தனிப்பினைக் கொண்டுள்ளது. பாலியல் துஷ்பிரயோகம் தொடர்புறுகையில் இது குறிப்பாக உண்மையாகின்றது. 1983 ஆம் ஆண்டு வன்முறையின் போது சில பாலியல் வல்லுறவுகள் இடம்பெற்றாலும் பாதிக்கப்பட்ட எவருமே அவர்களின் அனுபவம் பற்றிக் கலந்துரையாடவில்லை. சிவில் யுத்தம் எண்ணற்ற பெண்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கு

**பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பாகத் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர-வியல் திணைக்களத்தினால் அண்மையில் நடத்த-ப்பட்ட தேசிய கணிப்பீட்டின் படி, ஐந்து பெண்களில் ஒருவர், அவரின் நெருங்கிய துணையினால் அவரின் வாழ்க்கைக் காலத்தில் உடல் சார்ந்த மற்றும் / அல்லது பாலியல் சார்ந்த வன்முறைக்கு முகங்கொடுத்து-ள்ளார் என்பது தெரியவந்துள்ளது.**

இட்டுச்சென்றுள்ளதாகக் கூறப்படுகின்றது என்றாலும் மிகச் சிலரே இதற்கு எதிராகக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர். எவ்வாறாயினும், இலங்கையினுள்ளும், குறிப்பாக வெளிநாடுகளிலும் உள – சமூக ஆற்றுப்படுத்தலில் ஈடுபட்டுள்ளவர்கள் பரவலான பாலியல் வன்முறை பற்றிக் குறிப்பிட்டுள்ளனர் (பொதுவாக ஆண்களுக்கு எதிரானவையும்).[118] உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்து விசாரணைக்காகக் கைதுசெய்யப்பட்ட முஸ்லிம் பெண்களும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்பட்டமை பற்றிய முறைப்பாடுகள் உள்ளன. இருப்பினும், இவ்வாறான சம்பவங்களினால் பாதிக்கப்பட்டதுடன் இணைந்துள்ள வெட்க உணர்வு, இவற்றினைத் தனிநபர்கள் முன்வந்து வெளிப்படுத்துவதில் இருந்தும் அவர்களைத் தடுத்துள்ளது.[119]

இலங்கையில் சக வாழ்வினை மேம்படுத்தும் எண்ணற்ற சமயங்களுக்கிடையிலான குழுக்கள் உள்ளன. குழுமங்களுக்கு இடையிலான பதற்றங்கள் வன்முறையாக வெடிப்பதைத் தடுப்பதில் இவை சீரிய சேவையாற்றி வருகின்றன. எவ்வாறாயினும், இவற்றின் வெற்றியானது சட்டத்தின் ஆட்சியினை மதிக்கும் அரச அதிகார அமைப்புக்களிலேயே தங்கியுள்ளது. பொதுவாக, பௌத்த துறவிகளோ அல்லது பிரபல அரசியல்வாதிகளோ சம்பந்தப்படுகையில் இந்த நிலை காணப்படுவதில்லை. இந்த நிலைமை மறுதலையாக்கப்படும் வரையில் நாட்டில் ஆங்காங்கே குழுமங்களுக்கு இடையிலான வன்முறை தொடர்ந்து நிகழவே செய்யும்.

பொதுவாகப் பால்நிலை வன்முறையினைத் தீர்ப்பதிலும் பெண்களும் சிறுமிகளும் கௌரவமும் மரியாதையுமிக்க வாழ்வினை வாழ்கின்றனர் என்பதை உறுதிப்படுத்துவதிலும் பல சவால்கள் தொடர்ந்து காணப்படுகின்றன. பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பாகத் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட தேசிய கணிப்பீட்டின் படி, ஐந்து பெண்களில் ஒருவர், அவரின் நெருங்கிய துணையினால் அவரின் வாழ்க்கைக் காலத்தில் உடல் சார்ந்த மற்றும் / அல்லது பாலியல் சார்ந்த வன்முறைக்கு முகங்கொடுத்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

இவ்வாறான துணைகளுடன் வாழும் போது, பெண்களின் ஈடுகொடுக்கும் உபாயமார்க்கங்களைப் பகுப்பாய்வு செய்கையில், பாலியல் வன்முறையினை அனுபவித்த சுமார் அரைவாசிப் பேர் (49.3 சதவிகிதமானவர்கள்), வெட்கம், சங்கடம், தம்மீது குறை கூறப்படல் அல்லது தம்மை நம்பாமலிருத்தல், மற்றும் / அல்லது வன்முறை சாதாரணமானது என நம்புதல் அல்லது உதவி தேடுமளவுக்கு அது பாரதூரமானதல்ல என நினைத்தல் போன்ற காரணங்களினால் எந்த இடத்தில் இருந்தும் முறைசார்ந்த உதவியினைக் கோரவில்லை என்பதை ஆய்வு கண்டறிந்துள்ளது. கணிப்பீட்டுக்காக நேர்காணப்பட்ட அனைத்துப் பெண்களிலும் கிட்டத்தட்ட அரைவாசிப் பேர் (47.5 சதவிகிதம்), “ஆண் தான் பொஸ் என்பதைக் காட்டவேண்டும்” என்பதை ஏற்றுக்கொண்டனர் எனக் கூறப்படுகின்றது. மேலும், சுமார் அரைவாசியினர், “ஒரு நல்ல மனைவி, கணவனுடன் உடன்படாவிட்டாலும் அவனுக்குக் கீழ்ப்படிவாள்” என்ற கூற்றினை ஏற்றுக்கொண்டனர். “பெண் விரும்பாவிட்டாலும் அவள் கணவனுடன் உறவு கொள்வதற்கான கடப்பாட்டினைக் கொண்டுள்ளாள்” என்ற கூற்றினை ஐந்து பெண்களில் இருவர் ஏற்றுக்கொண்டனர். இலங்கையின் கடைசித் தொகை மதிப்பீட்டின் படி, நாட்டில் நீண்ட கால உறவில் உள்ள பெண்களில் மற்றும் / அல்லது திருமண உறவில் உள்ள பெண்களில் 40 சதவிகிதமானவர்கள் வீட்டு வன்முறைக்கு முகங்கொடுத்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.[120] பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறை வெவ்வேறு இன – மதச் சமுதாயங்களின் மத்தியில் மிகப் பெரிதாக மாறுபடுகின்றது என ஊகிப்பதற்கான எக்காரணமும் இல்லை.

## 17. குழுக்களுக்கு இடையிலான நம்பிக்கை

## ஒட்டுமொத்த மதிப்பெண்: 5

மதம் | **மதிப்பெண்: 5**

இனம் | **மதிப்பெண்: 5**

சட்டக்காப்புடன் செயற்படும் (செயற்படக்கூடியதான) அரச அதிகாரிகளுடன் சேர்ந்து-கொண்டுள்ள, எண்ணற்ற இன – மதக் கலவரங்களையும் கிளர்ச்சிகளையும் அனுபவித்த ஒரு நாடு, குழுக்களுக்கு இடையில் உயர் மட்டங்களிலான நம்பிக்கையினை அனுபவிக்கலாம் என எதிர்பார்க்கலாகாது. இலங்கை அடியெடுத்துவைத்துள்ள இனவியல், இலங்கைப் பிரசாவுரிமையினை விடச் சிங்கள பௌத்த இன அந்தஸ்து மிகவும் சிறப்புரிமையுடையதாக இருக்கும் நிலைக்கு இட்டுச்சென்றுள்ளது. சமூக – அரசியல் நிலைமைகளில் பேரினவாதம் எவ்வாறு ஆதிக்கம் செலுத்த வந்துள்ளது என்பதில் இருந்து இதனைத் தெளிவாகக் காண முடியும். இப்பேரினவாதம் தாமே ஒரு புனைவு – வரலாற்றினைப் பயன்படுத்தி நியாயப்படுத்தப்பட்டுள்ளது (அதாவது, புத்தரின் போதனைகளுக்கெனத் தனித்துவமாகத் தேர்ந்தொதுக்கப்பட்ட சரணாலயமே இலங்கை மற்றும் புத்தரின் மரபுகளைப் பாதுகாப்பதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட மக்களே சிங்களவர்கள்). இது இப்போது அதிகமான சிங்கள பௌத்தர்களால் புனிதமானதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.[121] இனத் – தேசியவாதம் அடையாளங்களை கெட்டிப்படுத்துகின்றது. இது, விளைவாக, குழுக்களுக்கு இடையிலான இடையீட்டினையும் நம்பிக்கையினையும் குறைக்கும் அதேவேளை, குழுக்களுக்கு வெளியேயான இடையீட்டினையும் நம்பிக்கையினையும் ஊக்குவிக்கின்றது. குழுக்களுக்கு இடையிலான இடையீடின்மை இன்னும் நடைபெறுகின்ற அதேவேளை, பெருவாரியாகச் சிங்கள பௌத்த அரசுக்கும் தமிழ்ப் போராளிகளுக்கும் இடையிலான சிவில் யுத்தமும் சகல சமுதாயங்களின் மத்தியிலும் மிகப் பரவலாகக் காணப்படும் இஸ்லாம் பற்றிய அச்சமும் நாட்டில் வெவ்வேறு குழுமங்களுக்கு இடையில் நம்பிக்கையினை நீர்த்துப் போகச் செய்துள்ளன.

உதாரணமாக, குழுமங்களுக்கு இடையிலான திருமணங்கள் இன்னும் நடந்து வருகையில், குறிப்பாக உயர் வருமானம் மற்றும் மிகவும் கல்வி கற்ற வகுப்பினர்களின் மத்தியில், முன்பை விட இது குறைவாகவே காணப்படுகின்றது. ஒரு முஸ்லிமைத் திருமணம் செய்கையில் முஸ்லிமல்லாதவர்களை இஸ்லாத்திற்கு மதமாறுமாறு நிர்ப்பந்திப்பதற்காகக் குறிப்பாக முஸ்லிம்கள் நிந்திக்கப்படுகின்றனர். இவ்வாறு மதம் மாறுமாறு கோருவது ஏனைய சமுதாயங்களின் மத்தியில் தீவிரம் குறைந்ததாகக் காணப்படுகின்றது. முஸ்லிம்களின் இந்த விருப்புக்குக் காரணம் சமய அடிப்படையிலான அனுமதிகளாக இருக்கலாம் என்றாலும், முஸ்லிம்களின் உயர் சனத்தொகை அதிகரிப்புப் பற்றியும் மிகவும் சிக்கனமும் சமரசமுமற்ற வஹாபி இஸ்லாத்தின் பரவல் பற்றியும் கரிசணை கொண்டுள்ள சிங்கள பௌத்தத் தேசியவாதிகளுக்கு இச்சமுதாயத்தினை இது அரிதாகவே விருப்புக்குரியதாக்குகின்றது. நாட்டிலுள்ள ஏனைய குழுமங்களுடன் ஒப்பிடுகையில், குழுமங்களுக்கு இடையிலான திருமணங்கள் தொடர்பில் முஸ்லிம் சமுதாயம் குறைவான நம்பிக்கையும் வெளிப்படை குறைந்த மனப்பாங்கும் கொண்டுள்ளது என பன்மைவாத மையத்தின் புலனுணர்வுக் கணிப்பீடு சுட்டிக்காட்டுகின்றது.[122]

ஏனைய தெற்காசிய நாடுகளின் அளவுக்கு இல்லை என்றாலும் இலங்கை ஓரளவுக்குத் தொடர்ந்தும் ஆணாதிக்கச் சமூகமாகவே உள்ளது. ஒருவரின் சமுதாயத்திற்கு வெளியே திருமணம் செய்வது தொடர்பாகக் காணப்படும் கட்டுப்பாடுகள் தவிர்க்க முடியாத விதத்தில் பெண்களின் மீதே தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன என்பதே இதன் அர்த்தமாகும்.

**சுருங்கக் கூறின், சிங்கள பௌத்தத் தேசியவாதத்திற்கு அடிப்படையாக இருக்கும் கோட்பாடு முன்னரை விட மிகவும் குறுகிய மனப்பாங்கு மிக்கதாக மாறியுள்ளது.**

இலங்கையின் தனியார் துறை சகல இனத்துவங்களையும் சேர்ந்த நிறைவேற்று அதிகாரிகளைக் கொண்டுள்ளது. இவர்கள் சகல இனத்துவங்களையும் சேர்ந்த தொழிலாளர்களை மேற்பார்வை செய்கின்றனர். சிறு வியாபாரங்களைப் பொறுத்த அளவில் இந்த நிலைமை இல்லை. சிறு வியாபாரங்கள் உறவினர்களையும் உரிமையாளர்களுக்குத் தெரிந்தவர்களையுமே தொழிலுக்கு அமர்த்துகின்றது. அரச துறையில் நிலைமை வித்தியாசமானதாகக் காணப்படுகின்றது. இதற்கான ஒரு காரணம், அரசாங்க ஊழியர்களில் 94 சதவிகிதத்தினர் (இது ஒரு மதிப்பீடுதான்) பெரும்பான்மைச் சமுதாயத்தினைச் சேர்ந்தவர்களாக உள்ளனர்.[123] சிறுபான்மை மேலதிகாரிகளின் கீழ் வேலை செய்ய வேண்டியிருப்பதையிட்டு அரச துறையைச் சேர்ந்த சிங்களவர்கள் ஆக்ரோஷப்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. அரசாங்க அதிகாரிகளுடன் இடையீடு மேற்கொள்கையில், தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் அவர்களுக்குச் சிங்கள மொழியினைப் பூரணமாகக் கிரகிக்க முடியாதிருந்த போதிலும் கூட, சிங்களத்தில் படிவங்களை நிரப்ப வேண்டியிருப்பதையிட்டும் அல்லது சிங்களத்தில் பேச வேண்டியிருப்பதையிட்டும் பொதுவாக முறைப்பாடு செய்கின்றனர். இது குறிப்பாகச் சமூக – பொருளாதாரப் படிநிலையில் கீழ் மட்டத்தில் உள்ளவர்களையே பாதிக்கின்றது. ஏனெனில், நன்கு கல்வி கற்ற தமிழ் மொழி பேசுபவர்கள் அனேகமாக ஆங்கிலத்தில் செயற்படும் ஆற்றலுக்கான சாத்தியத்தினைக் கொண்டுள்ளனர். சிங்கள அரசாங்க அதிகாரிகளால் தாம் அவமானப்படுத்தப்படும் விதத்தில் நடத்தப்படுவதாகச் சிறுபான்மையினர்களும் பொதுவாக முறைப்பாடு செய்கின்றனர்.[124] கடந்த பல தசாப்பதங்களாக வேரூன்றிவிட்ட பேரினவாத இனமையக் கலாசாரத்தினால் பன்மைவாதத்திற்கு அவசியமான இனத்துவங்களுக்கு இடையிலான மரியாதையும் நம்பிக்கையும் கீழறுக்கப்படுகின்றமையே இதற்கான முழுக் காரணமுமாகும்.[125]

யுத்தத்தின் பின்னர், வடக்குக் கிழக்கில் பற்றாக்குறையான வளங்களைப் பயன்படுத்துவதற்கும், குறிப்பாகத் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு இடையில் பகையினை விதைப்பதற்கும் சந்தர்ப்பவாத சக்திகள் முயன்று வருகின்றன. இவ்வாறான பகைமையுணர்வுக்குச் சில இராணுவத்தினர் எவ்வாறு தூண்டுதலளித்து வருகின்றனர் என்ற காரணத்தினால், நாட்டின் இரு பெரும் சிறுபான்மையினருக்கும் இடையில் அவநம்பிக்கையினையும் மோதலையும் ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் பார்வைக்குத் தெரிவதை விட நன்கு திட்டமிடப்பட்டவையாக இருக்கலாம்.[126] சூழ்ச்சித்திறத்துடன் பயன்படுத்தப்படுபவர்கள் பொதுவாகச் சமூக – பொருளாதாரப் பிரிவின் கடை நிலையைச் சேர்ந்தவர்களாக இருப்பதால், உருவாக்கப்பட்டுள்ள இந்த வேறுபாட்டுக்கு வகுப்புவாதக் கூறு ஒன்று உள்ளது.

உலகில் சிங்கள மொழி பேசப்படும் ஒரே இடம் இலங்கை மாத்திரமே என்ற எண்ணக்கருவிலும் பாளி மொழியில் (பௌத்த வேத வாக்கியங்களின் மொழி) இருந்தே சிங்களம் பெறப்பட்டது என்ற எண்ணக்கருவிலும் மிகவும் சக்திவாய்ந்த சித்தாந்தத்திற்குப் பங்களிப்பு வழங்கும் சிங்கதீப மற்றும் தம்மதீப ஆகிய எண்ணக்கருக்களிலுமே சிங்கள பௌத்த உலகநோக்கு வேர்கொண்டுள்ளது. சகல மதச் சிறுபான்மையினர்களும் அவர்களின் மத வம்சாவளியினை இலங்கைக்கு வெளியே கொண்டுள்ளனர் – இந்துக்களுக்கு இந்தியா, கத்தோலிக்கர்களுக்கு ரோம் (தனித்துவமாக), ஏனைய சமயப் பிரிவினைச் சேர்ந்த கிறிஸ்தவர்களுக்கு மத்திய கிழக்கும் மேற்குலகும் முஸ்லிம்களுக்கு மக்கா,மதீனா மற்றும் ஜெருசலேம் என்ற சிந்தனையுட்ன இது சேர்கின்றது. சுருங்கக் கூறின், சிங்கள பௌத்தத் தேசியவாதத்திற்கு அடிப்படையாக இருக்கும் கோட்பாடு முன்னரை விட மிகவும் குறுகிய மனப்பாங்கு மிக்கதாக மாறியுள்ளது. பன்மைவாதத்தினை விலையாகக் கொடுத்தே இது நடந்துள்ளது. நாட்டில் பெரும்பான்மையானவர்களாகச் சிங்களவர்கள் இருந்த போதிலும் பிராந்தியத்தில் அவர்களைச் சுற்றிச் சூழ்ந்துள்ள தமிழ் மக்களின் சனத்தொகையினால் அவர்கள் அச்சுறுத்தப்படுவதாக உணர்கின்றனர். சிங்களவர்களின் இந்தச் “சிறுபான்மைச் சிக்கல்” அரசியல் அதிகாரத்திற்கான அவர்களின் தேவைக்குப் பங்களிப்பு வழங்குவதற்காகக் கோட்பாடாக ஆக்கப்பட்டுள்ளது.[127]

எவ்வாறாயினும், நாடு அதன் செழுமையான கலாசாரப் பல்வகைமையில் இருந்து கட்டமைத்துச் செல்வதால் மாத்திரமே அதன் ஆற்றலை அடைந்து கொள்ள முடியும்

என நம்புகின்ற குழுக்கள் இலங்கையில் இல்லை என்று கூறுவதாக இது அமையாது. எனவே, ஒன்று சேர்ந்து பணியாற்றுவதற்கான மன்றுகள் வழங்கப்படுகையில், சகல சமுதாயங்களதும் உறுப்பினர்கள் அவ்வாறு செயற்படுவதற்கான ஆர்வத்தினை வெளிப்படுத்துகின்றனர்.[128] மாவட்ட மட்டத்திலும் உப மாவட்ட மட்டத்திலும் சமுதாயங்களுக்கு இடையிலான குழுக்களை உருவாக்குவதன் மூலம் சமுதாயங்களுக்கு இடையில் உறவுகளைப் போஷிப்பதற்குச் சிவில் சமூக அமைப்புக்கள் முயன்று வருகின்றன. சகல சமுதாயங்களையும் சேர்ந்த உறுப்பினர்கள் இவ்வாறான முயற்சிகளில் பங்குபற்றியுள்ளனர், குறிப்பாக கொவிட் பெருந்தொற்றின் போது இவ்வாறு பங்குபற்றியிருக்கின்றனர். கொவிட் பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனிதநேய உதவிகளை வழங்குவதற்காகச் சமுதாயங்களுக்கு இடையிலான குழுக்கள் அணிதிரண்ட விதம் பிளவுபட்டுள்ள கடந்த காலத்தினைக் கடந்து பகிரப்பட்ட ஓர் எதிர்காலத்தினை நோக்கி நகர்வதற்கான நிறைவேறாத ஆற்றலைச் சுட்டிக்காட்டுவதாக அமைந்திருந்தது.

## 18. அரசாங்க நிறுவனங்களில் கொண்டுள்ள நம்பிக்கை

## ஒட்டுமொத்த மதிப்பெண்: 5

மதம் | **மதிப்பெண்: 5**

இனம் | **மதிப்பெண்: 5**

**எவ்வாறாயினும், ஊழல், ஆற்றலின்மை, மற்றும் இனவாதிக்கவியல் ஆகியன இலங்கையின் அரச நிறுவனங்களின் தொழில்முறையான மற்றும் வினைத்திறன்மிக்க தன்மையினை நீர்த்துப் போகச் செய்துள்ளன.**

மக்களுக்குச் சகல வசதிகளும் வழங்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தும் ஒருவனே சிறந்த மன்னன் என்ற எண்ணக்கருவிலேயே நாட்டின் காலனித்துவத்திற்கு முற்பட்ட வரலாறு ஓரளவுக்கு வேர்கொண்டிருந்தது. சுதந்திரத்திற்குப் பிற்பட்ட யுகத்தில் உருவாக்கப்பட்ட சமூக நலனோம்புகை நிகழ்ச்சித்திட்டங்கள் மன்னனுக்கு பதிலாக அரசினைப் பதிலீடு செய்து இந்த எண்ணக்கருவினை நீட்சியடையச் செய்தன. இந்த நிகழ்ச்சித்திட்டங்களுள் இலவச சுகாதாரம், உலர் உணவுகள் (1970களின் பிற்பகுதி வரையில்), பெற்றோல், சமையல் எரிவாயு மற்றும் உரம் வரையான மானிய விலையில் வழங்கப்பட்ட பண்டங்கள் ஆகியன உள்ளடங்கியிருந்தன. அத்தியாவசியப் பண்டங்களை உறுதிப்படுத்துவதற்கான அரசின் இயலாமைக்கு எதிராக நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் தாங்கள் ஆட்சியில் இருந்தால் கட்டாயம் இவற்றையெல்லாம் செய்வோம் என எதிர்க் கட்சிகள் வழங்கும் வாக்குறுதிகள் ஆகியன, அரசின் செயலாற்றுகை எந்த அளவுக்கு பொதுமக்களின் நலனோம்புகையுடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

எவ்வாறாயினும், ஊழல், ஆற்றலின்மை, மற்றும் இனவாதிக்கவியல் ஆகியன இலங்கையின் அரச நிறுவனங்களின் தொழில்முறையான மற்றும் வினைத்திறன்மிக்க தன்மையினை நீர்த்துப் போகச் செய்துள்ளன. பேரினவாத வேட்கை சில அரசாங்கங்கள் சிவில் சேவையினைப் பலவீனப்படுத்தி பதிலாக அரசாங்க அமைச்சர்களை வலுப்படுத்துவதற்கு அழுத்தம் வழங்கியுள்ளது.[129] இதன் பின்னர், நாட்டின் அரசியல்வாதிகளின் சுருங்கிவரும் தரமும் ஆற்றல்களும் அரசாங்க நிறுவனங்கள் அரசியல்மயமாக்கப்பட்டு சமரசம் செய்யப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்தின. அமைச்சுக்களுக்குப் பொறுப்பாக இருந்த அரசியல்வாதிகள் தமது தொகுதி வாக்காளர்களுக்கும் கட்சி உறுப்பினர்களுக்கும் மாத்திரம் பரிவு காட்டாது அவர்கள் சதா விரிவடையும் சட்டக்காப்புக் கலாசாரத்துடனும் இயங்க ஆரம்பித்தனர். ஊழல் காரணமாகப் பொலிசாரும் கிராம மட்ட அதிகாரிகளும் அவநம்பிக்கையுடன் நோக்கப்பட்டனர். மேலும், நீர், மின்சாரம், மற்றும் காணிப் பதிவு போன்ற பாரிய அளவிலான பொதுமக்கள் சேவைகளை வழங்கும் அரசாங்கத் திணைக்களங்களும் மந்த கதியிலானவையாகவும் வினைத்திறனற்றவையாகவும் புலனுணரப்பட்டன. நீதியை வழங்குவதில்

**நாட்டின் அரச நிறுவனங்களில் இதனால் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி சகலரையும் பாதித்துள்ளதுடன் குறிப்பாக நாட்டின் சிறுபான்மையினரைப் பாதித்துள்ளது.**

நீதித்துறையின் தாமதம் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. இதனாலேயே, மையத்தின் பண்மைவாதப் புலனுணர்வுக் கணிப்பீட்டில், குறிப்பாகச் சட்ட அமலாக்கம் மற்றும் நீதியில் மக்களின் நம்பிக்கை குறைவாக உள்ளதாகக் காட்டப்படுகின்றது.[130]

எவ்வாறாயினும், பொதுமக்கள் அரசாங்க நிறுவனங்களில் தொழில் பெற்றுக்கொள்வதற்கு முண்டியடிக்கின்றனர். அரச துறைத் தொழிலுடன் இணைந்துள்ள அந்தஸ்து மற்றும் பாதுகாப்பு ஆகியன இதற்கு ஒரு காரணமாகும். சார்பளவில் குறைந்த வருமானங்களாக இருந்தாலும் (ஆயுதப் படையினைச் சாராதவர்களுக்கு), அரசாங்கச் சேவை ஓய்வூதியத்தினை உறுதிப்படுத்துகின்றது. இது ஒருவர் ஓய்வு பெற்ற பின்னர் அவருக்குப் பாதுகாப்பு உணர்வினை வழங்குகின்றது. அரச சேவையிலும் ஏனைய தொழில்களிலும் உள்ள சிலருக்கு, அரச துறைத் தொழில் ஒருவர் ஊழல் மற்றும் கையூட்டுக்களில் இருந்து நன்மை பெறுவதை அனுமதிக்கின்றது.[131] அரச துறையில் தொழில்வாய்ப்புப் பெறுவதற்கு மக்கள் முண்டியடிப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

சுயாதீனமாகவும் பற்றார்வம் இல்லாமலும் இயங்கக்கூடிய உயர் மட்ட அரச அதிகாரிகளைத் தெரிவுசெய்வதற்காக 17 வத திருத்தம் பொறிமுறைகளை அறிமுகப்படுத்தியது. ஆனால், 18 வது திருத்தம் இந்த முயற்சிகளைக் கீழறுத்தது. 19 வது திருத்தம் அடிப்படையில் 17 வது திருத்தத்தினை மீண்டும் கொண்டு வந்தது என்றாலும் அது 20 வது திருத்தத்தின் மூலம் புறந்தள்ளப்பட்டது. ஜனாதிபதி முறைமையின் கீழ், பாராளுமன்றத்தின் அதிகாரங்களை அகற்றியே நிறைவேற்று அதிகாரக் கிளை அதிகாரத்திற்கு உரிமை கற்பிக்க நாடியது, குறிப்பாக 20 வது திருத்தத்திலும் இதே நிலைமையே காணப்பட்டது.[132]

நெருங்கியோருக்குப் பரிவுகாட்டுவதாலும் சட்டத்தின் ஆட்சி மட்டு மதிப்பின்றிக் கீழறுக்கப்படுவதாலும் விளைவாகச் சட்டக்காப்புச் சூழல் குறிப்பாகச் சமூகத்தின் மிகவும் வலுவற்றவர்கைளப் பாதிக்கின்றது. இதில், வறியவர்கள், பெண்கள் மற்றும் சிறுபான்மையினர் உள்ளடங்குகின்றனர். அரச துறையினுள் குறைவான தொழில்முறைச் சூழ்நிலைகளில் எதேச்சையாக இடம்பெறும் பாலினவாதம் சகல மட்டங்களிலும் உள்ள பெண்களைப் பாதித்தால், வடகிழக்கில் இடம்பெறும் இராணுவமயமாக்கமும் குறிப்பாகத் தமிழ்ப் பெண்கள் பலவந்தப்படுத்தப்படும் சூறையாடும் பாலியல் உறவும் அரச நிறுவனங்களை மேலும் பாழ்படுத்துகின்றன.

அரச நிறுவனங்களில் பெரிதாகப் புலப்படுமளவுக்கு சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் இல்லாதிருக்கின்றது, குறிப்பாகப் பொலிசிலும் இராணுவத்திலும் இல்லாதிருக்கின்றது. இதனால், பெரும்பான்மைச் சமுதாயத்தினைச் சேர்ந்த அதிகாரிகளால் சிறுபான்மையினர்கள் மோசமாக நடத்தப்படுகின்றனர். மேலும், அதிகமான அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் பெரும்பான்மைச் சமுதாயத்தினைச் சேர்ந்தவர்களாக இருப்பதால், அரசாங்க அணுகலையும் அரச வளங்களையும் இயலுமாக்கும் அனுசரணை வலையமைப்புக்கள் அதிகமான சந்தர்ப்பங்களில் சக இனத்தவர்களாக இருக்கின்ற அவர்களின் தொகுதி மக்களுக்கே நன்மை பயக்கின்றன. பொதுவாக அவமானப்படுத்தும் வகையிலும் மனப் பாதிப்பினை ஏற்படுத்தும் வகையிலும் சிறுபான்மையினரினன் விருப்பங்கள் அலட்சியப்படுத்தப்படுகின்றன. உதாரணமாக, 26 பேர் உயர் அரச பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர் என அண்மையில் பகிரங்க அறிவித்தல் (ஒக்டோபர் 2021) விடுக்கப்பட்ட போது, அதில் ஒரு தமிழரோ அல்லது முஸ்லிமோ கூட இடம்பெற்றிருக்கவில்லை. கொவிட் – 19 இனால் இறந்தவர்கள் எனக் கருதப்படுபவர்களை அடக்கம் செய்வதற்கு எதிரான அரசாங்கத்தின் தடைக்குச் சவால் விடுத்துப் பல முஸ்லிம் அமைப்புக்கள் அடிப்படை உரிமைகள் மனுவிற்கு உயர் நீதிமன்றம் அந்த மனு தொடர்ந்து விளங்கப்படுவதற்கான அவர்களின் உரிமையினை மறுத்து பதிற்செயற்பாடாற்றியமையில் இருந்து சிறுபான்மையினரின் உணர்வுகள் அலட்சியப்படுத்தப்படும் விதத்தினைச் சான்றாகக் காண முடியும். மேலும், கோதபாய ராஜபக்ஷ, 20220 மே மாதத்தில் 23 அமைச்சரவைச் செயலாளர்கள நியமித்த போது, அவர்கள் அனைவருமே சிங்களவர்களாக இருந்தனர்.[133]

பேரினவாதத்திற்கான வேட்கை இலங்கையின் ஜனநாயகத்தினைச் சமரசம் செய்துள்ளமையே இதன் விளைவாகும். நாட்டின் அரச நிறுவனங்களில் இதனால் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி சகலரையும் பாதித்துள்ளதுடன் குறிப்பாக நாட்டின் சிறுபான்மையினரைப் பாதித்துள்ளது. தெளிவாக, நாட்டின் ஜனநாயகப் பிற்போக்கு, பன்மைவாதத்தின் வீழ்ச்சியுடன் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளது.

## 19. உள்ளடக்கும்தன்மை மற்றும் ஏற்றுக்கொள்ளல்

## ஒட்டுமொத்த மதிப்பெண்: 5.5

மதம் | **மதிப்பெண்: 6**

இனம் | **மதிப்பெண்: 5**

**ஒரு சமூகத்தில் வேர் பிடிக்கும் கூற்றுரையே அந்த சமூகத்தில் குழுக்களுக்கு இடையில் உறவுகள் எவ்வாறு நிலவுகின்றன என்பதைக் கட்டமைக்கின்றது. துரதிர்ஷ்டவசமாக, இலங்கையினைப் பொறுத்த அளவில், பல்வேறு இனத் தொழில்முனைவோர், இன மற்றும் சமயப் பதற்றங்களைத் தூண்டி விட்டுள்ளனர்.**

இலங்கையின் அரசியலமைப்பினை அடிப்படையாகக் கொண்டு ஒருவர் நோக்குகையில், பௌத்தத்திற்கு அதியுன்னத இடம் வழங்கப்பட்டுள்ளமையினைத தாண்டி, நாடு இன – மதப் பல்வகைமையினைப் பிரதிநிதித்துவம் செய்வதைக் காண முடியும். எல்லாவற்றுக்கும் மேல், யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சேர்ந்த தமிழ் மக்கள் அவர்களின் திருமணம், சொத்து, மற்றும் வாரிசுரிமை ஆகியவற்றினை ஒழுங்குறுத்தும் தேசவழமைச் சட்டத்தினைப் பயன்படுத்த முடியும். இதே போன்று, கண்டிய இராச்சியத்துடன் தொடர்புடையவர்கள் அவர்களுக்கேயுரித்தான சம்பிரதாயச் சட்டத்தினைக் கொண்டுள்ளனர். இஸ்லாத்தினைப் பின்பற்றும் முஸ்லிம்களுக்கென முஸ்லிம் சட்டங்கள் உள்ளன. முஸ்லிம் தனியார் சட்டத்தினைப் பாதிக்கக்கூடிய ஒரு பொதுச் சட்டத்தினை உருவாக்குவதற்குத் தற்போது முயற்சிகள் நடைபெற்றாலும் இலங்கையின் சமயச் சிறுபான்மையினர் அவர்கள் நீண்ட காலமாக இயங்கியதைப் போன்று சார்பளவில் சுதந்திரத்துடனே இதுவரை இயங்கி வருகின்றனர். எனவே, இலங்கையர்களில் சுமார் 75 சதவிகிதத்தினர் (2019 கணிப்பீடு) தாம் ஏனைய சமுதாயத்தினருடன் அமைதியான முறையில் வாழ்வதாகவே குறிப்பிட்டுள்ளனர்.[134]

இந்துக் கடவுள்களும் இந்து நடைமுறைகளும் பௌத்தத்தினுள் புகுந்துள்ளன. இந்தச் சமரசப் பண்பு இரண்டு மதங்களும் இசைவுடையதாயிருப்பதை இயலுமாக்குகின்றது. கண்டிய ராச்சியத்துடன் தொடர்புடைய கடைசி மன்னர்கள் தென்னிந்தியாவில் இருந்து வந்த தமிழர்களாவர் என்பதுடன் இதற்கு முன்னர் சிங்கள மன்னர்கள் தென்னிந்தியாவில் இருந்து மனைவியர்களைத் தேடினர். ஏனைய சமயக் குழுக்கள் பௌத்த விசுவாசத்தினைக் கீழறுக்காதிருக்கும் வரையில் பௌத்தர்கள் ஏனைய சமயக் குழுக்களை வெறுக்கவில்லை என்பதையே இது காட்டுகின்றது. காலனித்துவக் காலத்தின் போது ஒல்லாந்தர்கள் கத்தோலிக்கர்களுக்கு அட்டூழியம் செய்தபோது கண்டிய மன்னர்கள் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கினர். அதே போன்று முஸ்லிம்களுக்கும் காலனித்துவ அட்டூழியங்களைத் தவிரப்பதற்கு அவர்கள் உதவினர். அத்துடன், பல்வேறு சமயக் குழுக்களைக் கவர்ந்திழுக்கும் பல பொதுவான வணக்கத் தலங்கள் உள்ளன. இவை, பல் சமயச் சூழ்நிலை இலங்கையர்களைச் சங்கடப்படுத்தவில்லை என்பதற்குச் சான்றாக இருக்கின்றன. ஒரு சமூகத்தில் வேர் பிடிக்கும் கூற்றுரையே அந்த சமூகத்தில் குழுக்களுக்கு இடையில் உறவுகள் எவ்வாறு நிலவுகின்றன என்பதைக் கட்டமைக்கின்றது. துரதிர்ஷ்டவசமாக, இலங்கையினைப் பொறுத்த அளவில், பல்வேறு இனத் தொழில்முனைவோர், இன மற்றும் சமயப் பதற்றங்களைத் தூண்டி விட்டுள்ளனர்.

எனவே, பன்மைவாதமே நாட்டின் வாழ்வனுபவமாகும். இன மற்றும் மத அடையாளங்களைத் தேர்தல் நலன்களுக்காக அரசியல்மயமாக்கியமையானது, இனங்களுக்கிடையிலான மற்றும் சமயங்களுக்கிடையிலான உறவில் நஞ்சூட்டியுள்ளது. இருந்த

போதிலும், ஒருவர் மற்றவருடன் நல்லுறவுடன் இடையீடு மேற்கொள்ளும் வெவ்வேறு இன – மதப் பின்புலங்களைச் சேர்ந்த தனிநபர்கள், சமூக – அரசியல் பிரச்சினைகள் தலையிடுகையில், அவர்களின் குழும அடையாளத்தினைத் தழுவி அதற்குச் சிறப்புரிமை அளிக்கின்றனர். இடைக்கிடை நடைபெறும் இன – மதக் கலகங்கள் மற்றும் சிவில் யுத்தம் ஆகியன பன்மைவாதத்தினைப் பலவீனப்படுத்தும் வகையில் குழும அடையாளங்கள் கெட்டிப்படுவதற்குப் பங்களிப்பு வழங்கியுள்ளன. உண்மையில், நாட்டின் அரசியலமைப்பில் பௌத்தத்திற்கு அதியுன்னத ஸ்தானத்திற்கான ஏற்பாடு வழங்கப்பட்டிருப்பது சிறந்தது என அதிகமான சிங்களவர்கள் (71.8 சதவிகிதத்தினர்) உணர்கின்றனர். இதே வேளை, 77.2 சதவிகிதமான பெருந்தோட்டத் தமிழர்களும் 76.3 சதவிகித முஸ்லிம்களும் எந்த மதத்திற்கும் விசேட இடம் வழங்கப்படக் கூடாது என நம்புகின்றனர்.[135]

ஒரு பேரினவாத பண்பாண்மையினுள்ளேயே இலங்கை இயங்குகின்றது. அரசாங்கக் கொள்கைகளில் பௌத்தம் எவ்வாறு ஆதிக்கம் செலுத்துகின்றது மற்றும் சிறுபான்மையினரின் நியாயமான துயரங்கள் எவ்வாறு புறக்கணிக்கப்படுகின்றன என்பவற்றின் அடிப்படையில் நோக்குகையில் இலங்கையினை ஒரு இனவாதிக்கம் என அழைக்கும் தகுதியுண்டு. பதிலாக, சூழ்நிலைக்கு ஏற்ப, அதிகமான சிறுபான்மையினர் ஏற்றுக்கொள்ளப்படும் / உள்ளடக்கப்படும் உணர்வுக்கும் நிராகரிக்கப்படும் / விலக்கிவைக்கப்படும் உணர்வுக்கும் இடையில் ஊசலாடுகின்றனர். சிவில் சமூக அமைப்புக்களுடன், பழைய மாணவர் சங்கத்துடன், அல்லது பல் பாவசங்கீர்த்தன வணக்கத் தலத்துடன் சேர்ந்து செயற்படுகையில் தன்னை வேறு ஒரு குழுவினைச் சேர்ந்த ஒருவருடன் ஒன்றான ஒருவராக உணரும் தனிநபர் ஒருவர், சிங்களத்தில் மாத்திரம் இயங்கும் பணித்துறையாட்சியாளர் ஒருவருடன் ஊடாடுகையில் புறக்கணிக்கப்பட்டவராக உணரலாம். தனிநபர் ஒருவர் அதிகமாக விளிம்பு நிலைக்குத் தள்ளப்படுகையில், வித்தியாசமாக நடத்தப்படுகின்ற காரணத்தினால் தனக்கு எதிராகப் பக்கச்சார்பு காட்டப்படுவதாக அவர் உணர்வதற்கான வாய்ப்பு உண்டு.

இலங்கை ஒரு சிங்கள பௌத்தப் பேரினவாத அரசாக இருக்கின்ற அதேவேளை, பிராந்தியப் பெரும்பான்மையினைக் கொண்டுள்ள சிறுபான்மைச் சமுதாயமும் ஒரு பேரினவாத மனப்போக்கினைத் தழுவிக்கொள்கின்றது என்பதே உண்மையாக இருக்கின்றது. தேசிய மட்டத்தில் சமூக – அரசியல் நிலைமையில் சிங்கள பௌத்தர்கள் ஆதிக்கம் செலுத்துவதற்கான எதிர்வினையாக இது இருக்கலாம். இருப்பினும், கொழும்புக்கு வெளியே காணப்படும் தனி ஒதுக்கமான அதிகார எல்லைகளின் இருப்பானது, காலனித்துவக் காலத்திற்கு முன்னரும் காலனித்துவக் காலத்தின் போதும் இருந்த உண்மையாகும். நாட்டில் அன்னியோன்னியமாக வாழும் பல் இன மற்றும் பல் மதக் குழுமங்களைப் பிரிப்பதற்கு பல்வேறு காரணங்கள் குறுக்கிடலாம் என்பதையே ஒருவரால் கூற முடியும்.

## 20. சமூகத்தின் பகிரப்பட்ட உரித்தாண்மை ஒட்டுமொத்த மதிப்பெண்: 5

### மதம் | **மதிப்பெண்: 5**

### இனம் | **மதிப்பெண்: 5**

நாட்டினுள் தம்மால் சமமான பிரசைகளாகக் கூடிக் கலந்து வாழ முடியும் எனத் தமிழர்க்ள உணர்ந்திருந்தால், கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்கள் நடந்த சிவில் யுத்தம் நடைபெற்றிருக்காது. சிவில் யுத்தத்தினைத் தொடர்ந்து, முஸ்லிம்களை இலக்குவைப்பதற்கு அரசாங்கம் தேசியவாத சக்திகளை அனுமதித்தது. பெரும்பான்மைச் சமுதாயத்தின் தாட்சணியத்தின் காரணமாகவே நாட்டில் சிறுபான்மையினர்கள் வாழ்கின்றனர் என்கின்ற எண்ணக்கருவிலேயே சிங்கள பௌத்த தேசியவாதம்

நிலைகொண்டுள்ளது. இவ்வாறான ஒரு சமுதாயச் சூழலில், சிறுபான்மையினர் தம்மைச் சமூகத்தின் சமமான பாகமாக உணரவேண்டும் என நாம் எதிர்பார்க்க முடியாது. இதன் விளைவு, இனத்துவம் பிரசாவுரிமையினை மிகைக்கும் நிலையினை இலங்கை அடைந்துள்ளது. குறைந்தபட்சம், அரசுடன் இடையீடு மேற்கொள்கையில். இது இடத்திற்கிடம் மாறுபடலாம் என்றாலும் இதைத்தான் பேரினவாதமும் இனவாதிக்கமும் இயலுமாக்குகின்றன.

சிறுபான்மையினர் ஆதிக்கமிக்கவர்களாக வாழும் பிரதேசங்களில் அவர்களும் பேரினவாத மனப்போக்கினைத் தழுவிக் கொள்கின்றனர் என்பது இங்கு கவனிக்கத்தக்கதாகும். எனவே, வட மாகாணத்தில் வாழும் தமிழர்கள் (குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழ்பவர்கள்) அவர்களே அந்த இடத்திற்கான பாரிய உரித்தாண்மையினைக் கொண்டுள்ளனர் என்பது போல இயங்குகின்றனர். அதேவேளை, கொழும்பினுள்ளும் கிழக்கின் சில பகுதிகளிலும் முஸ்லிம்களும் இதேபோன்றே எதிர்வினையாற்றுகின்றனர். கிழக்கு மாகாணத்திலுள்ள நகரமான காத்தான்குடி, முற்றுமுழுவதும் முஸ்லிம்கள் வாழும் பிரதேசமாகும் என்பதுடன் தெற்காசியாவிலேயே செறிவான சனத்தொகை அடர்த்தி கொண்ட பிரதேசமாக இது கணிக்கப்பட்டுள்ளது. இங்கே பொதுவாக வெளியார் வரவேற்கப்படுவதில்லை.[136]

முஸ்லிம்களுக்கு எதிரான அண்மைக் காலக் கிளர்ச்சிகள் மற்றும் பிரச்சாரங்கள் நடைபெறுவதற்கு முன்னமே கூட, முஸ்லிமல்லாத பிரதேசங்களில் முஸ்லிம்களுக்குச் சொத்துக்களை விற்பதில் வெறுப்பு நிலவியிது. ஏனைய குழுக்களின் மத்தியில் வாழ்வதை விடத் தமது குழுக்களுக்கு மத்தியில் வாழ்வதற்கே முஸ்லிம்கள் பெரிதும் விரும்புவதுடன் இது பொருந்துகின்றது. கொழும்புக்கு வெளியேயுள்ள பிரதேசங்களில், பௌத்தத் துறவிகளும் பொலிசாரும் கிறிஸ்தவத் தூதுப் பணியாளர்களின் நடவடிக்கைகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கின்ற காரணத்தினால் அவர்களுக்கு வணக்க வழிபாடுகளுக்காக வீடுகளை அல்லது இடங்களை வாடகைக்குப் பெறும் ஆற்றல் மறுக்கப்பட்டுள்ளது.

இன – மத அடையாளங்களைக் கவரும் தரப்புக்கள் கூட்டு உரித்தாண்மை எனும் உணர்வு நலிவுறுவதற்கு உதவியுள்ளனர். சிங்கள பௌத்தத் தேவைகளுக்கும் கோரிக்கைகளுக்கும் சேவை வழங்கலே இலங்கை சுதந்திரக் கட்சி 1950களின் நடுப்பகுதியில் ஆட்சிக்கு வருவதற்கு உதவியது. அன்றிலிருந்து, ஏனைய பல கட்சிகள் (எஸ்எல்எப்பியின் ஆளுகையுடன்) பேரினவாதத்தினை ஆர்வத்துடன் தழுவிக்கொண்டன. உண்மையில், எவ்விதான சிறுபான்மை ஆதரவும் இன்றி ஒரு ஆதிக்கமிக்க அரசாங்கத்தினை உருவாக்கியதையிட்டு இலங்கை பொதுஜன பெரமுன பெருமைப்படுகின்றது.[137] தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளும் குறிப்பாக உள்ளூராட்சி, மாகாண மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களின் போது வாக்குகளை வெல்வதற்காக இன – மத நிலைப்பாடுகளைத் தழுவிக் கொண்டு அதன் மூலம் பகிரப்பட்ட உரித்தாண்மைக்கு உகந்த ஒரு சமூகத்தினை உருவாக்குவதற்கான ஆற்றலைக் கீழறுக்கின்றன.

ஒரே மதத்தினை அல்லது ஒரே இனத்தினைச் சேர்ந்த மாணவர்களுக்கு மாத்திரம் பிரதானமாகச் சேவையாற்றுவதன் மூலம் பாடசாலை முறைமையும் பிரச்சினையினை அதிகரித்துள்ளது. ஒரு புறம், சமய அமைப்புக்கள் அவற்றின் சொந்தக் கல்வி நிறுவனங்களை நடத்த அனுமதிப்பது பன்மைவாதத்தின் ஒரு முக்கிய அடையாளமாகும். ஆனால், மறு புறத்தில், இது சமூகம் வலுப்படுத்தும் வேறான இருப்பினை வலுப்படுத்தும் மூடப்பட்ட கல்விப் பயிற்றுவிப்புக்கு இட்டுச்செல்கின்றது. இந்த சமமற்ற பிரசைவுணர்வு வகுப்பு மற்றும் பால்நிலை வேறுபாடின்றி அனைவரையும் பாதிக்கின்றது. இதன் விளைவாக, மிக அதிகமான இலங்கையர்கள் இணைந்து கலக்காமல் சக வாழ்வு வாழ்கின்றனர். வேர் பதிந்துள்ள பேரினவாதத்தின் மத்தியில் இந்த நாட்டினால் ஏன் பன்மைவாதத்தின் மேற்பூச்சினைப் பேணக்கூடியதாக இருக்கின்றது என்பதற்கான பிரதான காரணம் இதுவேயாகும்.

# விதப்புரைகள்

1. ஒரு நாட்டின் பிரசைகளுக்கு முரண்படும் விருப்பங்கள் இருக்கலாம், ஆனால் இவ்வாறான பேதங்களை மத்தியஸ்தம் செய்து அதன் மூலம் எதிர்வுகூறத்தக்க மற்றும் அமைதியான உறவுகளை உறுதிப்படுத்துவதற்கே அரசுகள் இருக்கின்றன. சுருங்கக் கூறின், அரசும் அதன் நிறுவனங்களும் பிரசைகள் பன்மைவாதத்தினை அல்லது பேரினவாதத்தினைத் தழுவிக் கொள்வதை நோக்கி அவர்களைக் கட்டமைப்பதில் மிக முக்கியமான வகிபாத்திரத்தினை வகிக்க முடியும். இலங்கை அரசாங்கம் ஒரு புதிய அரசியலமைப்பினை அறிமுகப்படுத்த விரும்புகின்றது, "ஆவணமானது நாட்டின் பல்லின, பல்மொழி, பல்மத மற்றும் பல் கலாசாரத்தினைக் குறித்துரைப்பது முக்கியமானதாகும்". இதனை வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் தினேஷ் குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

2. ஜெனிவாவில் 2020 பெப்ரவரி 20 ஆம் திகதி யுஎன்எச்சிஆர் இன் 43 ஆவது அமர்வு நடைபெற்றது. சர்வதேச அதிதிகளைத் திருப்திப்படுத்த வாக்குறுதிகளை வழங்குவது, நாட்டின் அதி முக்கியமான ஆவணமான அரசியலமைப்பில் அவற்றினை வலியுறுத்துவதற்கு ஒப்பானதல்ல.

3. பிரசைகளுடன் இடையீடு மேற்கொள்ளும் சகல அரச நிறுவனங்களினுள்ளும் பன்மைவாதத்தினை மேம்படுத்தும் குறிப்பிட்ட சட்டங்களையும் கொள்கைகளையும் வரைவதன் மூலம் அரசு கடப்பாட்டினை வலுப்படுத்த வேண்டும்.

4. அரசாங்க ஊழியர்களுக்காக அரசாங்கம் பன்மைவாதம் தொடர்பாகக் கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்த வேண்டும் என்பதுடன் இந்த நிகழ்ச்சிநிரலை மேம்படுத்துவதற்காக அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் சர்வதேச சமுதாயத்துடனும் ஒத்துழைத்துச் செயற்பட வேண்டும்.

5. அரசாங்கம் அதன் கட்டுப்பாட்டினுள் வைத்திருக்கின்ற பாடசாலைப் பாடவிதானத்தினுள் பன்மைவாதத்தினை ஒருங்கிணைக்க வேண்டும் என்பதுடன் நாட்டின் பன்மைவாதத்தினை மதிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் சமய அமைப்புக்கள் உள்ளிட்ட அரச சார்பற்ற அமைப்புக்களை ஊக்குவிக்க வேண்டும்.

6. தேசிய கீதம் இரண்டு அரச கரும மொழிகளிலும் பாடப்படுவதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என்பதுடன் சகல அரச அதிகாரிகளும் இரண்டு தேசிய மொழிகளிலும் தேர்ச்சி பெற்றுள்ளனர் என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும். சமூகத்தின் சகல துறைகளிலும் பிரசைகளின் இரு மொழி ஆற்றல்களை முன்னேற்றுவதற்கு அரசு பணியாற்றுகின்ற காரணத்தினால் ஒரு குறிப்பிட்ட மட்டத்திற்கு அப்பால் பணித்துறை ஆட்சியாளர்களுக்கு இரு மொழி ஆற்றல் கட்டாயமாக்கப்பட வேண்டும்.

7. அரசாங்கத்தின் நிகழ்ச்சித்திட்டங்கள் மறுமலர்ச்சியினையும் பாதுகாப்பினையும் பன்மைவாதத்துடன் இணைக்க வேண்டும். மேலும், இலங்கையின் பிரச்சினைகளில் பலவும் பேரினவாதத்தினாலேயே உருவாகுகின்றன என்பதையும் சகல பிரசைகளும் சமமாக நடத்தப்படும் வரையில் நாட்டினை மேலும் முன்னேற்ற முடியாது என்பதையும் அது வலியுறுத்த வேண்டும்.

8. நாடு பெரும்பான்மைச் சமுதாயத்தினால் பிரதானமாக ஆளப்படும் நிலை காணப்படும் இனவாதிக்கம் தொடர்வதைத் தடுப்பதற்காக அரசாங்கம் மீண்டும் தகுதி அடிப்படையிலான நடைமுறைக்குச் செல்ல வேண்டும்.

9. சமுதாயங்களினூடு முனைப்பான ஈடுபாட்டினை மேம்படுத்துவதற்காக, அரசாங்கம் மாவட்ட நல்லிணக்கக் குழுக்களை (DRCs) மீண்டும் செயற்படுத்தி இன – மதப் பதற்றங்களைத் தணித்து முரண்பாட்டுத் தீர்வுகளை மேம்படுத்துவதற்காக உபமாவட்ட மட்ட நல்லிணக்கக் குழுக்களை நிறுவ வேண்டும். நல்லிணக்கக்

குழுக்கள் மாவட்டச் செயலாளர்களைத் (அல்லது பிரதேச) தலைவர்களாகக் கொண்டிருக்கும். மேலும், சமயக் குறவர்களையும் பொலிசாரையும் பாடசாலை ஆசிரியர்களையும் அரசாங்க ஊழியர்களையும் 2017 ஆம் ஆண்டு அமைச்சரவையினால் ஆணை வழங்கப்பட்டவாறாக ஓய்வுபெற்ற நீதிபதிகளையும் கொண்டிருக்கும்.

10. பன்மைவாதம் மற்றும் சம உரிமைகள் ஆணைக்குழு ஒன்றினை நிறுவுதல். அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஆணைக்குழு பணியாற்றும். பன்மைவாதம் மற்றும் சம உரிமைகள் ஆணைக்குழு சமூகத்தில் பன்மைவாதத்தினை மேம்படுத்தி அதன் சொந்த விசாரணைகளை நடத்துவதற்கும் அமுல்படுத்துவதற்காகப் பணிப்புரைகளை வழங்குவதற்கும் சட்டமா அதிபர் மூலம் நீதிமன்றங்களை அணுகுவதற்கும் தத்துவத்தினைக் கொண்டிருக்கும். உத்தேசிக்கப்பட்டுள்ள எந்தச் சட்டமும் எவ்வாறு நாட்டில் பன்மைவாதத்தினை மேம்படுத்தலாம் அல்லது குன்றச் செய்யலாம் என்பது பற்றிய அதன் அவதானிப்புக்களுடன் அந்த உத்தேசச் சட்டத்தினை உயர் நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்துவதற்கு ஆணைக்குழுவிற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்.

11. அரசாங்கம் அதன் சகல முயற்சிகளிலும் பன்மைவாதத்தினைத் தழுவிக் கொள்வதற்குச் சர்வதேச சமுதாயம் அதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் மேலும் அவ்வாறு செய்யத் தவறுகையில் அதனை வகைப்பொறுப்புக் கூறச் செய்ய வேண்டும்.

# குறிப்புக்கள்

1. Department of Census and Statistics Sri Lanka, “Census of Population and Housing 2012,” (Colombo: Department of Census and Statistics, 2012), http://www.statistics.gov.lk/Resource/en/Population/CPH_2011/CPH_2012_5Per_Rpt.pdf
2. CPA, *Values and Attitudes Survey on 70 Years of Independence in Sri Lanka*, பெப்ரவரி 4, 2019, 36, அணுகப்பட்டது ஆகஸ்ட் 23, 2022, https://www.cpalanka.org/values-and-attitudes-survey-on-70-years-of-independence-in-sri-lanka/
3. CPA, *Values and Attitudes Survey*, 36–7.
4. CPA, *Confidence in Democratic Governance Index (Wave 2): Report*, மே 23, 2022, 22.
5. John Clifford Holt, ed., *Buddhist Extremists and Muslim Minorities: Religious Conflict in Contemporary Sri Lanka* (ஒக்ஸ்போர்ட்: ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக அச்சகம், 2016).
6. Ministry of Foreign Affairs, “Overview,” n.d., https://mfa.gov.lk/overview/.
7. Neil DeVotta, “Sri Lanka’s Prevention of Terrorism Act: An Anti-Minority Cudgel,” ADRN Issue Briefing, ஜூன் 14, 2021, http://adrnresearch.org/publications/list.php?cid=1&sp=%26sp%5B%5D%3D1%26sp%5B%5D%3D2%26sp%5B%5D%3D3&pn=1&sn=s1&st&acode&code=001001&at=view&idx=166&ckattempt=1.
8. European Parliament, Motion for a Resolution on The Situation in Sri Lanka, in Particular the Arrests Under the Prevention of Terrorism Act, 2021/2748 (RSP), ஜூன் 8, 2021, https://www.europarl.europa.eu/doceo/document/B-9-2021-0361_EN.html.
9. *The Island Online*, “GL Urges UNHRC to Heed Situation in SL,” ஜூன் 14, 2022, https://island.lk/gl-urges-unhrc-to-heed-situation-in-sl/.
10. Freedom From Torture, “Sri Lanka’s Withdrawal From UN Human Rights Council Resolution: What It Means for Survivors,” பெப்ரவரி 26, 2020, https://www.freedomfromtorture.org/news/sri-lankas-withdrawal-from-un-human-rights-council-resolution-what-it-means-for-survivors#:~:text=The%20Sri%20Lankan%20government%20has,reconciliation%2C%20accountability%20and%20human%20rights.
11. Taylor Dibbert, “Sri Lanka: On Politics, Reform and International Engagement,” *Huffington Post*, மே 14, 2017, https://www.huffpost.com/entry/sri-lanka-on-politics-reform-and-international-engagement_b_591878fbe4b00ccaae9ea40e.
12. *Colombo Gazette*, “EU GSP+ Monitoring Mission Concludes Key Visit to Sri Lanka,” October 6, 2021, https://colombogazette.com/2021/10/06/eu-gsp-monitoring-mission-concludes-key-visit-to-sri-lanka/.
13. *Colombo Gazette*, “EU GSP+ Monitoring Mission.”
14. *The Island Online*, “GL Urges UNHRC to Heed Situation in SL.”
15. *The Morning*, “Sabry terms UNHRC resolution ‘divisive,’ செப்டெம்பர் 2022, https://www.themorning.lk/sabry-terms-unhrc-resolution-divisive/
16. A prominent instance of this pertained to Ramzy Razeek, who was charged using the ICCPR Act for a Facebook post. See, Amnesty International, “Drop Charges Against Sri Lankan Social Media Commentator,” என். டி, https://act.amnestyusa.org/page/79791/action/1?locale=en-US.
17. UNDP, “Sri Lanka: Gender Equality,” https://www.undp.org/srilanka/gender-equality#:~:text=Women%20constitute%2052%25%20of%20Sri,36.6%25%20of%20the%20total%20population.
18. K.O.G.H.M.A. L. Herath, “CEDAW Implementation in Sri Lanka,” March 7, 2019, https://www.slideshare.net/AyeshaHerath1/cedaw-implementation-in-sri-lanka.
19. Javid Yusuf, “MMDA Reform Process: A Step Without Transparency and in the Wrong Direction,” *Sunday Times*, ஒக்டோபர் 3, 2021, https://www.sundaytimes.lk/211003/columns/mmda-reform-process-a-step-without-transparency-and-in-the-wrong-direction-457028.html.
20. Safia Khan, “Sri Lanka Restricts the Human Rights of Muslims,” Human Rights Pulse, ஒக்டோபர் 2, 2021, https://www.humanrightspulse.com/mastercontentblog/sri-lanka-restricts-the-human-rights-of-muslims.
21. Khan, “Sri Lanka Restricts the Human Rights of Muslims.”
22. குறிப்பாக மஹிந்த ராஜபக்ஷ சனாதிபதியாக இருந்த போது தமிழர்களின் மத்தியில் இந்த முறைப்பாடு பொதுவானதாகக் காணப்பட்டது. தமிழர்கள் இரட்டைப் பிரசாவுரிமை வைத்திருப்பதை அனுமதிப்பதில் அரசாங்கம் காட்டிய தயக்கத்திற்கு ஒரு காரணம், எல்டிடிஈ மீண்டும் தலைதூக்கலாம் என்ற அச்சமாகும். அத்துடன், வடகிழக்கில் தமிழ் நிலங்களைப் பறிப்பதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்துடன் தொடர்புடையதாகவும் இது தென்படுகின்றது. இரட்டைப் பிரசாவுரிமை கோரிய பல தமிழர்கள் தாம் விட்டுச் சென்ற நிலங்களை மீண்டும் பெறுவதையும் கோரிக்கையாக விடுத்து வந்தனர் (இந்த நிலங்களில் பெரும்பாலானவை உயர் பாதுகாப்பு வலயங்களினுள் வந்த பின்னர் இராணுவத்தினால் கைப்பற்றப்பட்டுவிட்டன). மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான அரசாங்கம் தமிழர்களுக்கு இரட்டைப் பிரசாவுரிமை வழங்குவதற்கு மிகவும் ஆர்வம் கொண்டிருந்தது.
23. 2019 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட குடும்ப வருமானம் மற்றும் செலவுக் கணிப்பீட்டின் படி, தோட்டத் துறைக் குடும்பங்களின் (3.7 பேரைக் கொண்டது) வருமானம் மாதத்திற்குச் சராசரியாக 46,865 ரூபாவாக (சுமார் 265 அமெரிக்க டொலர்கள்) இருந்த அதே வேளை, 2019 ஆம் ஆண்டில் நாட்டின் சராசரி மாதாந்தக் குடும்ப வருமானம் 76,414 ரூபாவாகக் காணப்பட்டது (சுமார் 430 அமெரிக்க டொலர்கள்). பார்க்க, *Daily Mirror*, “SL’s Average Household Income Makes Shocking Revelation About Poverty Level,” ஜூன் 13, 2022, https://www.dailymirror.lk/business-news/SLs-average-household-income-makes-shocking-revelation-about-poverty-level/273-238959.
24. அரசாங்க ஊழியர்களுடன் நடத்தப்பட்ட எண்ணற்ற நேர்காணல்களை இந்த எண்ணிக்கைகள் அடிப்படையாகக் கொண்டுள்ளன.
25. Shamindra Ferdinando, “Only Traitors Won’t Accept Urgent Economic Reform Agenda Acceptable to IMF,” *The Island Online*, ஜூன் 1, 2022, https://island.lk/only-traitors-wont-accept-urgent-economic-reform-agenda-acceptable-to-imf/.
26. *Sunday Times*, “35 Years On We Are Still Pleading for Tamil as an Official Language: Sumanthiran,” ஜூன் 27, 2021, https://www.pressreader.com/sri-lanka/sunday-times-sri-lanka/20210627/281655373046289.
27. UNHRC, Report of the Special Rapporteur on Minority Issues on Her Mission to Sri Lanka, January 31, 2017, A/HRC/34/53/Add.3, பந்திகள் 22 மற்றும் 23.
28. International Crisis Group, “Sri Lanka’s Conflict-Affected Women: Dealing With the Legacy of War,” Report No. 289, ஜூலை 28, 2017, https://www.crisisgroup.org/asia/south-asia/sri-lanka/289-sri-lankas-conflict-affected-women-dealing-legacy-war.

29. US Department of State, *2020 Report on International Religious Freedom: Sri Lanka*, மே 12, 2021, Office of Religious Freedom, https://www.state.gov/reports/2020-report-on-international-religious-freedom/sri-lanka/.
30. Annie Banerji, "Sri Lankan Center Condemns Ban on Female Circumcision as 'Affront,'" *Reuters*, ஜூலை 11, 2018, https://www.reuters.com/article/us-sri-lanka-women-fgm/sri-lankan-islamic-center-condemns-ban-on-female-circumcision-as-affront-idUSKBN1K12OZ.
31. David Doyle, "Sri Lanka: Grim Up North for the Tamil Community," 4 News, நவம்பர் 15, 2013, https://www.channel4.com/news/sri-lanka-tamil-north-vanni-human-rights-chogm-rajapaksa; Human Rights Watch, "'We Will Teach You a Lesson': Sexual Violence Against Tamils by Sri Lankan Security Forces," பெப்ரவரி 26, 2013, https://www.hrw.org/report/2013/02/26/we-will-teach-you-lesson/sexual-violence-against-tamils-sri-lankan-security-forces; International Crisis Group, "Sri Lanka's Conflict-Affected Women."
32. CPA, *Confidence in Democratic Governance Index (Wave2): Report*, 4.
33. Ravi P. Rannan-Eliya, "Increasing Numbers of Sri Lankans Want to Migrate, Especially Youth and Disenchanted Government Voters," Sri Lanka Opinion Tracker Survey 2021-01, Institute for Health Policy, நவம்பர் 17, 2021, 4, அணுகப்பட்டது நவம்பர் 21, 2021, http://ihp.lk/publications/publication.html?id=956.
34. இது வள ஒதுக்கீடு என வருகையில், குறிப்பாக உள்ளூர் மட்டத்தில் காணப்படும் ஒரு பொதுவான முறைப்பாடாகும். உதாரணமாக, தமிழர்களும் முஸ்லிம்களும் வாக்களிக்காத காரணத்தினால் மஹிந்த மற்றும் கோதபாய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கங்களுக்குச் சிறுபான்மையினரின் தேவைகளை நிறைவேற்றுவதற்கான எக்காரணமும் இல்லை. ராஜபக்ஷ அரசாங்கங்களில் குடும்ப உறுப்பினர்கள் தீர்மானங்களை எடுப்பதும் நடந்தது (அமைச்சரவைத் தீர்மானங்கள் கூட மாற்றப்பட்டிருக்கின்றன), அரசியல் கருதுகோள்களை அடிப்படையாகக் கொண்டே இவை நடைபெற்றிருக்கின்றன. உதாரணமாகப் பார்க்க, R. Ramesh, "How Equal Is Access to Public Services? The Impact of Sociodemographic Background on Public Service Delivery in Sri Lanka," *Journal of Developing Societies* 37:1 (2020): 7–29.
35. Human Rights Watch, "Sri Lanka: Security Agencies Shutting Down Civic Space," மார்ச் 3, 2020, https://www.hrw.org/news/2020/03/03/sri-lanka-security-agencies-shutting-down-civic-space.
36. Neil DeVotta, "The Genesis, Consolidation, and Consequences of Sinhalese Buddhist Nationalism," இல் *When Politics Are Sacralized: Comparative Perspectives on Religious Claims and Nationalism*, தொகுத்தவர்: Nadim N. Rouhana மற்றும் Nadera Shalhoub-Kevorkian (கேம்பிரிட்ஜ்: கேம்பரிட்ஜ் பல்கலைக்கழக அச்சகம், 2021), 187¬–212.
37. Neil DeVotta, "Sri Lanka's Ongoing Shift to Authoritarianism," *Asia Pacific Bulletin* no. 201 (2013), https://www.eastwestcenter.org/system/tdf/private/apb201_0.pdf?file=1&type=node&id=33932.
38. உதாரணமாகப் பார்க்க, Benjamin Schonthal, "Environments of Law: Islam, Buddhism, and the State in Contemporary Sri Lanka," *The Journal of Asian Studies* 75:1 (2016): 137–56.
39. Nihal Jayawickrama, "Judicial Corruption," *Colombo Telegraph*, பெப்ரவரி 28, 2021, https://www.colombotelegraph.com/index.php/judicial-corruption/.
40. *Sri Lanka Brief*, "Militarized North-East Sri Lanka: Muslim and Tamil Women Systematically Crushed By Lawlessness and Expropriation," மார்ச் 12, 2013, https://srilankabrief.org/militarized-north-east-sri-lanka-muslim-and-tamil-women-systematically-crushed-by-lawlessness-and-expropriation/; International Crisis Group, "Sri Lanka's Conflict-Affected Women."
41. Neil DeVotta, *Blowback: Linguistic Nationalism, Institutional Decay, and Ethnic Conflict in Sri Lanka* (ஸ்டென்போட்: ஸ்டென்போட் யுனிவர்சிடி பிரஸ், 2004).
42. Jayadeva Uyangoda, "Sri Lanka in 2010 Regime Consolidation in a Post-Civil War Era," *Asian Survey* 51:1 (2011): 133; Daily FT, "President Vows to Finish Term, Tells Bloomberg Will Not Run for Re-Election," ஜூன் 7, 2022, https://www.ft.lk/front-page/President-vows-to-finish-term-tells-Bloomberg-will-not-run-for-re-election/44-735842.
43. Neil DeVotta, "Politics and Governance in Post-Independence Sri Lanka," இல் *Routledge Handbook of South Asian Politics: India, Pakistan, Bangladesh, Sri Lanka, and Nepal*, தொகுத்தவர் Paul R. Brass (நியுயோர்க்: ரூட்லெஜ், 2010), 125.
44. Nirupama Subramanian, "When a Dynasty Read the Future," *The Hindu*, பெப்ரவரி 28, 2014, https://www.thehindu.com/opinion/op-ed/when-a-dynasty-read-the-future/article5733363.ece.
45. Tahir Kamran, "Dynastic Politics in South Asia – I," *The News on Sunday*, மே 8, 2022, https://www.thenews.com.pk/tns/detail/955902-dynastic-politics-in-south-asia-i; Angad Singh, "Dynasty and Democracy in South Asia," The Gate, டிசம்பர் 2, 2015, http://uchicagogate.com/articles/2015/12/2/dynasty-and-democracy-in-south-asia/.
46. *The Island Online*, "Restoring Dignity of Legislature," மே 17, 2022, https://island.lk/restoring-dignity-of-legislature/.
47. நடப்புத் தரவுகளின் படி, இலங்கையின் 5.2 மில்லியன் குடும்பங்களில், 3.8 மில்லியன் குடும்பங்களுக்குச் சொந்தமாகத் தொலைக்காட்சிகள் உள்ளன. தொலைக்காட்சி நிலையங்களில் மிகப் பெரும்பான்மையானவை இப்போது தனியாருக்குச் சொந்தமாக உள்ளன. பார்க்க, file:///C:/Users/devottn/Downloads/SSRN-id2910307.pdf ; *Wikipedia*, "Television in Sri Lanka," திகதியிடப்படாதது, https://en.wikipedia.org/wiki/Television_in_Sri_Lanka.
48. East-West Center, "Sri Lanka Media Minister Decries Profit-Driven Nationalistic Coverage in South Asia," *Huffington Post*, ஜனவரி, 19, 2017, https://www.huffpost.com/entry/sri-lanka-media-minister_b_14270406.
49. Kamya Yadav மற்றும் ஏனையோர், "Old Hatreds Fuel Online Misinformation About COVID-19 in South Asia – Bulletin of the Atomic Scientists," *Giant Oak*, நவம்பர் 30, 2020, http://blog.giantoak.com/blog/old-hatreds-fuel-online-misinformation-about-covid-19-in-south-asia; Haaris Mahmud, "Anti-Muslim Hatred: Clouding the Fight Against Corona!," *Colombo Telegraph*, ஏப்ரில் 2, 2020, https://www.colombotelegraph.com/index.php/anti-muslim-hatred-clouding-the-fight-against-corona/; International IDEA, "Taking Stock of Global Democratic Trends Before and During the COVID-19 Pandemic," The Global State of Democracy in Focus, டிசம்பர் 14, 2020, https://www.google.com/books/edition/Taking_Stock_of_Global_Democratic_Trends/t7gZEAAAQBAJ?hl=en&gbpv=1&dq=the+global+state+of+democracy+in+focus&printsec=frontcover.
50. *Vatican News*, "Sri Lanka Church Unhappy About Probe into Easter Bombings," ஆகஸ்ட் 16, 2021, https://www.vaticannews.va/en/church/news/2021-08/sri-lanka-easter-church-bombings-government-probe-faulty-ranjith.html.
51. Sunanda Deshapriya, "National Mainstream Media and Regional Medias 'Contesting Hegemonies' – Trilateral (Linguistic) Media in Sri Lanka," கட்டுரை சமர்ப்பிக்கப்பட்டது SAFHR Regional Workshop, "Sensitizing Media Covering Internal and Inter-State Conflicts," ," நவம்பர் 29– டிசம்பர் 1, 2002, சென்னை, இந்தியா, https://www.cpalanka.org/wp-content/uploads/2007/8/Hegemony_and_Media_in_Sri_Lanka.pdf.
52. CPA, *Confidence in Democratic Governance Index (Wave 2): Report*, 16.
53. CPA, *Confidence in Democratic Governance Index (Wave 2): Report*, 4.

54. OHCHR, “Committee on Economic, Social and Cultural Rights Examines Second to Fourth Periodic Report of Egypt,” நவம்பர் 14, 2013, https://www.ohchr.org/en/taxonomy/term/1321?page=77.
55. Neil DeVotta, “Sri Lanka: Ethnic Domination, Violence, and Illiberal Democracy,” இல் *Civil Society and Political Change in Asia: Expanding and Contracting Democratic Space*, தொகுத்தவர்: Muthiah Alagappa (ஸ்டென்போட்: ஸ்டென்போட் யுனிவர்சிடி பிரஸ், 2004), 292–323.
56. Mahendran Thiruvarangan, “Some Reflections on the Trade Union Action by the FUTA,” *Groundviews*, மே 20, 2011, https://groundviews.org/2011/05/20/some-reflections-on-the-trade-union-action-by-the-futa/.
57. CPA, *Values and Attitudes Survey*, 70–6.
58. பார்க்க, இலங்கைத் தேசிய சமாதான மன்றத்தின் சமாதானத்திற்கான பாதை செய்தி மடல் (https://www.peace-srilanka.org/media-centre/newsletters).
59. US Department of State, *2020 Report on International Religious Freedom: Sri Lanka*; Civicus, “Sri Lanka: Civil Society Subjected to Intensified Military Surveillance and Other Restrictions,” Joint Statement at the 44th session of the HRC, ஜுலை 10, 2020, https://www.civicus.org/index.php/media-resources/news/united-nations/geneva/4518-sri-lanka-civil-society-subjected-to-intensified-military-surveillance-and-other-restrictions; OHCHR, Sri Lanka on Alarming Path Towards Recurrence of Grave Human Rights Violations – UN Report, press release, ஜனவரி 27, 2021, https://www.ohchr.org/en/press-releases/2021/01/sri-lanka-alarming-path-towards-recurrence-grave-human-rights-violations-un.
60. Lia Kent, *Sri Lankan Civil Society in the New Rajapaksa Era: Navigating the Victor's Space*, New Mandala Policy Briefing – SEARBO2, செப்டெம்பர் 2021, https://www.newmandala.org/wp-content/uploads/2021/09/Lia-Kent_SEARBO_Policy-brief-paper.pdf; Priyan Dias, “Of Patriots and Traitors,” Groundviews, செப்டெம்பர் 13, 2018, https://groundviews.org/2018/09/13/of-patriots-and-traitors/.
61. *World Politics Review*, “Why Sri Lanka's Government Is Turning a Blind Eye to Anti-Muslim Violence,” மார்ச் 9, 2018, https://www.worldpoliticsreview.com/trend-lines/24333/why-sri-lanka-s-government-is-turning-a-blind-eye-to-anti-muslim-violence; Kalinga Tudor Silva, “Gossip, Rumor, and Propaganda in Anti-Muslim Campaigns of the Bodu Bala Sena,” in Buddhist Extremists and Muslim Minorities: Religious Conflict in Contemporary Sri Lanka, தொகுத்தவர் John Clifford (ஒக்ஸ்போட்: ஒக்ஸ்போட் பல்கலைக்கழக அச்சகம், 2016), 119–39
62. International Alert, https://www.international-alert.org/sites/default/files/publications/29_section_2_Sri_Lanka.pdf.
63. Aphichoke Kotikula and Jennifer Solotaroff, “Gender Analysis of Labor in Sri Lanka's Estate Sector,” செப்டெம்பர் 22, 2006, https://paa2007.princeton.edu/papers/71572.
64. Ranga Jayasuriya, “Unapologetic Gnanasara Thero of Bodu Bala Sena Threatens to Lead Boycott of Muslim Businesses in Sri Lanka,” dbsjeyaraj.com, ஜுன் 22, 2014 [வலைமனைப் பதிவு], https://dbsjeyaraj.com/dbsj/archives/30994; Minority Rights Group International, “Islamaphobia and Attacks on Muslims in Sri Lanka: Incident Map,” மார்ச் 2013, https://minorityrights.org/publications/islamophobia-and-attacks-on-muslims-in-sri-lanka-march-2013/.
65. இலங்கையில் எண்ணற்ற வியாபாரப் பிரஜைகளுடன் 2012 இற்கும் 2015 இற்கும் இடையில் நடத்தப்பட்ட நேர்காணல்களை அடிப்படையாகக் கொண்டது.
66. IFES, “Democratic Socialist Republic of Sri Lanka,” திகதியிடப்படாதது, https://www.electionguide.org/countries/id/201.
67. *News 1st*, “‘Regret Not Allowing Lakshman Kadirgamar to Be Appointed as PM’: Patali Champika,” டிசம்பர் 25, 2019, https://www.newsfirst.lk/2019/12/25/i-am-sorry-for-not-allowing-lakshman-kadiragamar-to-be-appointed-as-pm-patali-champika/.
68. Country-data.com, “Sri Lanka: Ethnic Composition of the Armed Forces,” திகதியிடப்படாதது, http://www.country-data.com/cgi-bin/query/r-13282.html#:~:text=Christians%2C%20who%20comprised%20about%208,percent%20of%20the%20officer%20corps.
69. தான் நியமித்த தமிழ் நிர்வாகத்தரின் கீழ் சிங்களப் பணித்துறையாட்சியினர் எவ்வாறு வேலை செய்ய மறுத்தனர் என்பது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா மனம் வருந்திக் குறிப்பிட்ட விடயம்.
70. பார்க்க OHCHR, Promoting Reconciliation, Accountability and Human Rights in Sri Lanka - Report of the Office of the High Commissioner for Human Rights, A/HRC/49/9, பெப்ரவரி 25, 2022; OHCHR, Sri Lanka on Alarming Path Towards Recurrence of Grave Human Rights Violations.
71. IFES, “Women's Political Representation in Sri Lanka: Electoral System Analysis and Recommendations,” திகதியிடப்படாதது https://www.ifes.org/publications/womens-political-representation-sri-lanka-electoral-system-analysis-and-recommendations.
72. Index Mundi, “Sri Lanka – GINI Index (World Bank Estimate),” திகதியிடப்படாதது https://www.indexmundi.com/facts/sri-lanka/indicator/SI.POV.GINI.
73. World Bank, “The World Bank in Sri Lanka: Overview,” திகதியிடப்படாதது https://www.worldbank.org/en/country/srilanka/overview#1.
74. CPA, *Confidence in Democratic Governance Index*, 6–10.
75. Madeleine Keck, “Sri Lanka Faces Acute Food Shortages and Starvation Amid Economic Crisis,” *Global Citizen*, ஏப்ரில் 7, 2022, https://www.globalcitizen.org/en/content/sri-lanka-economic-crisis-hunger/.
76. Rannan-Eliya, “Increasing Numbers of Sri Lankans Want to Migrate.”
77. Bilesha Weeraratne, “Repatriation and Replacement of Lost Foreign Jobs: Handling Labour Migration in Sri Lanka During COVID-19,” Talking Economics, மே 14, 2020, அணுகப்பட்டது நவம்பர் 18, 2021, https://www.ips.lk/talkingeconomics/2020/05/14/repatriation-and-replacement-of-lost-foreign-jobs-handling-labour-migration-in-sri-lanka-during-covid-19/.
78. தமிழ்ப் பிரதேசங்கள் சிங்களப் பிரதசங்களை விட மிகவும் வறுமைப்பட்டவையாக உள்ளன. வடகிழக்கில் உள்ள தமிழ்ப் பெண் தலைமைக் குடும்பங்கள் வறுமையினால் மிகவும் பாதிக்கப்பட்டவற்றின் மத்தியில் காணப்படுவதுடன் இவை சிங்களப் பெண் தலைமைக் குடும்பங்களை விட மிக மேசாமானவையாக இருப்பதற்கான எத்தனிப்பினைக் கொண்டுள்ளன. பெருந்தோட்டத் துறையில் உள்ள தமிழ் மக்கள் (பெருந்தோட்டத் தமிழர்கள் அல்லது இந்தியத் தமிழர்கள் என அழைக்கப்படுபவர்கள்) நீண்ட காலமாக வறுமைப்பட்டவர்களாகவும் இலங்கையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் எனும் அந்தஸ்தினைக் கொண்டவர்களாகவும் இருந்து வருகின்றனர், பார்க்க, T. Ramakrishnan, “‘Tamil Areas in Sri Lanka Are in the Pockets of Poverty,’” The Hindu, பெப்ரவரி, 20, 2016, https://www.thehindu.com/news/international/tamil-areas-in-sri-lanka-are-the-pockets-of-poverty/article8258342.ece ; Maneka Jayasinghe, “Dynamic Trends in Household Poverty and Inequality in Sri Lanka: Do Gender and Ethnicity Matter?,” Journal of the Asia Pacific Economy 24:2 (2019): 208–23; The Economist, “A Subset of Tamils Lags Other Sri Lankans by Almost Every Measure,” செப்டெம்பர் 30, 2017, https://www.economist.com/asia/2017/09/30/a-subset-of-tamils-lags-other-sri-lankans-by-almost-every-measure

79. Anila Dias Bandaranaike, “Budget 2021: Playing Ostrich or Parading in the Emperor’s New Clothes?,” Daily FT, ஜனவரி 19, 2021, http://www.ft.lk/columns/Budget-2021-Playing-ostrich-or-parading-in-the-Emperor-s-new-clothes/4-711788.
80. நாட்டின் மிக மோசமான நிதி நெருக்கடியினையும் பொருட்படுத்தாது, “அரச ஊழியர்களையோ அல்லது இராணுவத்தினையோ எம்மால் குறைக்க முடியாது” என ஜனாதிபதி கோதபாய ராஜபக்ஷ கூறுவதற்குக் காரணம் இவ்வாறான பேரினவாதத்திற்கான கடப்பாடேயாகும். As quoted in Daily FT, “President Vows to Finish Term, Tells Bloomberg Will Not Run for Re-Election.”
81. World Bank, Sri Lanka: Ending Poverty and Promoting Shared Prosperity: A Systematic Country Diagnostic, Report No. 103246 (வாஷிங்டன்: புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி மற்றும் உலக வங்கி, 2015), https://documents1.worldbank.org/curated/en/363391467995349383/pdf/103246-SCD-P152526-PUBLIC-NON-BOARD-VERSION-SriLankaCompleteFinal-122515lr-2.pdf.
82. Sandya Hewamanne, “Invisible Bondage: Mobility and Compulsion Within Sri Lanka’s Global Assembly Line Production,” *Ethnography* (2021): 1–21.
83. Sandya Hewamanne, Restitching Identities in Rural Sri Lanka: Gender, Neoliberalism, and the Politics of Contentment (பிலடெல்பியா பிஏ: பென்சில்வேனியா பல்கலைக்கழக அச்சகம், 2020).
84. IFC, *Realizing Sustainability Through Diversity: The Case for Gender Diversity Among Sri Lanka’s Business Leadership* (வாசிங்டன்: ஐஎப்சி, 2019), https://www.ifc.org/wps/wcm/connect/c6cbb7b1-54e5-44f1-893f-6deae41440dd/The_Case_Gender_Diversity_Among_Sri_Lanka_Business_Leadership.pdf?MOD=AJPERES.
85. Sa Sarah Thanawala, “An Epidemic of Land Grabs in Sri Lanka,” *Global Human Rights Defence*, பெப்ரவரி 15, 2022, https://ghrd.org/an-epidemic-of-land-grabs-in-sri-lanka/?utm_source=rss&utm_medium=rss&utm_campaign=an-epidemic-of-land-grabs-in-sri-lanka; C.V. Wigneswaran, “Land Grabbing – The Real Pandemic for the Tamils in Sri Lanka,” *Colombo Telegraph*, செப்டெம்பர் 25, 2021, https://www.colombotelegraph.com/index.php/land-grabbing-the-real-pandemic-for-the-tamils-in-sri-lanka/.
86. ICRA Lanka, “2022 SL Budget Appropriation Bill: Initial Observations,” ஒக்டோபர் 13, 2021, https://www.icralanka.com/research/2022-sl-budget-appropriation-bill-initial-observations/#:~:text=Covid%20Disease%20Control.-,Total%20expenditure%20allocation%20on%20education%20contracts%20by%20LKR%206%20Bn,by%20nearly%20LKR%203%20Bn.
87. Methmalie Dissanayake, “Dilemma in Online Education Exposes Sri Lanka’s Social Inequality,” *ULearn*, ஜூன் 20, 2021, https://www.ulearn.life/Dilemma-in-Online-Education-Exposes-Sri-Lankas-Social-Inequality.php
